# பன்முகப் பார்வையில் அ. சிதம்பரநாதர் படைப்புகள்

இராம. குருநாதன்

UG 7218

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# பன்முகப் பார்வையில்
# அ. சிதம்பரநாதர் படைப்புகள்

(செந்தமிழ்க் காவலர் டாக்டர்
அ. சிதம்பரநாதன் செட்டியார் நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் இராம. குருநாதன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்–613 010

ISBN : 978-81-7090-445-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் - 402

| | | |
|---|---|---|
| நூல் | : | பன்முகப் பார்வையில் அ. சிதம்பரநாதர் படைப்புகள் |
| ஆசிரியர் | : | முனைவர் இராம. குருநாதன் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு - ஏப்பிரல் 2014<br>திருவள்ளுவராண்டு 2045 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| தாள் | : | டிஎன்பிஎல் மேப் லித்தோ 18.5 கிலோ, |
| பக்கம் | : | 98 |
| படிகள் | : | 500 |
| விலை | : | உ ரூ. 90.00 |
| அச்சு | : | கே. ஆர். பிரிண்டர்ஸ், தஞ்சாவூர் |


ROJI'S SARASVATHI MAHAL LIBRARY SOCIETY THANJAVUR
07 FEB 2019

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

# அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகம் நூல்கள் வெளியிடும் பணியைத் தன் தலையாய பணியாக மேற்கொண்டு வருகிறது. ஏனெனில் நிகழ்கால அறிவுச் செல்வங்களை அடுத்தடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வல்லமை நூல்களுக்கே மிகுதியும் உண்டு. அந்த வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இதுவரை 470-க்கு மேற்பட்ட அரிய நூல்களை வெளியிட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகத் தற்போது பன்முகப் பார்வையில் அ. சிதம்பரநாதர் படைப்புகள் எனும் இந்நூல் வெளிவருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள செந்தமிழ்க்காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் நினைவு அறக்கட்டளை சார்பில் பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இந்நூலாக மலர்ந்துள்ளது.

அ.சி. எனச் சொன்னால் பேராசிரியர் அ. சிதம்பரநாதன் செட்டியார் என அறிஞருலகம் மதித்துப் போற்றும் அளவிற்குத் தமிழாற்றலும் நுண்மாண் நுழைபுலமும் நிருவாகத் திறனும் வாய்க்கப் பெற்றவராக அ.சி. திகழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய இப்பெருந்தகையிடம் பயின்று பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கியோர்-விளங்குவோர் மிகப்பலர். இப்பெருமகனாரின் தமிழ்ப் பணி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும்.

இத்தகைய பெருமகனாரின் செம்மாந்த வாழ்வு, தமிழ்ப் பற்று, புலமை நுட்பம், மொழிபெயர்ப்புக் கலை பற்றியெல்லாம் பேராசிரியர் இராம. குருநாதன் அவர்கள் அழகுற எடுத்துரைத்துள்ளார்.

அ.சி. அவர்களை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டியுள்ள நூலாசிரியர், இந்நூல் வெளிவருவதில் ஆர்வம் காட்டிப் பணியாற்றிய இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் இரா. முரளிதரன் ஆகியோரைப் பாராட்டி மகிழ்கிறேன்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்வும் பணியும் | 01 |
| 2. | தமிழ்ப் பற்று | 09 |
| 3. | புலமை நுட்பம் | 21 |
| 4. | எள்ளலுக்கோர் இலக்கண நூல் | 35 |
| 5. | யாப்பியல் ஆய்வு | 38 |
| 6. | சிதம்பரநாதரின் மொழிநடை | 45 |
| 7. | பல்வகைப் பார்வை | 53 |
| 8. | மொழிபெயர்ப்புக் கலை | 65 |
| 9. | கவிதை முயற்சி | 83 |
| 10. | ஒப்பியல் உணர்வு | 87 |

# 1. வாழ்வும் பணியும்

"என்னை நான் அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். நான் நிமிர்ந்து நிற்கிறபொழுது என்னுடைய என்னுடைய உயரத்தைக் கணக்கிட்டால் ஐந்தடி அடி பதினோரு அங்குலம் இருக்கும். என்னுடைய மார்பு சாதாரணமாக மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறபொழுது முப்பத்திநான்கு அங்குலம் இருக்கும். வீங்கி மூச்சினை இழுக்கும்பொழுது முப்பத்தாறரை அங்குலம் இருக்கும். என் கழுத்தின் சுற்றளவு பதினைந்தரை அங்குலம். என் உள்ளங் கையைத் தொட்டுப் பார்த்தீர்களேயானால் மிக்க மென்மை உடையதாக இருக்கின்றதைக் காண்பீர்கள். காரணம் கையினாலேயே செய்யக்கூடிய கொல்லுத் தொழில், தச்சுத்தொழில் போன்ற தொழில்களைச் செய்யும் பழக்கம் இல்லாமல் இருப்பதும், சோற்றை எடுத்து உண்பதற்கும், நூல்களைப் புரட்டுவதற்குமே அதனை அதிகம் பயன்படுத்தி இருப்பதும் ஆகும். ஆனால், என்னுடைய புறக்கையைத் தொட்டுப் பார்த்தாலோ கடினமான எலும்புகள் இரும்புபோல் இருப்பதை உணர்வீர்கள்.காரணம் கொஞ்சம் கொஞ்சம் உடற் பயிற்சி செய்து உடலை ஓம்பி இருப்பதாகும். எனக்கு மீசையோ, தாடியோ இல்லை. உங்கள் தலையைப் போன்றே என் தலையும் கிராப்பு செய்யப்பட்டுள்ளது. உங்களைக் காணுகிறபொழுது- நீங்கள் செயல் ஆற்றுகின்றதை உற்றுநோக்குகின்றபொழுது என் உள்ளத்தில் எழுகின்ற *எண்ணங்களை உங்கள் முன் கூற விழைகிறேன்.''யார் முன்னிலையில் இவ்வாறு பேசமுடியும்? எந்தச் சூழலில் பேசமுடியும்? தம் எதிரே அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளான பார்வையற்ற (பூவிருந்தவல்லி) பள்ளி மாணவர்களின் முன்னிலையில் - அவர்கள் புறக்கண்ணால் காணுதற்கு இயலா நிலையில் தம்மைப் பற்றி அகக்கண் கொண்டு அவர்கள்*

*தம் புறத்தோற்றத்தைக்* கற்பனை செய்து கொள்ளட்டும் என்று பேசிய இப்பேச்சுக்குரியவர் செந்தமிழ்க் காவலர் அ.சிதம்பரநாதர் ஆவார்.

**தோற்றப்பொலிவு**

இயற்கையாகவே அ.சி.யின் நிறம் முகத்தோற்றம் ஆகியன பொலிவும், அழகும் மிக்கன. எனினும், அவர் மேலும் புறத்தோற்றத்தில் தம்மை அழகுபடுத்திக் கொள்வதை விரும்பியவர். காரணம் தமிழ் ஆசிரியர்கள் மதிக்கப்படவேண்டும் என்பதே. ஆறடி உயரமுடைய எடுப்பான தோற்றம் கொண்ட அவர், உடலோம்பல் குறித்துப் பாரதியார் கருத்தினைப் போற்றியவர் எனத் தெரிகிறது. புதிய ஆத்திசூடியில், யௌவனம் காத்தல் செய், ரசத்திலே தேர்ச்சி கொள், ரூபம் செம்மை செய், லாவகப் பயிற்சி செய் என்று பாரதி கூறிய வரிகளில் தம்மைப் பிணித்துக் கொண்டவர் எனலாம்.

''இளமையைப் பாதுகாக்க வேண்டும் என்று முகத்தையும், உடலையும் அழகுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று பாரதி நினைத்தார். அழகை வழிபடும் பெற்றி வாய்ந்தவர் பாரதியார் என்று சொல்வது புனைந்துரை ஆகாது'' என்று அ.சி எடுத்துக்காட்டியிருப்பது மட்டுமன்றி அவர் தம்மை அழகுபடுத்திக்கொள்வதில் அக்கறை உடையவர் என்பதையும் உணர்த்தும். அ.சியின் மாணவர்களில் ஒருவரான வ.சுப. மாணிக்கம்,''பேராசிரியர் சிதம்பரனார் ஆண்டவன் தமக்குக் கொடுத்த அழகினை மேலும் அழகுபடுத்திக் கொள்ள விரும்பினார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மறைமலை அடிகள் அ.சி.யைப்பற்றிச் சுட்டியபோது, “இவரனைய பேரழகும் அறிவு நலமும் ஒருங்கே அமையப் பெற்ற ஒருவரை யாம் யாண்டும் கண்டிலேம்'' என்று சொல்லியதை ஈண்டு நினைவு கூரலாம்.

“அ.சி. உடையணியும் தோற்றம், நடைத்தோற்றம், அமர்ந்து பாடம் நடத்தும் தோற்றம் ஆகியவற்றைக் கண்டோர் அவர்தம் அழகு நாட்டத்தை உடன்படுவர்'' என அவருடைய மாணவரான முனைவர் பேராசிரியர் கோ.சிவகுருநாதன் தெரிவிப்பர்.

**கல்லூரி மாணவர் / பேராசிரியர் பணி**

அ.சிதம்பரநாதர் (1907-1967) தம் கல்வியாலும் உழைப்பாலும் முன்னேறிய பேராசிரியப் பெருந்தகை ஆவார். அவர் ‘தென்னிந்தியாவின் கேம்பிரிட்ஜ்’ என்று போற்றப்பட்ட குடந்தை அரசினர் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் பயின்றவர். அங்கு மாணவர் தலைவராக இருந்தவர். அவர் அப்பொறுப்பேற்கும் முன் எல்லா அறிக்கைகளும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டு வந்தன. பல எதிர்ப்புகளுக்கிடையே அறிக்கைகளைத் தமிழில் எழுதி மாணவரிடையே தமிழ் உணர்வை வளர்த்தவர். அன்றைய நாளில் மிகச்சிறந்த தமிழறிஞர்களாகத் திகழ்ந்த தமிழவேள் உமா மகேசுவரனார், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் போன்றோரை அழைத்துவந்து பேசச் செய்துள்ளார்.

அ.சி. இளங்கலைத் தமிழ் படித்து, மாநிலத்தில் முதன்மையாகத் தேறி, பிராங்களின் கெல், ஜி.யூ போப் நினைவுத் தங்கப்பதக்கங்களைப் பெற்றார். பட்டம் பெற்ற பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், சிறிதுகாலம் தலைமைச்செயலகத்திலும் எழுத்தராகப் பணிபுரிந்தார். அதன் பின், சென்னையிலிருந்த அரசு முகமதியக் கல்லூரியில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். அக்கல்லூரி முதல்வர் ஈ. டபிள்யூ. கிரின் என்பார் இவரது

ஆங்கிலப் புலமை அறிந்து ஆங்கில வகுப்பினையும் எடுப்பிக்குமாறு அன்புடன் பணிக்க. அக்கல்லூரியில் மூன்று ஆண்டுகள் பணியாற்றி விட்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயிலத் தொடங்கினார். அங்கு மாணவராகச் சேர்ந்தபோது. தமிழ்ப் பேரவைத் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வந்தபோதெல்லாம் அவருக்கு ஆங்கிலத்தில் வரவேற்புமடல் வாசிக்கப்படுவது வழக்கம். மாயூரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் காந்தியடிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அம்மடல் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டது. காந்தியடிகள் அவரவர் மொழியில் வரவேற்பு வழங்குவதையே விரும்பியவர். அவர் பேசிய போது."நீங்கள் உங்கள் தாய் மொழியிலேயே வரவேற்பினை வாசித்திருக்கலாமே. ஆங்கிலத்தில்தான் வாசிக்கவேண்டுமா? எனக்கு உங்கள் மொழி புரியாமல் இருக்கலாம். அதனால் என்ன? எனக்குத் தமிழ் சொல்லிக்கொடுத்தால் கற்றுக் கொள்கிறேன். இனி வரவேற்பு அளிப்பதாயின் அது உங்கள் தாய்மொழியிலேயே அமையட்டும். ஆங்கிலத்தில் வேண்டுமானால் அதனை மொழி பெயர்த்துக்கொள்ளலாம்". என்று சொன்னதை அறிந்தோ என்னவோ. காந்தியடிகள் ஒரு சமயம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் பேசவந்தபோது. மாணவர் தலைவராக இருந்த சிதம்பரநாதர் தமிழிலேயே காந்தியடிகளுக்கு வரவேற்பிதழைப் படித்தளித்தைக் காந்தியடிகள் விரும்பி ஏற்றார் என்று அறிகிறோம். அந்த நிகழ்ச்சியின் போது. மேடையில் அமர்ந்திருந்தவர் அ.சி.யின் ஆசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார். அந்த நிகழ்வின் பொழுதுதான் நாட்டு விடுதலை நலனுக்கான தம் பங்களிப்பினைச் செலுத்துவதற்கு. நாவலர் துணைவியார் தமது கைகளில் அணிந்திருந்த பொன் வளையல்களை அளித்தார் என்பதனை அ.சியின் வாழ்க்கைக் குறிப்பிலிருந்து அறிகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைத் தேர்வில் முதன்மை இடம் பெற்ற சிதம்பரநாதர். அரசினர் கல்லூரியில் விரிவுரையாளராக மீண்டும் பொறுப்பேற்றார். அவரது திறனை அறிந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்போது துணைவேந்தராக இருந்த சீனிவாச சாத்திரியார். அவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியுமாறு வேண்டிக்கொள்ளவே. பேராசிரியர் பணியை அப்பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டார்.

மாணவர்களிடையே மிகுந்த செல்வாக்குப்பெற்றவராய்த் திகழ்ந்த அ.சி. அங்கு விடுதியின் காவலராகவும் இருந்துள்ளார். திருமணம் ஆன சூழலிலும் கூடத் தம் கடமையை ஆற்ற இரவுப் பொழுதில் மாணவர் விடுதியைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிடுவார். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் மாணவர் ஒருவர் அ.சியைப் பார்த்து "நீங்கள் இளைஞர். மேலும் அண்மையில் திருமணம் ஆனவர். இந்த நேரத்தில் இங்கு வரலாமா? விரைவில் இல்லம் செல்லுங்கள்" என்று உணர்த்தியிருக்கிறார். அ.சி அந்த மாணவரைப் பார்த்துக் கோபம் கொள்ளாது, ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றார். அப்படி அவரிடம் வினவிய மாணவர், பின்னாளில், பொதுவுடைமைக்கட்சியின் தலைவராக இருந்த பாலதண்டாயுதம் ஆவார்.

பல்கலைக்கழக மாணவர்களை அழைத்துக்கொண்டு அ.சி சிற்றுலா செல்வது வழக்கம். அவ்வாறு ஒரு சமயம் காஞ்சிக்குச் சுற்றுலா செல்லும் போது. காஞ்சியில் அண்ணாவின் இல்லத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மாணவர்களுக்கு மிக்கு

இருந்திருக்கிறது. அவர்களின் முகக் குறிப்பறிந்து அவர்களை அண்ணாவின் இல்லத்திற்கு அழைத்துச் சென்று மாணவர்களை மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைத்தார். மாணவர்களை அன்பால் கட்டுப்படுத்துவார் என்பதனை அவருடைய மாணவர்களில் ஒருவரான பழ. நெடுமாறன் பதிவு செய்துள்ளார். பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்குப் பண உதவியும் அவ்வப்போது செய்துவந்துள்ளார். விடுதி மாணவர்கள் பணம் இல்லா நிலையில் அவர்கள் சொந்த ஊருக்குச் செல்வதற்கு அ.சி பணம் கொடுத்து அனுப்புவதும் உண்டு. அ.சி மாணவர்களில் ஒருவரான தடயவியல் அறிஞர் முனைவர். ப.சந்திரசேகரன். அண்ணாமலையில் படித்த காலங்களில் அவருடைய தந்தையார் பணம் அனுப்பத் தாமதமானால். சந்திரசேகரன் அ.சி.யின் இல்லத்திற்குச் சென்று கேட்பதுண்டு. அவரும் இன்முகத்தோடு பணம் தந்ததுண்டு. ''கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்கமாட்டார். நாங்கள்தான் நன்றியோடு திருப்பித் தந்துவிடுவோம்''. என்று தமது மாணவர் பருவத்து நினைவுகளைப் பதிவு செய்துள்ளார் சந்திரசேகரன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பழ. நெடுமாறன் பயின்ற போது அவரைத் தமது அறைக்கு அழைத்திருக்கிறார் அ.சி. செய்யாத குற்றத்திற்காகப் பழ. நெடுமாறனிடம் துணைவேந்தர் கருத்திற்கிணங்க ஒரு மன்னிப்புக்கடிதம் கோரியிருக்கிறார் அ.சி. பழ. நெடுமாறன் அ.சி யிடம்.''ஐயா!நீங்கள் எதைச் சொன்னாலும் செய்யத் தயார். எதிரே இருக்கும் குளத்தில் விழுந்து உயிரை விடு என்று சொன்னாலும் செய்யத் தயார். ஆனால். நான் செய்த குற்றம் என்ன எனச் சொன்னால். எழுதித் தருகிறேன்''என்றார். அ.சி உடனே.''ஆமாம். நீ என்ன குற்றம் செய்தாய் என்று துணைவேந்தரும் சொல்லவில்லை; நானும் கேட்கவில்லை'' என்று சொல்லிவிட்டு ஓ என இடிச் சிரிப்புடன் சிரித்தாராம் அ.சி. அந்தச் சிரிப்பினை நெடுமாறன் 'வெள்ளைச் சிரிப்பு' என்று தம் மலரும் நினைவுகளை என்னிடம் பகிர்ந்துகொண்டதுண்டு.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேரறிஞர் அண்ணா அ.சி. தலைமையில் பேசியுள்ளார். அ.சி. தமது தலைமை உரையில். 'பேராசிரியப் பெருமக்களே. மாணவச் செல்வங்களே. தமிழ்வளம் காக்கும் நல்லோரே! இதுநாள் வரை என்பேச்சு உங்களுக்குத் தேனென இனித்தது. நீங்கள் என்பால் வைத்திருக்கும் அன்பே அதற்கு முதற்காரணம். ஆனால் இன்றோ என்பேச்சு உங்களுக்கு இனிக்காது. ஏனெனில் இன்று புரட்சியின் சிகரம் அறிஞர் அண்ணாதுரை பேச இருக்கிறார். நீங்கள் எல்லோரும் அவர் பேச்சைச் சுவைத்து இன்புறக் காத்திருக்கிறீர்கள். நானும் உங்கள் உணர்விலேயே மகிழ்வுடன் காத்திருக்கிறேன். தமிழுக்குத் தூணாக விளங்கும் புரட்சியின் சிகரத்தைப் பேச அன்புடன் அழைக்கிறேன்.'' என்று பேசினார். அண்ணா சொற்பொழிவினை ஆற்றத் தொடங்கிய போது. ''நண்பர் சிதம்பரநாதர் என்னைச் சிகரம் என்றார். நன்றாகப் பாருங்கள்.! நானோ மனிதனின் சராசரி உயரத்தைவிடச் சற்றுக் குள்ளமானவன். அவரைப் பாருங்கள். எவ்வளவு நெடிதுயர்ந்த தோற்றம். அவரைச் சிகரம் எனல் தகும். ஆம் அவர்தான் உண்மையில் புரட்சியின் சிகரம்'' என்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சீனிவாச சாத்திரியார் அரங்கில் நிகழ்ந்த பட்டமளிப்பு விழாவில் நிகழ்ந்த நிகழ்வு இது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அ.சியிடம் பயின்ற மாணவர்கள் பலர் தமிழகத்தில் தலைசிறந்த அரசியல் தலைவர்களாகவும். பேரறிஞர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். இரா. நெடுஞ்செழியன். க. அன்பழகன். பழ. நெடுமாறன். கீ. வீரமணி. மதியழகன். பூவராகன். வ.சுப.மாணிக்கம். தனிநாயக அடிகள். வ.அய்.சுப்பிரமணியன். கா.மீனாட்சிசுந்தரம். ச.அகத்தியலிங்கம். செ.வை.சண்முகம்

இராம.இராமநாதன். சோ.ந.கந்தசாமி. இராம.சுந்தரம். ஜான்மார். சிற்பி.பாலசுப்பிரமணியன் முதலியோர் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## துணைவேந்தராக..............

அ.சி தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1942 இல் பல்கலைக்கழகம் வழியே ஆய்வேடு அளித்துத் தமிழில் முதன் முதலாக ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர் என்ற பெருமைக்குரியவரானார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடைக்காலத் துணைவேந்தராகவும் இருந்து தமிழ்ப் பேராசிரியர்கள் ஆட்சி வல்லமையிலும் தடம் பதிப்பவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். 1948 ஜூலை முதல் ஐந்து திங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்தார். கல்வித் துறை சார்ந்த பல்வேறு அமைப்புகள் மற்றும் இலக்கியக் கழகங்கள் ஒன்றிணைந்து விழா எடுத்தன. பாராட்டு விழாவிற்குத் தலைமை ஏற்றவர் முதுநிலை ஆசிரியர் திரு. திருவேங்கட நாயனார். அ.சி யின் ஆட்சித் திறத்தைப் பாராட்டிப் பேசியதோடு காலந் தவறாமையைக் கடைபிடிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர் என்று கூறியுள்ளார். அ.சி நன்றி தெரிவித்துப் பேசும்போது.'' துணைவேந்தர் பதவி எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. மாணவர்களிடம் நெருங்கிப் பழகும் இனிய சூழலையும். இலக்கியங்களைப் பயிலும் வாய்ப்பினையும் நான் இழந்தேன். என் எதிரில் மேசை மீது கோப்புகள் நிறைந்து கிடக்கின்றன. அவற்றைப் படித்துக் கையொப்பமிடும் இயந்திரமாகவே நான் இருக்கிறேன். எனினும் இப்பதவியை நான் ஏற்றுக்கொண்டது ஏனெனில், ஒரு தமிழாசிரியருக்கு நிருவாகத் திறமையும் உண்டு என்பதைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டதே என்பதற்காகத்தான்'' என்று சொல்லியுள்ளமை நினைத்தற்குரியது என்பதோடு தாம் ஒரு தமிழாசான் என்ற பெருமித உணர்வு அவர்பால் இருந்ததை அறிகிறோம்.

## மேலவை உறுப்பினராக.........

அ.சி. சென்னை மாநில மேலவைத் தேர்தலுக்குப் போட்டியிட நேர்ந்தது. அதுவும் நண்பர்கள் சிலர் அ.சி. மேலவைக்கு நிற்கவேண்டும் என விரும்பியதும் அதற்கு ஒரு காரணம். அண்ணாமலைப் பல்கலைக் கழக மேலிடத்திற்கு மடல் எழுதி அவர்களின் இசைவுக்காகக் காத்திருந்தார். ஆயின் மறுமொழி எதுவும் அவர்களிடமிருந்து வராத சூழலில் தம் பேராசிரியர் பதவியினின்றும் விலகித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இரு முறை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றினார். அக்காலங்களில் அ.சி. சட்டமன்றத்தில் ஆங்கிலத்தில் உரையாற்றுவது வழக்கம். இவரது ஆங்கிலப் பேச்சினை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த டாக்டர். அ. இலட்சுமணசாமி முதலியார் வெகுவாகப் பாராட்டியதுண்டு. மேலவை உறுப்பினராக இருந்தபோதுதான் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்கு ஆதரவு தந்து அதனைச் செயற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தினார். இதற்கு ஆதரவுக் குரல் கொடுத்தவர் மேலவை உறுப்பினர்களில் ஒருவரான அப்துல் வகாப் ஆவார். 1964 இல் நிகழ்ந்த மேலவைக் கூட்டத்தில் இக்கருத்து முன்வைக்கப்பட்டது. அறிஞர் அண்ணா ஆட்சி பதவி ஏற்ற 1967இல் இது நிறைவேறியது தமிழர்க்கு மகிழ்ச்சி அளித்தது.

மாநிலத் தமிழாசிரியர் கழகத்தலைவராக இருந்து தமிழாசிரியர்களுக்கு ஆக்கம் தேடித்தரக் காரணமாக இருந்தவர்களில் அ.சி.யும் ஒருவர்.

## பன்னாட்டுப் பயணம்

வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று தமிழ் மொழியின் பெருமையைப் பரப்பிய புகழுக்கு உரியவர் அ.சி. இது தொடர்பான ஒரு கருத்தைப் பதிவு செய்யலாம். கிண்டி தொழிற்பேட்டையில் பல ஆண்டுகளுக்கு முன் பொங்கல் விழா நிகழ்ந்த சமயம். பேராசிரியர் க.அன்பழகன் தலைமை தாங்க, அ.சி. ''வள்ளுவர் வந்தார்'' என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். அ.சி. தமது உரையில், ''வள்ளுவர் வந்தார். அவரை ஒரு தொழிற் கூடத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு ஒவ்வொரு பிரிவும் மிகச் செம்மையாகச் செயற்பட்டது. தொழிலக உரிமையாளர் தமது அறையில் அமர்ந்து கோப்புகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். வள்ளுவரும் நானும் உள்ளே நுழைந்தோம். அவர் வரவேற்று அன்பாகப் பேசினார். நான் அவரைப் பார்த்துக் கேட்டேன்.'' எப்படி இவ்வளவு ஒழுங்காகத் தொழிலகம் நடைபெறுகிறது?''அவர் சொன்னார்.''வள்ளுவம்தான் அதற்கு வழி அமைத்துத் தந்தது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்று வள்ளுவர் சொன்ன நிர்வாக இயலைக் கடைபிடித்து அதற்கு ஒப்ப மேலாளர்களை வேலைகளுக்கு அமர்த்தினேன். அதன் விளைவுதான் தொழிலகம் ஒழுங்காகச் செயற்படக் காரணம்'' என்றார். வள்ளுவம் இங்கே வாழ்வு பெறுகிறது என்று அவரிடம் சொல்லிவிட்டு நகர்ந்தேன். அ.சி. மீண்டும் பேச்சினைத்தொடர்ந்தார். குடும்ப வாழ்வு, கல்வித்துறை, அரசியல் களம் அத்தனை இடங்களிலும் வள்ளுவம் வாழ்வு பெறுவதைக் காட்டி மகிழ்ந்தேன். இவ்வளவும் நடந்தது நனவில் அன்று. கனவில்'' என்று விளக்கம் தர அவையோர் அவரது பேச்சைக் கேட்டுத் திளைத்தனர். பின்னர் பேசிய க.அன்பழகன்.''வள்ளுவர்எங்கள்பேராசிரியரிடம் வந்தார். தப்பித்தார். என்னிடம் வந்திருந்தால் நான் வள்ளுவம் வாழ்வு பெறாத இடங்களுக்குச் சென்று காண்பித்திருப்பேன். சிதம்பரநாதரை நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும். ஆம். அவரை நாடு கடத்த வேண்டும். அவர் ஆங்கிலத்தில் மிகுந்த புலமையாளர்; தமிழின் பெருமையை, உயர்வை, சிறப்பை வெளிநாட்டார் அறிய பேராசிரியர் அ.சி யை வெளிநாடுகளுக்கு நாம் அனுப்பி வைக்க வேண்டும்'' என்று பேசி அவையை மகிழ்விக்கச் செய்தார். அன்பழகனாரின் எண்ணம் நிறைவேறும் வகையில் அ.சி வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்றார். இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து, எகிப்து, உருசியா முதலியமேலைநாடுகளுக்கும், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற கீழை நாடுகளுக்கும் சென்று தமிழ் முழக்கம் செய்த முதல் தமிழ்ப்பேராசியர் அ.சி. .

பிரிட்டீஷ் கவுன்சில் அழைப்பின் பேரில் இங்கிலாந்து சென்றபோது, அவருக்கு ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றத்தார் வழியனுப்பு விழா நடத்தினர். அப்போது, பாராட்டு மடல் ஒன்று வாசித்தளித்தனர். அதில்,''ஷேக்ஸ்பியர் ஈன்ற சீமை, இன்று செந்தமிழ்ச் சிற்பி ஒருவரை அன்புடன் அழைத்திருக்கிறது. அங்கே ஆங்கிலேயருக்குத் தமிழ்ப் பெருமையை அறிவுறுத்திப் பல ஜி.யு 'போப்' களும், 'கால்டுவெல்' களும் தோன்றுவதற்கு வழியமைத்து, வெற்றியுடன் மீள்க'' என்று வாழ்த்தினர். 21. 01. 1955 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும் வழியனுப்பு விழாவினைச் சிறப்புற நடத்தினர்.

வெளிநாட்டில் குறிப்பாக இங்கிலாந்தில் ஒரு பெரிய விருந்தில் அ.சி கலந்துகொண்டபோது, அங்கு அவருக்குப் பல்வகை உணவுகளோடு நூடில்ஸ் இருந்தது. அதனை கையால் எடுத்துச் சாப்பிடுவது சுலபமன்று. அதற்கு வழங்கப்பட்டிருக்கும் குச்சிகளைக்கொண்டுதான் சாப்பிட முடியும். தட்டில் இருந்த நூடில்ஸைக் குச்சியில்

லாவகமாக எடுத்து உண்ட விதத்தைப் பார்த்து ஆங்கிலேயர் வியந்து அவரை இங்கிலாந்திற்கு எத்தனை முறை வந்திருக்கிறீர்கள் என்று கேட்டனராம். அ.சி அவர்களுக்கு வெளிநாடு செல்வது அதுவே முதன் முறை. அவர் எந்த வெளிநாட்டுக்குச் சென்றாலும், அந்த நாட்டுப் பண்பாட்டினையும், பழக்க வழக்கங்களையும், பிற நடைமுறைகளையும் அறிந்து செல்வது வழக்கம். எனவேதான் இங்கிலாந்தில் அவர் நண்பர்களிடையே இவர் இந்நாட்டிற்குப் பல முறை வந்திருக்கிறார் போலும்' என எண்ணவைத்தது.

வெளிநாட்டுக்குப் பலமுறை சென்றிருப்பினும் அ.சி அந்த அனுபவங்களைத் தனி நூலாக எழுதவில்லை. சில இதழ்கள் அவரிடம் கேட்டு வாங்கிக் கட்டுரைகளாக வெளியிட்டன. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் சில கல்லூரிகள், நூலகங்கள் முதலான கல்விசார் நிறுவனங்களைப் பற்றியும், தூய்மையான இருப்பிட வசதிகள், எல்லாவற்றிலும் ஒழுங்கு நடைமுறைகள், மக்களின் வாழ்வு முறைகள் பற்றியும் கட்டுரைகள் சில எழுதியுள்ளார். 'எனது மேல்நாட்டு அனுபவம்', 'இங்கிலாந்தில் நான் கண்ட அறிஞர்கள்.' 'லண்டனில் இந்திய ஆபிசு நூல் நிலையத்தில் சில மணி.' 'பிரிட்டன் பல்கலைக்கழகங்கள்' முதலிய கட்டுரைகள் தமிழ் நாடு இதழிலும், பிற இதழ்களிலும் வெளிவந்தன.

## அகரமுதலி தந்த புகழ்

அ.சியைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தொகுக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி அவருக்குக் கிடைத்திருக்கும் நீடித்த புகழுக்குரியதாக இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. அதனைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி என்று அழைக்கப்படாமல் 'செட்டியார் அகராதி' என்று வழங்கப்படுவது அவருக்குப் புகழ் சேர்க்கிறது.

அ.சி ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியத்திற்குத் தலைமைப் பதிப்பாளராக இருந்து குறித்த காலத்திற்கு முன்பே அப்பணியை முடித்த பின்னர், திரு. கருமுத்து செட்டியாரின் அழைப்பின்பேரில் மதுரை தியாகராய கல்லூரியில் தம் இறுதிக் காலத்தில் அக்கல்லூரியின் முதல்வர் பணி ஏற்றார்.

## நூலாக்கங்கள்

தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சு வன்மை மிக்கவராகத் திகழ்ந்த அவர், பேச்சாற்றலில் ஆர்வம் காட்டி வந்தமையால் எழுத்துத் துறையில் இறங்கி எழுதிய நூல்கள் குறைவே. எனினும், அந்த நூல்களின் செய்திகள் இவரைச் சிறந்த தமிழறிஞர்களில் ஒருவராக அறிந்து கொள்ளப் போதுமானவை; இவரின் ஆழ்ந்த புலமைக்கும் அகன்ற அறிவுத் திறத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பவை அவை. பழமை இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த நாட்டங் கொண்ட அவர், புத்திலக்கியங்களிலும் ஆர்வங்காட்டி வந்தவர். சிறுகதைகள் சில எழுதிப் பார்த்தவர்; கவிதைகள் சிலவற்றையும் தீட்டியவர்; நாட்டுப்புறப் பாடல்கள் பலவற்றைச் சேகரிப்பதிலும் ஈடுபாட்டுணர்வோடு செயல்பட்டவர். அ.சி எழுதியுள்ள கட்டுரைகளில் காணக்கிடைக்கும் செய்திகள் தமிழுணர்வு உடையோர்க்கு அளப்பருங்கொடை எனலாம். பழந்தமிழ் இலக்கியத்தை ஆங்காங்கே புகுத்தித் தம் கருத்துகளையும், இலக்கியஉணர்வினையும் நடைத் திறத்தையும் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கினை அவர் எழுதி யுள்ள நூல்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்தியசரித்திரமாலை (1930)
கட்டுரைக்கொத்து (1933)
பெரியார்மன்றோ (1933)
முன்பனிக்காலம் (1951)
உழைப்பால் உயர்ந்த ஒருவர்
(புக்கர் தி வாஷிங்டன் (1952)
தமிழோசை (1956)
தமிழ் காட்டும் உலகு (1957)
வீட்டுத் திருமகள் (1958)
மன்னுயிர்க்கு அன்பர் (1958)
சிறுகதைக்களஞ்சியம் (1959)
ஒத்தெல்லோ (1964)
இளங்கோவின் இன்கவி (1972)
செங்கோல் வேந்தர்(1977)

இவை தவிர ஆங்கிலத்திலும், தமிழிலுமாகப் பல கட்டுரைகள் தமிழ் / ஆங்கில இதழ்களில் வெளிவந்துள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1941 இல் அவர் செய்த முனைவர் பட்ட ஆய்வேடு தமிழ் யாப்பியல் உயராய்வு (Advanced Studies In Tamil Prosody) நூல் வடிவம் பெற்றுள்ளது.

அவர் எழுதியுள்ள கட்டுரை நூல்கள் சிலவே. அவையும் கூடப் பாடநூலுக்குரிய தலைப்புகளைக் கொண்டமைந்த நூல்களாகவே தொகுக்கப்பட்டிருப்பதனை அறியலாம். இளங்கோவின் இன்கவி என்பதும் கூடப் பெரும்பான்மையான தலைப்புகள் சிலம்பு குறித்த கட்டுரைகளாக இருக்க, இறுதி நான்கு கட்டுரைகள் வெவ்வேறு வகையினவாய் அமைந்துள்ளன. வீட்டுத் திருமகள் என்ற நூலில் அமைந்துள்ள கட்டுரைகளில் ஓரிரு கட்டுரைகளைத் தவிரப் பெரும்பான்மையும் மொழித் தொடர்பானவையாகவே உள்ளன. சங்க இலக்கியம் என்றோ அல்லது சிலப்பதிகாரம் என்றோ அன்றித் திருக்குறள் என்றோ ஒரு பொருள் குறித்த நூலாக எந்நூலும் அமையாமை எண்ணுதற்குரியது. வெவ்வேறு கால கட்டங்களில் எழுதிவந்துள்ளவை நூல் வடிவமாகியுள்ளன. அ.சி யின் நூல்களை வெளியிடவேண்டும் என்று நினைத்த பதிப்பகத்தாரின் செயற்பாடாக இருந்திருக்க வேண்டும் என்பதையே இவை போன்ற சூழ்நிலைகள் காட்டுகின்றன.

# 2. தமிழ்ப்பற்று

## மொழியுணர்வும் மொழியாராய்ச்சியும்

தமிழர்கள் தாய்மொழிப்பற்று மிக்கவர்களாய்த் திகழ வேண்டும் என்று கருதியவர் அ.சி. செந்தமிழ்க்காவலரின் பேச்சு வன்மை துணிவானது. எதற்கும் பிறக்கிடாத இயல்பினது. என்பதற்கு. ''மறைமலையடிகள் தமிழும் ஒரு தமிழா?'' என்று ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் இகழ்ந்துரைத்தபோது. அதனை மேடையிலேயே கண்டித்து. ''மறைமலையடிகள் தமிழும் தமிழா என்று கேட்பவன் ஒரு தமிழனா? என்று உரத்து முழங்கிய நிகழ்ச்சியை அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

அ.சி மாணவராக இருந்த காலத்தே எழுதப்பட்ட கட்டுரை உலகின் நாகரிக ஊற்று என்பதாகும். அறிவுவழி நின்றும். தம் மொழியின்பால் உணர்ச்சிவயப்பட்டும் உருவாகிய அக்கட்டுரையில் தமிழன் தோன்றிய நிலமே மன்னுலகில் முதல் நிலம் என்பதற்கான சான்றுகளை அடுக்கிக் கூறுகிறார். தமது ஊகத்தின் அடிப்படையிலும். சில சூழலில் அறிவியல் அடிப்படையிலும் அமைந்துள்ளது அக்கட்டுரை. பண்டைத் தமிழர் வாழ்ந்த நிலமே உலகில் மாந்தரினம் தோன்றிய முதல் நிலம் என்பதற்கான கருதுகோளை முன்னிறுத்தி எழுதப்பட்டுள்ளது.

> முதல் உயிர் தழைத்தது தென்னிந்தியாவில்தான். முதலுயிர் தழைத்தவிடத்தே நாகரிகமும் முதலிற்பிறந்தது என்று சொல்வதுதான் முறை. அதுதான் தகுதி. அதுதான் உண்மை. தென்னிந்தியாவில் மக்கள் தோன்றிய பின்னரே வட இந்தியாவில் மக்கள் தோன்றினார்கள். இதனுண்மை வெப்ப மண்டலப் பகுதியைப்பற்றி முற்கூறியதிலிருந்து தெரியவரும். பாணர் மரபு தமிழகத்திலிருந்து தொடங்கி உலகெங்கும் பரவிக்கலை நாகரிகம் இவற்றைப் பரப்பியதோடு ஆங்காங்கே குடியமைத்தார்கள்

என்று குறிப்பிட்டுள்ளார். அ.சி யின் கட்டுரையில், பாண்டியர், சோழர் பாணர்களோடு சென்று உலக நாடுகளில் குடியேறினர் எனத் தெரிவிப்பர். பாண்டியர் குடியேறிய நாடே எகிப்து என்றும், சோழர் குடியேறிய நாடே சால்டியா என்றும், பாணர்களுடைய நாடே பொனீசியா என்றும் குறிப்பிட்டிருப்பது எண்ணிப்பார்க்கத்தற்குரியது. தமிழ் நாடே உலக நாகரிகத்தின் ஊற்று என அ.சி அறுதியிட்டுக் கூறுவது ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியது. சற்றே மிகையாகவும் தோற்றுகிறது.

தமிழின் சிறப்பைப் பேராசிரியர் அ.சி அவர்கள் மொழியியல் வழியும், இலக்கியச் சான்றுகள் வழியும் அழகுற விளக்குவர். தமிழ் மொழியால் பிறரை ஆக்கவும் அழிக்கவும் செய்யலாம் என்ற கருத்தை வலியுறுத்த, நக்கீரர் வாழ்வில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் பழம்பாடல் ஒன்றனை எடுத்துக்காட்டி, விளக்குவதால் அறியலாம். தமிழையும், தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைத்த கனக விசயர்களைக் கல் சுமந்துவரச் செய்த செங்குட்டுவனின் ஆற்றலையும் வியந்து அதனை மொழிப்பற்றுக்கும் நாட்டுப்பற்றுக்கும் உரிய வெளிப்பாடாக்கித் தம் தமிழ்ப்பற்றை எடுத்துக் காட்டுகிறார்.

இலக்கண வரம்பில்லாத ஏனைய மொழிகள் போல் இழிவாக எண்ணக்கூடிய நிலையில் தமிழ் இல்லை என்பதனைப் பரஞ்சோதியின் பாடல் வழியே விளக்குவர். பொருளறிய மாட்டாத வடமொழிப் பாடல்களைக் கூறுதலைக் காட்டிலும் பொருள் நுட்பத்தோடு நன்றாக அறிந்து கொள்ளக்கூடிய தமிழ்மொழிப் பாடல்கள் எந்தளவிற்குச் சிறந்தவை என்பதனைத் தக்க காரணங்களோடு உணர்த்துவர்.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் தமிழ்த்தாய் வாழ்த்திற்குரிய விளக்கத்தை மொழியாராய்ச்சி வாயிலாக விளக்கமாக உரைத்திருக்கும் பாங்கினை அறிய அ.சி யின், மொழிப்பற்று நன்கு விளங்கும். சுந்தரனார் கூறியுள்ள,'கனஞ்சடை என்று உருவேற்றிக் கண் மூடிக் கதறுவரோ' என்ற அடிகளை எடுத்துரைத்தும், சிதையா உன் சீரிளமைத் திறம்' என்பதற்குரிய விளக்கத்தை விரிவாகக் கூறியும் தம் கருத்தை வெளிப்படுத்தியிருக்கும் திறன் போற்றுதற்குரியது. தம் கருத்திற்கு அரணாகத், தமிழைப்பற்றி கால்டுவெல் கொண்டிருந்த கருத்தோடு ஒப்பிட்டுத் தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்துவர். வடமொழியின் சுவடு படியாத தமிழின் பெருமையைக் காட்டுவதிலேயே அவர் முனைப்புக்கொண்டுள்ளதை மொழியன்னை என்ற இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

இக்கட்டுரையின் ஒரு பால்,'கன்னடமும் களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும் உன்னுதரத்து உதித்தெழுந்து' என்பதனை விளக்கப்புகும் அ.சி.'' தேன் போன்றினிய மொழி என்று இயம்பப்படுந் தெலுங்கிற்குக் களி யென்றஅடைமொழியும், மலையும் ஆழமுமாய்த் தோன்றி எழிலொடு விளங்குமொரு நாட்டின் கண்ணே வழங்கும் மொழியாகிய மலையாளத்திற்குக் கவின் என்ற அடைமொழியும் வைத்துப் பாவினை அவர் யாத்து நினைக்குந் தொறும் இன்பம் பயப்பது' (த.ஓ.பக்.21)என்று சுந்தரம் பிள்ளையின் அடைமொழிச் சொல்லிற்கு விளக்கமளித்துள்ள கருத்து, அ.சி யின் திராவிட மொழியின் தனித்தன்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

பேராசிரியர் மொழிநூல் பயிற்சி மிக்கவர் என்பதனை அவர் மொழி குறித்து எழுதிய பல கட்டுரைகளிலிலிருந்து தெளியலாம். மொழி என்பது ஒரே மாதிரியாக இராது. காலத்திற்குக் காலம் வேறுபடுவது. அதனைப் பின்வருமாறு தெரிவிப்பர்;

செந்தமிழ் என்பது தெளிவுடையதாய். இனியதாய். கருத்துக்குப்பொருந்துவதாய். சொல் வேறுபாட்டு நயமுடையதாய் அமைந்திருக்கிறது எனின். அதற்கு முக்கிய காரணம் நல்ல நூலாசிரியர்கள் நூல் எழுதியதும். அவரைப் பலர் பின்பற்றியதும் ஆம். பேசுவதுபோலவே எழுதவேண்டும் என்று தமிழில் எதிர் பார்ப்பது ஆகாது. சீனதேசத்து அதிகாரியின் மொழி சீனப் பேச்சுமொழியிலிருந்து வேறுபட்டிருப்பது போலவே. எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் தமிழில் சிறிதுவேறுபட்டிருக்கத்தான் செய்யும். இது வசை அன்று. பிரெஞ்சுப்பத்திரிகைகள் சென்ற நூற்றாண்டில். இலக்கணப் பிரெஞ்சினைப் பாதுகாத்ததைப்போலத் தமிழகத்திலும் இலக்கணத்தினின்றும் வழுவாத தமிழைப் பாதுகாக்கப் பல பத்திரிகைகள் முன்வரவேண்டும். நல்ல நூல்களில் செந்தமிழை எதிர்பார்ப்பது இயற்கை. அது பொதுமக்கட்குப் புரியாதே எனக் கருதி நடையைத் தாழ்த்தினால் விரைவில் இன்னும் தாழ்த்தப்படவேண்டிய நிலை ஏற்படும். எனவே. தாழ்ந்து போவதற்கு எல்லை இராது. பேசுகின்றவாறே எழுதிக்காட்ட வேண்டிய உரையாடல் பகுதிகள் நிறைந்த நாடகங்கள். நவீனங்கள். இவையல்லாத புத்தகங்களிற் செந்தமிழ் கைக்கொள்ளப்படவேண்டும். செந்தமிழ் என்பது தானாக வளரவேண்டுமே ஒழிய. கட்டுப்படுத்தி இவ்வாறு இருக்கவேண்டும் என்று வற்புறுத்தமுடியாது. அரசியற் செல்வாக்கு. பொருளாதாரச் செல்வாக்கு. சமூகச் செல்வாக்கு. எழுத்தாசிரியர் செல்வாக்கு ஆகிய காரணங்களால் செந்தமிழ் காலத்திற்குக் காலம் வேறுபடும் என்பது உறுதி (த.ஓ.42-43)

எனக்கூறி மொழி நடையின் காலமாற்றத்தை எடுத்துக்காட்டுகிறார்.

தமிழ்ச்சொற்கள் வடமொழியில் புகுந்திருப்பதும். வடசொற்கள் தமிழில் வழங்கிவருவதும் மொழிக்குரிய பண்டமாற்றமாகவே கருதப்படும். மொழிகள் கடன் வாங்குவது இலக்கண மரபு. இக்கருத்தினை வலியுறுத்தியும். கால்டுவெல். குண்டர்ட் ஆகியோர் கருத்துகளை எடுத்துக்காட்டியும் வடமொழிக்குச் சென்றிருக்கும் தமிழ்ச் சொற்களை விளக்குவர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு எழுதியிருக்கின்ற ஒரு சூத்திரவுரையில் தமிழ்ச் சொற்கள் வடமொழியில் சென்று சேரமாட்டா என்ற சேனாவரையர் கருத்தைக் கண்டித்துள்ளார் அ.சி.

'தமிழ்ச் சொல் வடபாடைக்கண் செல்லாது என்பதும். வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொது என்பதும் சேனாவரையரின் கருத்து. இக்கருத்து. தவறானது என்கிறார் அ.சி. இதனைப் பதிமூன்றாம் நூற்றாண்டினை ஒட்டிய காலத்தில் இருந்த கருத்தாக மாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டும்' என்பது பேராசிரியரின் எண்ணம். அகத்தி. அகில். அம்பா. அரவிந்தம். கடகம். கவடு. கலை. கவசம். கானம். குழல். கூவல் முதலிய தமிழ்ச் சொற்களை இலக்கண நீர்மையோடு பொருத்திக்காட்டி அவை தமிழிலிலிருந்து வட மொழிக்குச் சென்றதைச் சுட்டுகிறார். இதனால்தான் போலும் அன்றே அ.சி கூறியது வருங்காலத்திற்கும் பொருந்துவதாகவே இருக்கிறது. அவர் கூறுகிறார்

இக்காலத்திலும். பல தமிழ்ச்சொற்களை வடமொழியினின்று வந்தவையெனக்குறிப்பிடும் தமிழன்பர்களும் தமிழறிஞர்களும் இருக்கிறார்கள். தமிழ் என்பதே திராவிடம் என்ற சொல்லின் திரிபு எனச்சொல்லித் தம்முள் மகிழும் தமிழன்பர்களும். பிழை. யாழ் முதலிய அருந்தமிழ்ச்சொற்களெல்லாம் வடமொழியினின்று தமிழுக்கு வந்தன எனக்கூறி மகிழும் தமிழ் அறிஞர்களும் இருக்கிறார்கள்...

தமிழ்ச்சொற்களில் பல பழங்காலத்திலிலேயே வடமொழிக்குச் சென்று வடமொழி போன்று உருவம் பெற்றுவிட்ட காரணத்தால், பொதுவாக வடமொழியிலிருந்து தமிழுக்குப் போந்தவை என மக்களால் பிறழ உணர்ந்தபடி இருந்து வருகிறது. (த.ஓ.பக் 46) என அ.சி தம் புலமைக்கணைகளால் சிலரது கருத்துகளைத் தகர்க்கிறார். வடமொழியில் தமிழ்ச்சொற்கள் என்ற இக்கட்டுரையின் இறுதியில் ஆசிரியர் தம் கருத்தினைக் கீழ்க்காணுமாறு தெரிவிப்பதனை எண்ணிப் பார்ப்பது நன்று.

பல்வேறு சொற்கள் தமிழிலிலிருந்து வடமொழியில் ஏறி இருந்தாலும்,எடுத்துக் காட்டுவாரற்று இருத்தலாலும், எடுத்துக்காட்டலுறுவாரை ஏளனம் செய்வார் உளராதலாலும் உண்மை வெளிப்படாமல் மாசு படிந்துகிடக்கிறது. இம்மாசினை நீக்கும் நாள் எந்நாளோ? (த .ஓ ப. 53) என்று கழிவிரக்கத்தோடு கூறுகிறார். மேலும் அவர் தமிழ் எந்தச் சூழலிலும் வடமொழிக்குக் கடப்பாடுடையதன்று என்ற கருத்தை ஆணித்தரமாக நிறுவுவர். தமிழ் தனக்கே உரிய தனித்தன்மை பெற்றது. கருத்துகளைத் தெரிவிப்பதற்கு உரிய சொற்களைக் கொண்டுள்ளது. அடிப்படைக்கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வடமொழிக்கோ பிறமொழிக்கோ அது கடப்பாடு உடையது அன்று. தமிழ் சமற்கிருதத்தினின்று தோன்றிய மொழி என்று கூறுவது அறவே பொருந்தாது என்று விளக்குவர்.

எல்லாம் வடமொழியிலிருந்துதான் தோன்றியது என்ற கருத்தைத் தக்க காரணங்களோடு அ.சி மறுத்துரைப்பர். இன்றும் கூடச் சிலர் அறியாமையின் காரணமாக வடமொழியில் இருந்துதான் தமிழ் மொழி உருவானது என்று 'வக்கணை'யாக எடுத்துரைப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட பிறழ்வான கருத்துகள் இன்னும் நம்மை விட்டு அகல வில்லையே என்ற வருத்தம் மிகவே செய்யும். .

## தமிழ்மொழிக் கல்வி

இது குறித்து ஆழ்ந்த பல கருத்துகள் இன்றைய நாளுக்குப் பொருந்தி வருவனவாயும், பின்பற்றத்தக்கனவாயும் இருத்தல் கண்கூடு. தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய கருத்துகளைப் பல சூழல்களில் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். அ.சி அவர்கள் கூறியிருக்கும் தாய் மொழிக் கல்வி குறித்த சிந்தனையைச் சீர்தூக்கிப் பார்ப்பது நன்று.

> தாய்மொழி வழியாகக் கற்பித்தால் பாடங்கள் நேரே உள்ளத்தோடு ஒட்டுகின்றன என்பது யாவரும் ஒப்ப முடிந்த உண்மை.வேறொரு மொழி வாயிலாகக் கற்றுக்கொள்வதில் உள்ள கடுமை, கால நீட்டம் ஆகியவை தாய்மொழி வழியாகக் கற்றுக்கொள்வதில் இல்லை.......... ஆங்கிலமொழி என்பது நம் வீட்டிற்கு வெளியேயிருந்து காற்றையும், ஒளியையும் நல்கக் கூடிய சாளரம் என்று வைத்துக்கொண்டாலும், நம் வீட்டின் அடிப்படையான கல், சுண்ணாம்பு முதலியவை தமிழாகவே இருத்தல் வேண்டும்.
> (த.ஓ.ப. 61-62)

என்ற கருத்தினை எண்ணிப்பார்த்துச் செயற்படுத்துவது தமிழர் கடன். வடமொழி இந்திய மொழிகளுக்குத் தாய் என்று கருதுவோரை எண்ணி அதன் வழியாக இந்தியா முழுமையும் கல்வி கற்பித்தால் என்ன என்பதனை எண்ணிப்பார்த்து, 'அம்மொழி வாயிலாகக் கற்பிக்கவேண்டுமென்றால் இந்தியாவில் எழுத்தறியாமையை விலைகொடுத்துவாங்குகிறோம் என்பது பொருள்'. இந்திய மக்கள் அனைவரும் ஒருமொழி வழியாகக் கற்பது நல்லது என்றால், அதை விட நல்லது உலக மொழியாகிய ஆங்கிலம்

வழியே கற்றல். இந்தி நம் தேசமொழி என்ற அன்பு காரணமாக அதன் வழியே படித்தல் நல்லது என்றால் தமிழ் என்தாய் மொழி என்ற பேரன்பு காரணமாக அதன் வழியே நான் படிப்பேன் எனக்கூறும் தமிழ்மகன் குறைகூறத் தக்கான் அல்லன்' (த.ஓ ப.65) என்ற கருத்தினை வன்மையாகத் தெரிவிப்பர். தாய்மொழி வழியாக உயர்தரக்கல்வி அளிக்கமுடியும் என்பது அவரது உறுதியான கருத்தாகும்.

## தமிழில் வழிபாடு

தருமை ஆதினம் அ.சி.க்குச் செந்தமிழ்க் காவலர் பட்டம் அளிப்பதாகத் தெரிவித்தது. மடாதிபதிக்கு மடல் வழியே. ஆதினக் கட்டுப்பாடு தம் சுயமரியாதைக்கு ஊறு நேராத வகையில் அந்நிகழ்ச்சி அமையுமானால் அதற்குத் தாம் இசைவதாகத் தெரிவித்து. தாம் விழைந்த வண்ணம் இசைவு மடல் வந்த பிறகே ஆதினம் சிறப்புச் செய்வதை ஏற்றுக்கொண்டார். 28. 8. 1955 இல் ஆதினம். தமிழவேள் பி.டி. இராசன் தலைமையில் செந்தமிழ்க் காவலர் பட்டத்தை அ.சி.க்கு வழங்கியது அன்றைய நாள் விழாவில் அ.சி. இறைவனை வழிபடுவதற்குரிய மொழி பற்றிய தம் ஆழ்ந்தகன்ற கருத்தினை வெளியிட்ட அருமை நினைவிற் கொள்ளத்தக்கது. தமிழ்மொழி வழியாகத் தமிழ்நாட்டுக் கோயில்களில் வழிபாடு இயற்றினால் இறைவர் ஏற்றுக்கொண்டு அருள்புரிவார் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

'குற்றாலத்தில் உள்ள திருத்துருத்திக் கோயில் இறைவனுக்குச் சொன்னவாறு அறிவார் என்று பெயர். சொன்னவாறு அறிவார் என்றால். மக்கள் எந்தெந்த மொழியில் சொன்னாலும் அந்தந்த மொழியிலே அறியும் ஆற்றல் பெற்றவர் கடவுள் என்பது கருத்து. தமிழில் சொன்னால் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று அவர் சொல்லமாட்டார்.'

'தமிழுக்கு இறைவனை அழைப்பிக்கும் ஆற்றல் உண்டு. 'அவனை அணுகுதற்குரிய அன்பு உண்டு. அபிராமப் பட்டர் அந்தாதி பாடியபோது. அவருக்காக அம்பிகை அமாவாசையை முழுநிலா நாளாக ஆக்கவில்லையா? என்று கேட்கிறார். கண்ணப்ப நாயனார் இரண்டாவது முறையும் தன் கண்ணை எடுத்துக் காளத்தி இறைவனுக்கு அப்ப இருக்கையில் 'நில்லு கண்ணப்பா' என்று தமிழில்லல்லவா இறைவன் கூறுகிறான். இதைத்தானே சேக்கிழாரும் சொல்லிச் செல்கிறார் என்று கருத்துரைக்கும் அ.சி.'தமிழர் ஒருவர் தாம் அறிந்த மொழியில்கடவுளைப் பற்றிச் சொல்வது உளத்தோடு ஒட்டுவதால் அகமும் புறமும் மலருகின்றன' என்று கருத்துரைப்பது இன்றுள்ள சூழ்நிலையைத் தெற்றென விளக்கும்.

கடவுளுக்கு இறைவழிபாடு அவரவர் மொழியில் நடந்து வருவதனை மேனாட்டுக் கிறித்தவ ஆலயங்களில் நிகழும் நிகழ்ச்சிகளோடு ஒப்பிடுகிறார். தமிழ்மொழி மீது அவர்க்கு இருந்த ஈடுபாட்டினை நன்கு அறிய மேலே சுட்டிக் காட்டப்பட்டவை சான்றுகளாகும்.

## மொழியும் கடவுளும்

*'ஒன்றே கடவுள்' என்ற கொள்கையில் கருத்தூன்றிய அவர், இறைவன் பற்றிய கருத்தினை மொழியுணர்வோடு பொருத்திப் பார்த்து ஆராய்ந்து தம் கருத்தினை வெளிப்படுத்தவும் தயங்கவில்லை. அவர் கூறுவதாவது :*

ஒரு மொழியைக் கடவுள் உண்டாக்கினார் எனக் கூறுவது உபசாரமாகவே அன்றி உண்மையாக அன்று. ஒரு மொழியினர் பிற மொழியினரை விஞ்ச விரும்புகின்றவராய்க் கட்டிய கதை (மு.ப.கா.ப. 111) எனவும்,

தமிழ்மொழியைச் சிவபெருமானோ,முருகப்பெருமானோ ஒரு சம்புடத்தில் அடைத்து அல்லது சுவடிகளில் எழுதித் தந்துவிட்டார் என்பது போன்று கூறப்படுகின்ற கருத்து ஒவ்வாது (த.ஓ.ப.119)

எனவும் கூறியிருப்பதிலிருந்து மொழியைக் கடவுள் படைத்தார் என்று கூறுவார் கருத்தினை அவர் ஏற்கவில்லை எனத்தெரிகிறது. இதனால் அவர் கடவுள் மறுப்பாளர் என்றும் கூறிவிட முடியாது. நாட்காலையில் தில்லை நடராசரை வணங்கும் இறைப்பற்றாளர் அவர். எனினும், பெருவிழாக்காலங்களில் கூட்டம் திரளாக அக்கோயிலில் கூடும்போது அவர் அந்தச் சூழ்நிலையில் வழிபட விரும்பார். அதற்கு அவர் கூறிய விளக்கம், 'கடவுள் உருவத்தைப் பெருங்கூட்டத்தில் காண்பது முன்நிற்பவனது முதுகுப்புறமேயன்றி மூர்த்தியினுடைய திருக்கோலமன்று' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இரா. இராகவையங்கார் எழுதிய குறுந்தொகை விளக்கம் என்ற நூலுக்கு அளித்த ஆராய்ச்சி முன்னுரையில் முருகன் பற்றி முன்னவரின் கருத்தை மறுத்துரைக்கையில் அ.சி கொண்டிருக்கும் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

கடவுள் வாழ்த்தாகிய பெருந்தேவனார் பாடலில் 'நெடுவேற் சேவலங்கொடியோன் காப்ப' என்ற தொடரால் முருகன் ஒரு கையில் வேலும் மற்றொரு கையில் கோழிக்கொடியும் கொண்டமை கூறுமுகத்தான் அப்பெருமானது இரு கையையுடைய சாத்துவீகத் திருமேனியே இப்பாடலில் குறிப்பிடப்பட்டதென விளக்கவந்த ஐயங்கார் அவர்கள் இவ்வடிவு வடமொழியிற் குமார தந்திரத்திற் கூறப்பட்டதென்றும், இவ்வடிவமைத்து வழிபடுதல் நன்றெனக் குமார தந்திர பெருந்தேவனாரும் முருகன் வேலுங் கோழிக்கொடியும் உடைமை குறித்தார் என்றும் கூறுகிறார்கள் (குறுந்தொகை விளக்கம் (பக் xii) என்ற கருத்தை அ.சி ஏற்கவில்லை. 'முருக வழிபாடு தமிழகத்தில் தொன்மையான வழிபாடு.வடநாட்டில் வடமொழியாளரால் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்படாத இயல்பினதாம் என்று மறுத்திருப்பதோடு,' ஒரு முகமும் இரு கைகளுமுடைய முருகன் திருவுருவமே சங்க காலத்திற்கு முன்னுள்ள பழைய வடிவம். இளங்கோவடிகள் காலத்து இப்பழைய வடிவம் மக்களால் மறக்கப்படும்படி பிற்றைநாளிற் புராணங்களில் சொல்லப்பெற்ற ஆறுமுகத் திருமேனியே பொதுமக்கள் வழிபாட்டில் இடம் பெறத் தொடங்கியது' (பக். xiii ) என்றும் எழுதுவர். சங்கஇலக்கியச் சான்று வழி ஒரு முகமும் இரு கைகளும் கொண்ட முருகக் கடவுளையே தமிழ் மக்கள் ஏற்றனர் என்பதற்குரிய சான்றினைக் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி, இரவில் கையில் ஒளிரும் வேலுடன் வந்த தன் தலைவனைக் கண்டு முருகனோ என ஐயுற்ற சூழலை விளக்கித் தமிழ் முருகன் ஒரு முகமும் இருகைகளையும் உடையவனாகவே இருந்திருக்கிறான் என்று நிறுவியுள்ள கருத்து ஏற்கத்தக்கதாக இருக்கிறது.

*இலக்கியத்தில் கடவுள் பற்றிய கொள்கையில் அ.சி ஒரு சமத்துவ நிலைப்பாட்டை* மேற்கொண்டவர் எனவும் தெரிகிறது. கடவுளைக் குறித்த கருத்தில் ஓர் ஒருமையைக் காண அவர் மனம் விழைந்துள்ளது. இதனை அவர் கூறிய வகையில் எடுத்துரைக்கலாம். தமிழ் காட்டும் உலகு என்ற கட்டுரையில்,

> கடவுள் ஒரு பேரொளியாக இருக்கிறார் என்று வைத்துக்கொண்டால் அவரிடத்திலிருந்து பல கதிர்கள் நமக்குக் கிடைக்கின்றன என வைத்துக் கொள்வோமானால், அதன்படி பலகதிர்களும் முடிவில் ஒரே இடத்தைச்சுட்டிக்காட்டுதல் போல.முடிவில் கடவுள் ஒருவரே என்பது வற்புறுத்தப்பட்டதாகிவிடும். கடவுள் ஒருவர் என்ற அடிப்படையில்தான் நாம் எல்லாம் அவர் மக்கள் என்ற கருத்து வலுத்து நம்முள் ஒற்றுமை மனப்பான்மை வளர்தல் இயலும்.
> (த.கா.உ.ப.6)

எனத் தெரிவிப்பர். இதிலிருந்து அவர் கடவுள் கொள்கையில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்;' என்ற கருத்திற்கு உடன்பட்டவர் எனத் தெரிகிறது. இதன் அடிப்படையில்தான் பாரதி பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும்போது அவர், 'பல சமயத்தவரும், பல வருணத்தவரும் எனச் சொல்லப்படுபவரும் வணங்கும் கடவுள் முடிவில் ஒன்றே என்பது பாரதியாரின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது' என்று பாரதியின் உள்ளத்தை நாட்டு முன்னேற்றம் என்ற கட்டுரையில் விரித்துரைப்பர். அக்கட்டுரையின் இறுதியில்,

> கடவுள் ஒருவரே என்ற கருத்து இக்காலத்திற்குக் கட்டாயம் வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில் தான் மக்கள் எல்லோரும் பிறப்பினால் ஒத்தவர் என்ற எண்ணம் வலியுறும் இவ்வெண்ணம் துணையாகத்தான் சமுதாய வளர்ச்சி ஏற்படும். சமுதாய வளர்ச்சியே நாட்டு முன்னேற்றத்தின் உயிர்(த.கா. உ. ப. 21)

எனக் காட்டுகிறார். மக்களின் ஒருமை உணர்வை இவ்விதத்தில் நோக்கி இருப்பது இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உள்ளிட்டதாகவே கருதமுடிகிறது. அக்காலத்தில் தமிழாசிரியர்களைப்பற்றி ஒரு கருத்து இருந்து வந்தது. அவர்கள் கடவுள் மறுப்பாளர்கள் என்பதே அது. அன்றைய ஆட்சியில் இருந்தவர்கள் அப்படித்தான் நினைத்தார்கள்.

அன்றைய பேராயக் கட்சி அமைச்சர் ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அப்போது, அ.சி தமது உரையில், அமைச்சரின் கருத்திற்கு மறுப்புத் தெரிவித்துப் பேசினார். தமிழாசிரியர்கள் மாணவர்களுக்குத் திருக்குறள் சொல்லிக் கொடுப்பவர்கள். கற்றதனால் ஆன பயன் இறைவனைத் தொழுதலே என்று கற்பிக்கும் ஆசிரியர்கள் கடவுள் மறுப்பாளர்களாக இருப்பார்களா? யாராவது ஒரு தமிழாசிரியர் கடவுள் நம்பிக்கை அற்று இருப்பார்கள் அதற்காகத் தமிழாசிரியர் அனைவரையும் ஒட்டுமொத்தமாகக் கடவுள் மறுப்பாளர்கள் என்று கருதிவிடக்கூடாது'' என்று அமைச்சர் முன்னிலையில் தம் துணிந்த கருத்தை முன் வைத்துப் பேசியவர் அ.சி.

## சொல்லாராய்ச்சி

தமிழில் சொல்லும் பொருளும் பற்றிய ஆராய்ச்சி சுவையானது. ஆழ்ந்தும் அகன்றும், ஆய்ந்தும் காணத்தக்க கருத்துப் புதையலாக இருப்பது. அ.சி அவர்கள் சில சொற்களின் வேறுபாட்டை நுட்பமாகக் கண்டுரைத்திருப்பது எண்ணிப்பார்க்கத்தக்கது.பாணர் என்போரைப் பற்றிப் புதுவிளக்கம் காட்டுவர். நிலத்தைப்

பண்படுத்துவோரைப் பாணர் எனக் கருதலாம் என்றுரைப்பர். அதற்கான காரணத்தையும் விளக்கியுரைப்பர். ஐயர், பிள்ளை, செய்யுள், நெய், தண்ணீர் முதலான சொற்களின் பொருளை விளக்கும்போது அவருடைய நுண்மாண் அறிவினை அறியலாம்.

ஐ என்பது தலைமை பற்றிய தமிழ்ச்சொல். அதற்கு இலக்கிய இலக்கண வழக்கு உண்டு. அ.சி அவர்கள் இதனை நுணுகி நோக்கி வடமொழி இலக்கண நூலின் துணையோடு தம் கருத்தினைத் தெரிவிப்பர்.

> ஐயர் என்ற சொல் ஆர்ய என்ற சொல்லின் திரிபு என்பார் கூற்று அடாது. ஆரியச் சொல்லில் ஐ என்னும் பகுதியே இல்லை என்று சொல்லிவிட்டு, அச்சொல்லின் தாதுவாகக் கருதப்படுவது'போ'அல்லது 'ஓடு' என்னும் பொருள்படும்'ரு' என்பதாகும். 'யத்' என்பது அதன் சாரியை. எனவே, ரு+யத்= ஆர்ய ஆனதற்கு விதி பாணிணீயத்தில் சொல்லப்பட்டுள்ளது. அங்ஙனம் இருப்பவும் தாதுப்பொருளால் ஒவ்வாதிருக்கின்ற ஐயர் என்ற சொல்லைத் தமிழின் மூலகாரணம் என்று சொல்லுதல் ஒலி ஒப்புமையால் மொழியிலக்கண முடிபு காட்ட முற்படுவோரது அறிவு பழுதுபட்டுள்ளமையைக் காட்டும் (த.ஓ.81)

இதுபோலச் சொல்லாராய்ச்சியினை ஆராய்ந்து கூறும் இலக்கண நுட்பத்தினை மொழி பற்றிய கட்டுரைகளில் காணலாம். எழில், அழகு ஆகிய இரு சொற்கள் பற்றிய கருத்தினை விளக்கும் போது இரண்டும் ஒன்றன்று எனத் தெரிவிக்கிறார்.

> எழில் என்னும் சொல் அழகினை உட்படுத்தும். ஆனால் அழகு என்று சொல்லவேண்டிய இடங்களில் எல்லாம் எழில் என்று சொல்லிவிடக்கூடாது.அழகாயிருக்கும் இந்த உறுப்புக்கள் மேன்மேலும் அழகு பெறும் நிலையில் இருக்கின்றன என்று சொல்லுமிடத்தில்தான் எழிலை வழங்க வேண்டும். பதினைந்து வயதுடைய பெண்ணின் தோளைப்பற்றிப் பேசும்போது எழில் உடைத்தோள் என்று சொல்லலாம். ஐம்பது வயதுடைப் பெண்டிருடைய தோள் அழகாய் இருந்தாலும் எழிலுடையதாகச் சொல்லக்கூடாது. எழில் என்ற சொல்லுக்கும் எழுச்சி என்பதற்கும் தொடர்பு உண்டு. எழுகின்ற அழகு, வளர்கின்ற அழகு, ஆகியதே அழகு எனப்படும். ஆதலால் படத்திலோ கல்லிலோ செம்பிலோ காணப்படும் உருவத்தைப் பார்த்து அது எழிலுடையது என்று கூறக்கூடாது. அந்தச் சித்திரம் அழகாய் இருக்கிறது என்று சொல்லலாம். அந்தக் குழந்தையின் கண்கள் எழிலுடையன என்று சொல்லலாம். எனவே, எழில் என்பதை வளரும் அழகு என்ற பொருளிலே வழங்கவேண்டும். (த.ஓ.ப 74-75)

ஆங்கிலத்தில் **pretty, handsome, fair** என்று ஒரே பொருளில் வழங்கினாலும் அவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டினை நுண்ணிதின் அறிந்து வழங்குவது போன்று தமிழிலும் அவ்வாறு வேறுபாடுணர்ந்து பயன்படுத்தவேண்டும் என்ற கருத்தினை இதன்மூலம் அறியமுடிகிறது.

தண்ணீர் என்பதற்குப் பொருள் விளக்கம் தருகையில், 'குளிர்ச்சி பொருந்திய நீரே தண்ணீர் எனப்பட்டதாதல் வேண்டும். நீர் பொதுச் சொல்லாக இருந்துவந்தது. கண்ணீர், புண்ணீர், உண்ணீர் எனல் வரும். சுடுதண்ணீர், காப்பித் தண்ணீர், தேத்தண்ணீர் எனல் வழங்குதல்' முறையாகா என்கிறார்.

புடவை என்பதன் பொருளைச் சுட்டும்போது, அது புடை அல்லது இடைமருங்கு வைக்கப்படுவதாகும் என்று பொருள்தரும். இது பொதுவாக அக்காலத்தில் ஆடையையுணர்த்தியது. இஃது ஆடவர்க்கும், மகளிர்க்கும் பொதுவாக இச்சொல்

வழங்கிவந்தது. திருநாவுக்கரசர் உடுத்தியிருந்த ஆடையை 'வெண்புடவை மெய்சூழ்' என்றே பெரிய புராணம் சுட்டும். இச்சொல் நாளடைவில் மகளிர் உடுத்தும் ஆடையைக் குறிப்பதாயிற்று. சினம், சீற்றம் என்பதற்குரிய பொருளை வேறுபடுத்திக் காட்டுவார். சினம் அதிகமாவதே சீற்றம் ஆகும். மிக்க கோபத்தை, பிறரை அழிக்கக் கருதுஞ் சினத்தைச் சீற்றம் என்பதாகக் கொள்ளலாம். கடுஞ்சினத்தைத்தான் சீற்றம் எனல் வேண்டும் என்று சுருங்க உரைப்பர். (த.ஓ.ப.74)

> காமம், காதல் என்பதனை வேறுபடுத்துகிறபோது, எளிய விளக்கத்தால் தம் கருத்தை நிறுவுவர். மணமாகாத ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கலாம். மணமானவன் மற்றொருத்தியை விரும்புவானாயின், அவனைக் காமி என்று சொல்லவேண்டுமே ஒழியக் காதலன் என்று சொல்லக்கூடாது. காதல் என்பது விருப்பம். காமம் என்பது அளவு கடந்த பொருத்தமற்ற வேட்கை...... பொருந்தாக் காதலைக் காமம் என்றாலே போதும். (த.ஓ.ப. 75)

> உழவு என்ற சொல்லினை விளக்குகையில், உழத்தல் என்றால் வருந்தி வேலை செய்தல் என்பது பொருள். உழவு என்ற சொல்லிலும், வருந்தி வேலை செய்தல் என்ற பொருளுடைய அடிவேர் இருக்கிறது."நெல்லரியும் இருந்தொழுவர்" என வருகின்ற புறநானூற்றுப் பாடலிலும் உழவர் தொழுவர் எனப்பட்டனர். (த.கா.உ.ப83)

என்று விளக்குவர். சொல்லிற்குப் பொருள் காணும்போது அதன் ஆழ்ந்த பொருள் நுட்பத்தைச் சான்றாதாரங்களோடு எடுத்துரைத்துள்ளமை சொல்லை அளந்து எடையிட்டுக் காண்பதோடு ஒக்கும்.

சொல்லினை ஆய்ந்துரைக்கும்போது இலக்கிய வழக்கு, இலக்கணத்தின் வழி அறியப்படுதல், மரபொழுங்கில் சான்று தருதல், வரலாற்று முறையில் உரைத்தல், ஒப்பிட்டுக் காட்டுதல் முதலிய நெறிகளைப் பின்பற்றி இருப்பது மொழியாராய்ச்சியில் அவருக்கிருந்த புலமையை உணர்த்தும்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் அவர் மிகுதியாக எழுதி வைத்திருந்த மொழி ஆராய்ச்சித் தொடர்பான கட்டுரைகள் யாங்கொளிந்தன என்று தெரியவில்லை. கிடைத்திருப்பின் மொழி பற்றிய ஆய்வில் புதிய கண்ணோட்டங்களை அறிதற்கு ஏதுவாக இருந்திருக்கும். அடியார்க்குநல்லார் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை உரையில், மறைந்துபோன பழந்தமிழ் நூல்களின் பட்டியலைத் தந்து, அவை யெல்லாம் இறந்தனபோலும் என்று கழிவிரக்கம் கொள்வதனை இங்கு எண்ணத் தோன்றுகிறது.

அ.சி.யின் அகராதிப் பணி அவரைப் பல சொற்கள் உருவாக்கம் பற்றியும், கலைச் சொல்லாக்கம் பற்றியும் ஆராய்ந்து காணுதற்கு வாய்ப்புத் தந்தது. அவருக்கிருந்த மொழி ஆய்வு நாட்டமும் காரணமாக இருந்துள்ளது. சொல்லாக்கம், ஆங்கில அகராதியில் தமிழ்ச் சொற்கள் போன்ற கட்டுரைகளிலிலிருந்து இது தொடர்பாக அவர் தரும் தகவல்கள் சுவை பயப்பனவாய் விளக்கப்பட்டுள்ளன. ஒரு பொருளைக்குறிப்பதற்கு என்று ஒரு மொழியில் உரிய சொல் இல்லை என்றால், நேரே, அந்தப்பொருளுடைய மொழியினரிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ளுதல் இயல்பாகும் என்பர். இது குறித்துச் சிந்திக்கையில், அ.சி தமது கருத்தைத் தெரிவிப்பர்.

> ஒரு மொழி சில வகையில் குறையுடையதாய் இருந்தால் அதனிடத்தில் முன்னரே உள்ள பகுதிகளை வெவ்வேறு விதமாக மாற்றிக் கூட்டிச் சேர்த்துக்கொள்ளுகின்ற வகையினாலே புதுபுதுச் சொற்களை அமைத்துக்கொண்டு விடுகிறது. காட்டாக, தமிழில் தல், அல், அம், ஐ, கை,வை முதலிய தொழிற்பெயர் விகுதிகள் இருக்கின்றன. நாடுதல், ஆடல், தூக்கம், விலை, நடக்கை, போர்வை போன்ற தொழிற் பெயர்கள் உண்டானதைப் போலப் புதுபுதுத்தொழிற் பெயர்கள் அவற்றின் அடியாக நாம் எப்பொழுதும் அமைத்துக்கொள்ள இயலும்.
> (செ.வே.பக்-101)

என்று சுட்டியிருப்பது சொற்களின் உருவாக்கச் சிந்தனை வளர்ச்சிக்கு வித்தாகும்.

இறுதியில் இடம்பெறும் நீர், கால், தீ போன்ற சொற்கள் அம் என்ற ஈறு கொண்டு உருவாக்கம் பெற்றுள்ள சொற்களை எடுத்துக்காட்டுகிறார். நீரகம்(பிஹ்பீக்ஷீஷீரீமீஸீ), காலகம் (ளிரீஹ்ரீமீஸீ), தீயகம் (ழிவீமீக்ஷீஷீரீமீஸீ) போன்றவை அவ்வாறு உருவானவை.

ஆங்கிலம் தனி ஒரு மொழி என்று கருதுவதைவிடப் பல்வேறு மொழிகளின் கட்டமைப்பு என்பது விளங்கும். பல மொழிகளையும் பயன்படுத்திக்கொண்டு பன்னாட்டு மொழியாக விளங்குதற்கு அதுவே காரணம் எனலாம். தமிழ்ச்சொற்கள் ஆங்கிலத்தில் கலந்துவிட்டதை ஆசிரியர் உணர்த்துவர். ஆங்கிலேயர் இந்தியாவோடு கொண்ட தொடர்பு காரணமாகத் தமிழ்ச்சொற்கள் ஆங்கில அகராதியின்கண் இடம்பெற்றன. அணைக்கட்டு, கட்டுமரம், கயிறு, கறி, தேக்கு, வெட்டிவேர் முதலிய சொற்கள் நேரடியாகவே கலந்தமைக்கு எடுத்துக் காட்டுகளாகும். இஞ்சிவேர், ஓலை, கஞ்சி, பிண்ணாக்கு, புங்கம், வெற்றிலை போன்ற திராவிட மொழிச் சொற்கள் மற்ற மொழிக்குச் சென்று அதன் பின் ஆங்கில அகராதியில் இடம் பெற்றன என விளக்குவதை ஆங்கில அகராதிகளில் தமிழ்ச் சொற்கள் என்ற கட்டுரையில் காணலாம்.

## கலைச்சொல்லாக்கம்

தமிழில் புகுந்துள்ள புதிய புதிய கலைச்சொல்லாக்கங்களை அப்படியே பயன்படுத்தலாம் என்ற கருத்தில் அ.சி தமது கண்ணோட்டத்தைத் தெரிவித்திருப்பது சிந்தித்தற்குரியது.

> தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஒரு நாட்டிற்கோ ஒரு மொழிக்கோ உரியன ஆகிவிடுதல் இல்லை.உலகப் பொதுச் சொற்களாக வழங்குகின்ற சில சொற்களை நேரே தமிழ் எழுத்துக்களில் அமைத்துக் கொள்வது தவறாகமாட்டாது. தமிழில் ஒத்த கலைச்சொற்கள் இல்லையென்றால், அக்கலைச் சொற்களை நேரே ஆங்கிலத்திலிருந்து அல்லது உலகப்பொதுக் கலைச்சொற்றொகையிலிருந்து எடுத்துக்கொள்ளுதல் கூடும்...
> (வீ.தி. ப. 54)

என்று தம் கருத்தினைப் பதிவு செய்திருப்பதோடு 'புதுப்புதுச் சொற்களை அமைக்கும் ஆற்றல் நமக்கும் நம் மொழிக்கும் உண்டு' என்பது உறுதி என்ற கருத்தினராகவும் காணப்படுகிறார். 'ஆங்கிலச் சொற்களை *அப்படியே வைத்துக்கொண்டால், உயர்தரக்* கல்வி பெறுகின்ற மாணவர்கள் வெளிநாடு செல்லும்பொழுதும், ஆராய்ச்சி செய்யும் பொழுதும் இடர்ப்படமாட்டார்' என்ற கருத்தையும் தெரிவிப்பர்.

ஆங்கிலச் சொற்கள் வழக்கில் வந்து மக்களின் பேச்சில் இயல்பாகப் புகுந்துவிட்டது என்பதனை எண்ணிப் பார்த்துத் தம் கருத்தினைத் தெரிவித்திருப்பது தனித்தமிழ்ப் பற்றில் அவர் எந்த நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டார் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. அவர் எல்லோருக்கும் புரியும்படியான தமிழில் எழுதவேண்டும் என்பதில் நாட்டமுடையவராக இருந்திருக்கிறார் என்பதையும் ஊகித்தறிய முடிகிறது. இது குறித்து அவர் தெரிவிப்பதாவது:

> ஆங்கிலச் சொற்களைத் தமிழினின்று அறவே அகற்ற வேண்டுமென்று கூறுவதாக நினைக்க வேண்டா. இன்றியமையாத இடங்களில் வழக்குப் பயிற்சி அதிகமாகிவிட்ட சொற்களை ஆளுவது குற்றமாகாது. உதாரணமாக மோட்டார். ரயில். சைக்கிள். பேனா. பாங்கி ஆகிய சொற்களை அப்படியே ஆளுவதாற் பெரிய குற்றம் வாராது. அவை தமிழேபோல் அமைந்து தமிழ் மொழியிலே இக்காலத்திற் கலந்துவிட்டன. அவற்றைத் தானியக்கி. பொறியியக்கி. ஈருருளி. மை. எழுதுகோல். பண்டாரம் முதலிய சொற்களைக் கொண்டு அப்புறப்படுத்த முயலுவது கடினமாகும். இன்னும் ஈரங்கி என்பது லீமீணீகூஷீவீஸீரீ என்பதன் திரிபு எனச் சிலரே அறிவர். உயில் என்பது ஆங்கில ஷ்வீறீறீ என்பதன் திரிபானாலும். விளாந்தர் றீணீஸீமீமீகூஷீஸீ என்பதன் திரிபானாலும் தமிழொடு தமிழேபோல் மயங்கி இணைந்துவிட்டன. காங்கிரஸ் என்பது லத்தீனிலிருந்து ஆங்கில வழியாக வந்த சொல் என்று எவராவது சிந்தித்திருக்கிறாரா? இந்தியாவுக்கே உரிய சொல்போல மதித்து ஆளுகின்றனர். இச்சொற்களை இனி நாட்டிலிருந்து அகற்றுதல் எளிதான செயலன்று. (த.ஓ.ப. 78)

அ.சி இவ்வாறு சுட்டியிருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அவர் கருத்தில் உள்ள திண்மை உண்மைதான் என்று வைத்துக்கொண்டாலும் தமிழில் இன்று புதிய சொல்லாக்கங்கள் வளர்ந்து வருவதைக் கருத்தில் கொள்ளவேண்டும். அவர் காலத்திய கருத்தில் நமக்கு உடன்பாடில்லை என்று ஒரே அடியாக மறுத்துவிடமுடியாவிட்டாலும் காலந்தோறும் சொற்களில் மாற்றமும் புதுமையும் வளர்ந்துவருவதை மறுப்பதற்கில்லை. அ.சி அவர்கள் தமிழின்பாற் கொண்டிருந்த காதலால். அவர் மேலும் உரைப்பதாவது.

> பிறமொழிச் சொற்களைத் தவிர்த்தல் என்பதால். பிறமொழியின்கண் வெறுப்புடையேம் என நினைத்தல் ஒவ்வாது; நம் மொழியிடத்து மிக்க காதலுடையேம் என்பதே கருத்து. பிறமொழிச் சொற்களைக்குறைத்தோ நீக்கியோ எழுத வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் யாது? தமிழ் நாடோறும் பிறமொழிக்கலப்பே மிகமிகப் பெற்றுவிட்டால். முடிவில் தமிழ்ச்சொற்கள் அருகிச் சுருங்கிப் பிற சொற்கள் பெருகிப் பல்கிவிடும்.அதனால். அடுத்த நூற்றாண்டில் தமிழைப் பார்க்கும் ஒருவன் தமிழ் என ஒரு தனி மொழி இல்லை எனவே. கூறத் தலைப்பட்டுவிடுவான் (த.ஓ.ப.59)

என்ற கூற்று முக்காலும் உண்மையே.

> மொழியின்கண் வெறுப்புடையேம் என நினைத்தல் ஒவ்வாது; நம் மொழியிடத்து மிக்க காதலுடையேம் என்பதே கருத்து. பிறமொழிச் சொற்களைக்குறைத்தோ நீக்கியோ எழுத வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் யாது? தமிழ் நாடோறும் பிறமொழிக்கலப்பே மிகமிகப் பெற்றுவிட்டால். முடிவில் தமிழ்ச்சொற்கள் அருகிச் சுருங்கிப் பிற சொற்கள் பெருகிப் பல்கிவிடும்.அதனால்.

அடுத்த நூற்றாண்டில் தமிழைப் பார்க்கும் ஒருவன் தமிழ் என ஒரு தனி மொழி இல்லை எனவே. கூறத்தலைப் பட்டுவிடுவான் (த.ஓ.ப.59)

என்ற கூற்று முக்காலும் உண்மையே.

அறிவியல் கலைச்சொல்லாக்கங்களில் ஈடுபாடு கொண்டு சில அறிவியல் சொற்களுக்குப் பழந்தமிழ்ச் சொற்களிலிலிருந்து சான்று காட்டியுள்ளார். குறிப்பாக. குறுந்தொகையில் வரும்

அச்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்ச்
சேமச் செப்பிற் பெறிஇயரோ நீயே (குறுந்.277/4-5)

என வரும் அடிகளில் சேமச் செப்பு என்பதற்கான விளக்கத்தை அறிவியல் கண்கொண்டு நிறுவியுள்ளார். அக்காலத்தே குளிர் பருவங்களில் வெந்நீரின் பயன்பாடு கருதி அதனைச் சூடாகவே இருப்பதற்குரிய பாத்திரத்தில் சேமித்து வைக்கும் பழக்கம் இருந்திருத்தல் வேண்டும். சேமச்செப்பு என்ற சொல் அதனைக் குறிப்பதாகப் பதிவு செய்துள்ளார்.

## 3. புலமை நுட்பம்

### இலக்கிய நுட்பமும் காட்சிப்படுத்தலும்

அ.சி அவர்களின் தனித்தன்மையே ஒரு பாடலை எடுத்துக்கொண்டு அதில் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காட்டுவதெனலாம். இதனை இரசனைமுறைத் திறனாய்வு அல்லது முருகியல் திறனாய்வு வகையில் அடக்கிக்கூறலாம். பாடலின் நுட்பத்தை நுண்ணிதின் விளக்கும் திறத்தைப் பலவாறு உணர்ந்து இன்புறும் அளவிற்கு நயத்துடன் காட்டுவது அவரது தனித்திறன். தமிழிலக்கியத்தில் தோய்ந்த நெஞ்சினரான அவர் இலக்கியத்தைச் சுவைபட விளக்குவதில் தேர்ந்தவர். சொல்லையும் பொருளையும் சீர்தூக்கி ஆய்ந்து. இதற்கு இன்னவாறு இக்காட்சி அமைந்திருக்கிறது என்பதனை விளக்கியுரைப்பது அவரது தனித்திறன். சங்க இலக்கியப் பாடலில் காணும் நிகழ்வுகளை மிகவும் நுட்பமாகக் காட்சிப் படுத்துவதில் வல்லவர் என்பதனை அவருடைய மாணவர்கள் வழியே அறியமுடிகிறது.

பொன்னும் மணியும் முத்தும் வெவ்வேறு இடத்தில் தோன்றினும் அவை அணிகலனாகும் போது ஒன்று சேரப்பெறுகின்றன. அவ்வாறே வெவ்வேறு திசையில் தோன்றிய சான்றோர் ஒன்றுபடுவர் என்ற கருத்துப்பட வரும் புறப்பாடல் ஒன்றின் உவமையை விளக்கும்போது. அதற்குப் புதிய விளக்கத்தை எடுத்துக்காட்டுவர். விளக்கியுரைப்பது அவரது தனித்திறன். சங்க இலக்கியப் பாடலில் காணும் நிகழ்வுகளை மிகவும் நுட்பமாகக் காட்சிப்படுத்துவதில் வல்லவர் என்பதனை அவருடைய மாணவர்கள் வழியே அறியமுடிகிறது.

பொன்னும் மணியும் முத்தும் வெவ்வேறு இடத்தில் தோன்றினும் அவை அணிகலனாகும் போது ஒன்று சேரப்பெறுகின்றன. அவ்வாறே வெவ்வேறு திசையில் தோன்றிய சான்றோர் ஒன்றுபடுவர் என்ற கருத்துப்பட வரும் புறப்பாடல் ஒன்றின் உவமையை விளக்கும்போது. அதற்குப் புதிய விளக்கத்தை எடுத்துக்காட்டுவர்.

> "பல உயர்ந்த பொருட்கள் ஒன்று சேர்ந்து அணிகலன் என்ற ஓர் உருவம் பெறுகிறது. உருவம் பெறலே ஈண்டு நோக்கத்தக்கதாகும். கடல். மலை என வெவ்வேறு இடத்துத் தோன்றியவை அணிகலனாக உருவம் பெற்ற பொழுது பிறப்பிட வேற்றுமை நீங்கின. அவ்வாறே அறிஞர் பலர் ஒன்று கூடின். தத்தம் திசை மறந்து மக்களான ஒரு கூட்டமாகக் கூடினதாக வேண்டும் என்பதே விழுமிய கருத்து''

இந்தக் கருத்தோடு நின்றுவிடாமல். மேலும் அதனைப் புதுக்கி. இந்த நாளில் அஃது எத்தகைய தாக்கம் பெற்றதாய் இருத்தல் வேண்டும் என்பதனையும் எண்ணிப்பார்த்துக் கூறியிருப்பது சிறப்பு. 'உலக மக்களெல்லாம் வேறு திசைகளிலிருந்து ஒன்று கூடும்பொழுது மக்களாகிய ஒரே இனம் என்ற உணர்ச்சி உண்டாதல் வேண்டும்' எனத் தெரிவித்திருப்பது எண்ணி மகிழக்கூடியது.

குறுந்தொகையில் இடம்பெறும்'அகவன் மகளே' எனத் தொடங்கும் பாடலின் சூழலை விளக்கும்போது. 'பாடுக பாட்டே இன்னும் பாடுக பாட்டே அவர் நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே' என்ற அடிகளைச் சீர்தூக்கி. பிறப்பிட வேற்றுமை நீங்கின. அவ்வாறே அறிஞர் பலர் ஒன்று கூடின். தத்தம் திசை மறந்து மக்களான ஒரு கூட்டமாகக் கூடினதாக வேண்டும் என்பதே விழுமிய கருத்து''

இந்தக் கருத்தோடு நின்றுவிடாமல். மேலும் அதனைப் புதுக்கி. இந்த நாளில் அஃது எத்தகைய தாக்கம் பெற்றதாய் இருத்தல் வேண்டும் என்பதனையும் எண்ணிப்பார்த்துக் கூறியிருப்பது சிறப்பு. 'உலக மக்களெல்லாம் வேறு திசைகளிலிருந்து ஒன்று கூடும்பொழுது மக்களாகிய ஒரே இனம் என்ற உணர்ச்சி உண்டாதல் வேண்டும் ' எனத் தெரிவித்திருப்பது எண்ணி மகிழக்கூடியது.

குறுந்தொகையில் இடம்பெறும்'அகவன் மகளே' எனத் தொடங்கும் பாடலின் சூழலை விளக்கும்போது. 'பாடுக பாட்டே இன்னும் பாடுக பாட்டே அவர் நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே' என்ற அடிகளைச் சீர்தூக்கி. தோழி கூறிய அக்கூற்றை நயம்பட விளக்குவர். 'இன்னும்' என்ற ஒரு சொல். ஒருமுறை இருமுறை என்னாது பலமுறை பாட வேண்டும் என்ற குறிப்பினது. அக்குறிப்பு. தோழி கெஞ்சுகிற குறிப்பு. பாடியவள் வயது முதிர்ந்த கட்டுவிச்சி. இளம் பெண்ணாயிருந்தால். தான் பாடிய பாட்டினைத் திரும்பவும் பாடத் தயங்குவள். வயது முதிர்ந்தவளோ. பாடிய பாட்டினைத் திரும்பவும் பாட அருமை காட்டாதவள். எனவே தான். "மனவுக் கோப்பன்ன நன்னெடுங்கூந்தல் அகவன் மகள்'' எனத் தோழி. கட்டுவிச்சியைப் பாராட்டிக்கூறினாள். அவளை நரைத்த கூந்தல் உடையவள் என்று கூறினால். இகழ்ச்சியாகப் போய்விடக்கூடும் என்று கருதிய தோழி. அவளை நயமாகப் பாராட்டுமுகத்தான்.''நல்ல நெடுங்கூந்தலையுடையாய் என்று குறிப்பிடுகிறாள்'' என விளக்கும் நுட்பம் அறிந்து மகிழக்கூடியதாகும்.

'புறநானூறும் கலைகளும்' என்ற கட்டுரையில்.'ஓவத்தன்ன இடனுடை வரைப்பு' என்ற தொடருக்குப் பொருள் கூறும் நயம் சிறப்புடையது. "ஓவியம் வீட்டைப் போலவே

இருக்கிறது என்று சொல்லக்கூடிய காலங் கழிந்து. வீடு ஓவியத்தைப்போல இருக்கிறது என்று சொல்லக்கூடிய காலம் ஏற்படுவதற்கு நீண்ட இடையீடு வேண்டும். சித்திரத்திற் பழகிப் பழகி. அதனைச் சுவைக்கும் பக்குவம் அடைந்த பிற்பாடுதான் சித்திரத்தைப் போல வீடு இருக்கிறது என்று சொல்லத் தோன்றும்" என்று அவர் தரும் விளக்கம் அழகியதொரு விளக்கமாகும்.

சங்க இலக்கியச் செய்யுட்களைச் சித்திரம் போலவும். நாடக ஆக்கம் போலவும் வடித்துக் காட்டுவதில் வல்லவர் என்பதற்கு ஒரு சான்றினைக் காட்டலாம். குறுந்தொகைத் தலைவி ஒருத்தி. தன் தலைவனைப் பார்த்து. பல நாள் பழகியதால். அந்த நட்புப் புளித்துப் போய்விட்டதோ என்று எண்ணிய அவள். தன்னை வெறுப்பதாக இருந்தால். தன் தாய் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடுக என்று சொல்பவளாய்.

நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனை யாயினெம் இல்லுய்த்துக் கொடுமோ
(குறுந். 354/ 1-3)

என்று கூறுகிறாள். இதனைக் காட்சி ஓவியமாகக் காட்டும் அ.சி ஒரு சிறுகதைக்குரிய வகையில் அழகுறத் தெரிவிப்பர். எங்கள் வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்ப்பாயாக எனத் தலைவி கூறுகிறாள். உய்த்தல் என்ற சொல்லின் நயத்தை அ.சி தமக்கே உரிய வகையில் இங்கு எடுத்துக் காட்டுகிறார். 'தலைவியை அவள் இல்லத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டு உட்புகாமலே தலைவன் ஓடிவருதல் முடியாது. ஏனென்றால். தலைவி. இல்லுய்த்துக் கொடு எனக் கேட்கிறாள். தாய்வீடு போகிறேன் என்றால் போகாதே எனத் தலைவன் தடுப்பான். அதனால். தலைவி தாய்வீடு போதல் இல்லை. உடன் வா என்றதால். உடன் அழைத்துச் செல்கிறவன் தலைவியின் மனத்தில் இருக்கும் பிணக்கத்தை வழியில் மாற்றிவிடக்கூடும். ஆதலாலும். தாய் வீடு போதல் இல்லை. வீட்டிற்குக் கொண்டு போய் விடுத்த அளவே அல்லாமல். தலைவனின் தந்தையிடம் அவளைச் சேர்ப்பிப்பதற்கான தலைவன் சொல்லக் கூசுவான். நாணுவான். அஞ்சுவான். ஆதலாலும் தாய் வீடு போதல் இல்லை. எனவே. தலைவி. 'எம் இல் உய்த்துக் கொடுமோ' என்று சொல்லியது வெறும் மிரட்டல். உண்மையில் தாய்வீடு திரும்புதற்கு அவளுக்கு விருப்பம் இல்லை. கணவனோடு இருக்கவே அவளுக்கு விருப்பம். கணவனைத் தன் வழிப்படுத்த நினைத்த காரணத்தாலே அச்சொல் எழுகிறது. 'எம் இல் உய்த்துக்கொடுமோ எனக்கூறி. என்னைத் தகப்பனிடம் சேர்த்துவிட்டுத் திரும்புக. உமக்கு அங்கு வேலை இல்லை' என்பாள் போல். எம் இல் எனப்பொடி வைத்துப் பேசும் நுட்பத்தை இப்பாடல் வழி விளக்கியுரைக்கிறார்.

'பூத்த வேங்கை' என்ற கட்டுரையில் பூத்த வேங்கை என்று தொடங்கும் பாடலின் நுண்ணிய பொருளை ஆராய்ந்துரைக்கும் நுட்பம் அ.சியின் கூர்த்த புலமைக்குச் சான்றாகும். ஒரு கதை போலத் தொடங்கி அப்பாடலின் பொருளை விரித்துப் படிப்போரை அக்கட்டுரைக்குள் புகச்செய்யும் உத்தி அழகிது. இப்பாடலை இலக்கண உரையாசிரியர்கள் மோனை. எதுகை அமைந்திராத பாடலுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளனர். ஆயின் இதன் ஆழமான பொருள் நயத்தை மிக விரிவாக எடுத்துரைக்கும் அ.சி இப்பாடலை விரித்துரைத்ததோடு இது உள்ளுறைப்பொருள்அமைந்த பாட்டு என்று அக்கட்டுரையில் யாண்டும் சுட்டிக்காட்டாமல் இருந்துள்ளது குறிக்கத்தக்கது.

கல்விச் செல்வம் பெற்றிருந்தும் அ.சி குழந்தைச் செல்வம் வாய்க்கப் பெறாதிருந்தவர். அவர் எழுதிய 'தமிழிலக்கிய மகவு' என்ற கட்டுரையைப் படிப்போர், அவரது உள்ளார்ந்த ஏக்கத்தை உணர்வர். அதனை ஆழமான மன உணர்ச்சியினின்றும் எழுதியுள்ளமை அவரது நெஞ்சத்தைத் திறந்து காட்டும். இந்த வகையில் குழந்தையைப் பற்றிய சங்க இலக்கியக் காட்சி ஒன்றைப் படிப்போர் உளங்கொள்ளுமாறு படைத்தளிக்கிறார்.

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதி னல்லி யவிரிதழ் புரையும்
மாசி லங்கை மணிமரு ளவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன் (அகம் 16/ 1-5)

என்று வரும் செய்யுளினைக் கீழ்க்காணுமாறு விரித்துரைக்கும் திறன் அறியற்பாலது.

சாகலனார் பாடியுள்ள இச்செய்யுளில் குழந்தையின் கையும் வாயுமே வருணிக்கப்பட்டு உள்ளன.ஆயினும் அவற்றாலேயே ஒரு குழந்தை தென்படுவது போற்றோற்றுகிறது. அக்குழந்தையின் கை தாமரையிதழை யொத்திருக்கிறதாம். தாமரையிதழ் என்றவுடன் அதன் சொர சொரப்பு கைக்குமுண்டோ என்னும் ஐயம் களையவேண்டி,தாமரையின் உள்ளிதழ் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலும், உள்ளிதழுக்கு அயலே உள்ள இதழையொத்தன அக்கைகள் என இயம்பப்பட்டுள்ளன. அதனால், கைகளின் வெண்சிவப்பு நிறமும் மென்மையும் பெறப்பட்டன. மேலும், அக்கைகள் இலக்கணக் குறையற்றவை எனக்கூறப்பட்டன. அஃதாவது அவை எல்லா இலக்கணமும் நிரம்பியவை என்றவாறு. அதன் வாய் அழகிது என்று சொல்லப்பட்டுள்ளது. பவளத்தை ஒரு புறமும் அவ்வாயை ஒரு புறமும் வைத்து நோக்கினால் பவளம் இதன் முன் நான் நிற்கிறேனா என்று மருண்டு ஓடிவிடும். அத்துணைச் சிவப்பு நிறமுடையது வாய் என்றவாறு. அவ்வாயினின்று தோன்றுஞ் சொற்களோ தேனினும் இனியவை. அவை கைப்பை விளைவிக்கத் தக்கவை.

காரணம், குழவி சொல்ல நினைக்கும் சொல் நாக்கொடு சேர்ந்து வாராமையே. அம்மா என அழைக்க நினைக்கும் குழவி 'மா' என்று கூறுகின்றது. அப்பா என விளிக்க நினைந்து 'பா' எனவே கூறுகின்றது. இவையெல்லாம் அமையாவென்று அவ்வாண்குழந்தை பொன்னால் ஆகிய அணி வேறு தாங்கி நிற்கிறது. இக்குழந்தையைக் கண்டால், பெற்றோரின் பகைவர் கூட எடுத்தணைத்து முத்திக்கொள்ள விரும்புவார் என்பதில் ஐயமுண்டோ?(செ.வே.பக் 24- 25)

என விரித்துரைக்கும் பாங்கில் அவரது நுண்ணிய அறிவுப்புலப்பாடு ஓர் உரையாசிரியருக்குரிய பான்மையைக் காட்டுவதாகும்.

## சிலம்பில் சீரிய சிந்தனை

சிதம்பரநாதர்க்குச் சிலப்பதிகாரத்தின் மீது தணியாத காதல் உண்டு. அதனைப்பற்றிப் பல கட்டுரைகள் படைத்ததோடு சென்னை ஒய். எம்.சி.ஏ வில் சிலம்பு குறித்துத் தொடர்சொற் பொழிவு நிகழ்த்தியுள்ளார். அவரது எழுத்து வன்மையும், பேச்சுத் திறனும் சிலம்பின்கண் அவருக்கிருந்த மீதூர்ந்த ஈடுபாட்டைக்காட்ட வல்லன.

சிலம்பின் தொடர்களில், பாத்திரப் பண்பினை நுட்பமாய்க் காட்டுவதில், உத்தியை எடுத்துக் காட்டி விளக்கும் முறையில் அ.சி.யின் சிலம்பார்வம் ஆழமாக வெளிப்பட்டுள்ளது எனலாம்.

கண்ணகி, கோவலன் தந்தையரை இளங்கோவடிகள் அறிமுகப்படுத்தும்போது, வண்கை மாநாய்கன், இருநிதிக்கிழவன் என்று முறையே சுட்டியிருப்பதை எண்ணிப்பார்த்து அவர்கள் இருவருமே தன்னாலே ஈட்டப்பட்ட நிதியைப் பிறர்க்கு எடுத்து வழங்குவதன் நுட்பத்தை ஆராய்கிறார் அ.சி. மேகத்தை ஒத்த வண்மையுடையவனாக இருத்தற்குக் கைம்மாறு கருதாமற் பிறர்க்கு வழங்குவதற்கு மாநாய்கன் பெருஞ்செல்வமுடையவனாய் இருந்தது போல, கோவலன் தந்தை மாசாத்துவானும் முன்னரே தாயப் பொருளாகப் பெரு நிதியைப் பெற்றிருந்தான் என்ற செய்தி 'இருநிதிக் கிழவன்' என்பதால் உணரப் பட்டது என்று அவனைப்பற்றிய அடைமொழியை விரித்துரைப்பர். தன்னால் பிறர்க்கு வழங்கப்பட்ட ஈதலறம் தனக்குப் பிறகும், கோவலன் மடிந்த பிறகும் பொருளை வழிவழி வழங்குவதற்குத் தன் வழி வருவோர் யாரும் இல்லையே என்று ஏங்கி அறங்கள் பல இயற்றி விட்டுத் துறந்தான் என்பதனைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார். வாழ்த்துக்காதையில் காவற் பெண்டு அரற்றுவதாக வரும் பகுதியோடு இதனைத் தொடர்புபடுத்திக் காட்டும் நுட்பத்தைக் காணலாம்.

கோவலன்-கண்ணகி திருமணக் காட்சியில், மணப்பொருளைக் கையில் ஏந்திவரும் மகளிரை வருணிக்கும் இளங்கோவடிகள், விளங்குமேனியர், ஏந்திய நகிலினர், முகிழ்த்த மூரலர், போதொடு விரி கூந்தற் பொலறுங் கொடியன்னார் என்று வரும் தொடர்களை ஆராய்ந்து அவர்களைக் காட்சிப்படுத்திய இளங்கோவடிகளின் திறத்தை' அழகுற வெளிப்படுத்துகிறார் அ.சி.

மதுரை தீக்கிரையாக்கப்பட்ட சூழலில், மதுராபதித் தெய்வம், கண்ணகி முன் செல்லக் கருதிப் பின் செல்கிறது. கண்ணகியோ அரசன் முன்னிலையில் சென்று முழங்கியவள். இம்மதுரைத் தெய்வமோ கண்ணகியின் பின் சென்று செவ்வி நோக்கி உரைக்கிறது."என் பின் வருவோய் யார் நீ" எனக் கண்ணகி கேட்கிறாள். பாண்டியன் அவள் வழக்குரைக்க வந்தவிடத்து, "என் முன் வந்தோய் யார் நீ"என முன்னர்க் கேட்ட செய்தியோடு இணைவாக இதன் சூழலைத் தொடர்புபடுத்தும் நுட்பம் அறியற்பாலது.

கண்ணகியின் மதி நலனை ஆராயுமிடத்தே, அவள் தன் கணவன் இறந்த பின், உயிரைப் போக்கிக்கொள்ளாமல், இருந்ததற்காக ஊரார் பழிப்பார்கள் என்று கூடக் கருதாமல், கணவனுடைய புகழ் தன் புகழாகுமென்றும், அவனுடைய இகழ்ச்சி தன் இகழ்ச்சியாகும் என்றும் கருதி உயிரைத்தாங்கிக் கொண்டிருந்து தன் கணவன் குற்றமற்றவன் என்று மன்னன் முன் வழக்காடி வென்றதை அ.சி உணர்த்தும்போது அவரது திறனாய்வுப் புலமை நன்கு வெளிப்படும். கணவன் சிலம்பைத் தருதற்கு *முன்வந்தமையால், சிலம்பினால்தான் தன் கணவனை வென்றவளாகிறாள் என்று கூறினும்* இழுக்காகாது என்று தெரிவிக்கும் நுண்ணிய நுட்பம் சிலம்பில் தோய்ந்த அவரது நெஞ்சத்தைக் காட்டுகிறது.

கண்ணகி பற்றிய உயர்வான எண்ணத்தை வெளிப்படுத்தும் நோக்கிலேயே அவர் பார்வை இருந்திருப்பதை அறியமுடிகிறது. கண்ணகியை யார் குறை கூறினாலும் பொறுக்காத இயல்பினராகவே இருந்து சிலம்பு பற்றிய கட்டுரையாக்கங்களை அ. சி

எழுதியும் பேசியும் வந்துள்ளார். கண்ணகி மீது குற்றம் சுமத்துவதை விரும்பாத அவர், கண்ணகியை மனிதரும், முனிவரும், கடவுளரும் பெருமைப்படுத்திப் பேசியதற்குரிய ஆதாரங்களைத் தந்துவிட்டு, அந்தப்புகழுடை நங்கையின் பெரும்பேரை ஏத்துதல் தானும் பயனுடையதென மதிக்கப்படலாயிற்று என்பதனை அரும்பத உரைகாரர், 'இவள் பேரைச் சொல்லி மலரைத் தூவி ஏத்தினார், இவள் பெயர் மந்திரோத்தி ஆதலால்', என எழுதிய வகையில் தெரிவித்துள்ளார். இதனால், தேவர்கள் கண்ணகியை ஏத்திப் போற்றினமை அறியப்படும். பின்னரும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதல் என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லார் கூறியுள்ள 'புகழமைந்த கற்புடைய மகளை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் முதலாய் உள்ளவர் சென்று ஏத்துதல்' என்ற கருத்தை ஏற்றுக் கண்ணகி பெரியதொரு பத்தினிக் கடவுள் ஆகிவிட்டாள் என்று எழுதுகிறார். இவ்வாறு கண்ணகியைத் தெய்வ நிலைக்கு உயர்த்திக் காட்டுவதில் பெருவிருப்புடைய அ.சி உரையாசிரியரின் துணைக்கொண்டு தம் கருத்திற்கு அரண் சேர்த்துள்ளார். சிலம்பு புறஞ்சேரி இறுத்த காதையின் தொடக்கத்தே வரும்

கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
வாள்வரி வேங்கையும் மான்கணம் மருளா
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு (காதை 13/ 5-9),

என்ற அடிகளை இளங்கோ அக்காதையின் தொடக்கத்தே சொன்னதற்குரிய காரணத்தை ஆராய்கிறார். கோவலனும் கண்ணகியும் மதுரை வாயிலை அடைவதற்கு முன்பாக அவன் கண்ணகியிடத்துப் பாண்டிய நாட்டில் கொடிய விலங்குகளும், இன்ன பிறவும் ஏனைய உயிர்களுக்குத் துன்பம் செய்யா என்பதனை உணர்த்துகிறான்.

புகாரை விட்டு நெடுந்தூரம் கணவனோடு நடந்துவந்த கண்ணகி இருள் கவிந்த நேரம் வந்துற்றதால், இருட்காட்டில் அச்சம் சூழுமோ என்று அஞ்சினாள். அவளது அச்சம் நீங்குதற்குக் கோவலன் 'நாம் செல்ல இருப்பது பாண்டிய நாடு. செங்கோல் நிலைபெற்ற நாடு. கொடிய விலங்குகளும் இனியவே செய்யுமே அல்லாது அவற்றால் தீங்கு சூழாது என்று அமைதி கூறி அவளது அச்சத்தை நீக்க முயன்றான். ஆனால் நடந்ததென்ன? எந்தப் பாண்டிய நாட்டில் காட்டுவிலங்குகள் தீங்கு செய்யா எனக் கூறினானோ, அதே பாண்டிய நாட்டில் மனிதனால் ஒரு தீங்கு நிகழ இருப்பதனைக் குறிப்பாக இளங்கோவடிகள் முன்னர் உணர்த்தினார் என்று அ.சி விளக்குவர். கொடிய விலங்குகளால் அங்குத் துன்பம் நேராது; ஆயின், மனிதரால் தீங்கு நேர இருக்கிறது என்பதனை முரணிலும் குறிப்பிலும் வைத்து வருவதுரைத்தல் என்னும்(coming events) உத்தி மூலம் விளக்கியிருப்பதை இக்காட்சி வழி அறியலாம்.

சிலம்பின் சில காட்சிகளை விளக்குவதற்கு இலக்கண நீர்மையோடு பொருத்திக் காட்டுவார். கண்ணகியைப் பார்த்துக் கோவலன், 'உனக்குச் சிறுமை செய்தேன்' என்றுமுன்னிலையில் கூறவேண்டியவன், அங்ஙனம் கூறாமல், 'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமை செய்தேன்', எனத் தன்மை அடிப்படையில் கூறியிருப்பது கண்ணகியிடம் அவன் கொண்டிருக்கும் பெருமதிப்புக் காரணமாகிறது என்று குறிப்பிடுவர்.

சிலம்பு என்ற சொல் ஓரோவிடத்து ஒருமைப் பொருளில் வருவதை எடுத்துக்காட்டும் பேராசிரியர், 'மற்று, கோயில் சிலம்பு கொண்ட கள்வன்' என்ற இடத்து அச்சொல்

பன்மைப் பொருளில் அமைந்துள்ளது என்றும், தேவியின் சிலம்பு கள்வன் கையதாகில் கொணர்க' என்ற விடத்து, 'சிலம்பு கையவாகின்' என்னாமல், கையதாகின் என்று கூறப்பட்டமையால், காணாமற் போன சிலம்பு ஒன்றுதான் என்றும், அவ்வொற்றைச் சிலம்பு கள்வன் கையில் இருந்தால் கொன்று கொணர்க என்று அரசன் கட்டளை இட்டான் என்றும் பொருள் கூறுதல் வேண்டும் என்பது பொருந்தாது என உணர்த்துவார்.

மேலும் இதனை இன்னும் விளக்கமாக எடுத்துரைக்கும் பாங்கில், பாண்டியன் தன் மனைவியின் ஊடலைத் தீர்க்கச் சென்ற சூழலில், பொற்கொல்லன் இடை வர, மன்னன் "சிலம்புகள் கள்வன் கையில் உளதாயின் அவனைக் கொல்லுதற்குச் சிலம்புகளைக் கொணர்க" என்று கூறக்கருதியவன், நாக்குழறி வேறு வகையில் சொற்களைச் சொல்லிவிட்டான். "கொல்லச் சிலம்பு கொணர்க" என்று சொல்லுவதற்கு மாறாக," கொன்றச் சிலம்பு கொணர்க" என்று கூறிவிட்டான் என்று உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், எடுத்துக்காட்டியுள்ளார். நாக்குழறியவன் சிலம்பு "கையவாகின்" எனக்கூறுவான் என்று எதிர்பார்ப்பது பொருந்தாது. அதனால், சிலம்பு என்ற சொல் குறிப்பிட்ட இவ்விடங்களில் பன்மைப் பொருளில் வந்துள்ளது என்றுதான் கொள்ள வேண்டும். இவ்வாறு பல இடங்களில் நூலினுள் ஒருமைப்பொருளிலும், பன்மைப் பொருளிலும் இச்சொல் வந்திருக்கிறது என்பது அறியப்படும்.
(இஇ ப. 32-33)

சிலம்பில் வரும் பொருள் பொதிந்த தொடரான 'கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென' என வருவதனை இவ்வாறு தம் நோக்கில் விண்டுரைக்கும் அ.சி. கொல்லச் சிலம்பு என்றதற்குப் பதிலாக, அவ்வாறு பாண்டிய மன்னனால் கூறப்பட்டதென்பது அறிஞர்களின் கருத்தென உணர்த்துகிறார். கொன்று என்ற வினையெச்சத்திற்குப் பதிலாகக் கொல்ல என்ற செயவென் எச்சம் வந்தமையால் காப்பியத்தின் போக்கில் மாற்றம் நிகழ்வதனைச் சுட்டுகிறார். கொன்றச் சிலம்பு கொணர்க என்றால், அம் மனிதனைக் கொன்றுவிட்டுச் சிலம்பினைக் கொண்டுவருக என்பது பொருள். பாண்டியனுடைய சொற்சோர்வு காரணமாக அவனுக்குப் பெருங்கேடு நேர்ந்தது என்பது இச்செய்தியால் நன்குணரப்படும் என்று விளக்குவர். இதற்குச் சான்றுகாட்டுமுகத்தான்,

ஆக்கமும் கேடும் அதனால் வருதலின்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு

என்ற பொருத்தமான திருக்குறளை எடுத்துக்காட்டுவர். இந்நுட்பம் அறிந்து மகிழக்கூடிய தாகும். சிலப்பதிகார நடுகற் காதையில்,

பொற்கோட்டு இமயத்துப் பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவலன்

என்ற அடிகளால் பொருவறு பத்தினிக்கு விளக்கம் உரைக்கையில், *பத்தினிக்குரிய பண்பு*களைப் பொதுமைப்படுத்தி அதனை மூன்றன் நிலைகளில் ஆராய்கிறார். அ) கணவன் சொல் மறுத்துப் பேசாமை ஆ) கற்புக்குச் சோதனை வந்துழி அழிவுறாமை இ) கணவன் இறந்தவுடன் உயிர்துறத்தல் என்ற நிலைகளை விளக்கிவிட்டு, 'தவறு இழைத்த பாண்டியன் வாயிலிருந்தே கோவலன் குற்றமிலாதவன், நானே கள்வன்' என்ற சொற்களை

வருவித்து உண்மையை உலகறியச் செய்த உத்தமியானதால் பொருவறு பத்தினி எனப் பேசப்பட்டாள் என்பது பேராசிரியர் அ.சி அவர்களின் விளக்கமாகும்.

சிலப்பதிகாரம் வரலாற்றுக் காப்பியம் என நிறுவ முயலும் அ.சி. அதற்கான அகச் சான்றுகளுள் ஒன்றாகப் பதிற்றுப்பத்திலிருந்து சான்று காட்டுகிறார். சேரன் செங்குட்டுவனின் வடதிசைப்போர் பற்றிய குறிப்பில் கண்ணகிக்குக் கல் கொணர்ந்த செய்தி இல்லாமையால் சிலப்பதிகாரம் வரலாற்றுத் தொடர்புடையதன்று என்பது பலரது கருத்து. 'ஐந்தாம் பத்தின் பதிகத்தில் கல் கொணர்ந்த செய்திசுட்டப்படுவதால் செங்குட்டுவன் பத்தினிக்குக்கல் கொண்டு வந்த பிற்பாடு இப்பதிகம் பாடப்பெற்றிருத்தல் இயலும்' என்று விளக்கும் வகையால் சிலப்பதிகாரம் வரலாற்றுத் தொடர்புடையதே' என மெய்ப்பிக்கின்றார். சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள மங்கல அணி குறித்து ஒரு புதுமையான கருத்தைப் பதிவு செய்வது வியக்கத்தக்கதாக உள்ளது. அது தாலியைச் சுட்டியது என்று யாவரும் கொண்டிருக்கும் கருத்திற்கு மேலாகத் தாம் ஒரு கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

> திருமணத்தில் மங்கல அணி அணியும் பழக்கம் உண்டு. அது வளையலையும் குறிக்கும் என்பது அவர் கருத்து. கோவலன் பொருள் அனைத்தும் மாதவியிடம் தொலைத்து விட்டு வறிதே கண்ணகியிடம் திரும்பிய போது, அவளிடம் கொடுப்பதற்குரிய பொருளாகச் சிலம்பு மட்டுமே இருந்தது. கோவலன் மாண்ட பின், கொற்றவைக் கோயிலில் கண்ணகி தான் அணிந்திருந்த வளையலை உடைக்கிறாள்.சிலம்புக்கு மாறாக வளையலைக் கொடுக்கா மையான், கணவனிருக்கும் பொழுது வளையல், கொடுக்க முடியாத அணி கலனாகிறது. கணவன் இறந்த பின்பு வளையல் களையப் பெறுகிறது. ஆதலின் சிலப்பதிகாரச் சமுதாயத்து மங்கல அணி வளையலே எனச் சான்றுரைப்பர்.( செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் -
>
> முனைவர் கோ. சிவகுருநாதன் பக். 19)

இக்கருத்துச் சற்றே புதுமையானது. இருப்பினும் இது குறித்த மாற்றுக் கருத்துகளும் உண்டு. யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தமிழ்ப் பண்பாட்டில் மக்களிடையே நிலவி வரும் ஒரு கருத்தைச் சற்றே மாற்றிப் பார்த்துள்ள பார்வை புதுமையானது. வரவேற்புக்குரியதா என்பது தனிச் செய்தி.

ஏனைய காப்பியங்களை விடச் சிலப்பதிகாரத்தில்தான் சிதம்பரநாதரின் சிந்தை களி கூர்ந்திருந்தனை அக்காப்பியம் பற்றிய கட்டுரைகள் பலவற்றாலும் தெளியலாம். உலகக் காப்பியப் புலவர்களிடையே மிக உயர்ந்த இடத்தில் வைத்து எண்ணத்தக்கவர் இளங்கோவடிகள். ஒரு சிறந்த கவிஞரான சாதனை அவருடையது. பிற்காலத்திய காப்பியப் புலவர்களான திருத்தக்கதேவர், சேக்கிழார், கம்பர் ஆகியோர் ஓரே வழி அக்காப்பியச் சாயலில் எழுத முயன்றனர். அல்லது ஒத்திசைவாக உருவாக்க முயன்றனர். ஆயினும் தமிழிலக்கியத்தில் நூற்றாண்டு காலங்களாக அக்காப்பியம் ஒரு மையமாகத்தன்னைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. தமிழிலக்கியத்தில் மட்டுமின்றி, உலக இலக்கிய அரங்கிலும் அது பல்வேறான ஈர்ப்பினைப் பெற்றுத் தனி இடம் வகிக்கிறது.[1]

கம்பராமாயணத்திலும், பெரியபுராணத்திலும் அவருக்குஈடுபாடு உண்டெனத் தெரிகிறது. ஆயினும் சிலம்பைக் கவர்ந்த அளவிற்கு அவை இரண்டும் அவரைக் கவர்ந்திருக்குமா

எனத் தெரிய வாய்ப்பில்லை. உளவியல் நோக்கில் கம்பராமாயணம் பற்றிய கட்டுரை ஒன்று கைகேகி, சனகன் மனப்போராட்டங்களை ஆய்கிறது. கம்பராமாயணப் பாடல்களை ஆங்காங்கே சிற்சில இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளாரே தவிர.சிலம்பில் இருந்த ஆர்வத்தை அவர் இராமாயணத்திலும், பெரிய புராணத்திலும் காட்டாமையை அறியலாம். அதே சமயம் அவர் மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களின் கதை நிகழ்ச்சிகளை விளக்கமான கட்டுரைகளாக எழுதியுள்ளதையும் இங்குக் குறிப்பிட்டாகவேண்டும்.

## குறட்கருத்தினைப் புலப்படுத்துதல்

அ.சி திருக்குறள் கருத்துகளை அலசி ஆராயும் விதம் நோக்குதற்குரியது. அவர் திருக்குறளை ஆழ்ந்து கற்றுணர்த்திய செய்திகள் பல. அன்பும் அறமுமான சிந்தனைகளை அடிநாதமாகக் கொண்டு திருக்குறள் குறித்த தம் ஆய்வுக் கருத்துகளை வெளிப்படுத்தி இருப்பதனைக் கட்டுரைகளில் காணலாம். திருவள்ளுவர் அருங்கருத்துகள், செல்வங்கள், திருக்குறளும் சிலப்பதிகாரமும், உலகத்தார்க்கு ஆணி முதலான கட்டுரைகளால் பேராசிரியர் திருக்குறள் மீது கொண்டிருந்த பற்றினைக் காணமுடிகிறது.

திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை, சிந்தை, செயல், உணர்ச்சி ஆகியவற்றால் நோக்கப்படுவதாகும் என்ற திருவள்ளுவரின் கருத்தியலைப் பல இயல்களில் காண்லாம் என்பர். திருக்குறளை விளக்கும் வகையில் அதன் பொருள் நுட்பத்தையும், வள்ளுவரின் சொல்லாட்சியையும் சீர் தூக்கி ஆராய்கிறார். தமக்கே உரிய பாணியில் புதுமையான விளக்கங்களைத் தருகிறார். புறத்தே அணிகலன் அணிவதைக் காட்டிலும் அகத்தே இருக்க வேண்டிய அணிகலன்கள் பற்றிய தம் எண்ணங்களை வள்ளுவர் கருத்துகளோடு அ.சி இணைவிக்கிறார். குறிப்பாக, 'அன்பென்னும் யாக்கையகத் துறுப்பு இல்லாதவர்க்குப் புறத்துறுப்பாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியனவும், பொன், வெள்ளி முதலானவையும் எப்பயனைத் தரும் என வினவுகிறார் வள்ளுவனார். தாய்,தந்தை, மனைவி, மக்கள் முதலான தொடர்புடையார் மாட்டு நிகழுங் காதலின்றேல் நட்பேது? நாட்டுப் பற்றேது? மொழிப் பற்றேது? மன்பதைக்குத் தர வேண்டிய அருட்பொருள்தான் ஏது? உயிர்க்கு உறுதி தான் ஏது? அன்பு என்னும் நெகிழ்ச்சி உண்டாயின், ஒருவர் வாழ்கிறார், இல்லையேல் வாழ்தலிலர். இதனைத் திருவள்ளுவர்

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு

என்று குறிப்பிடுவது எண்ணிப் பார்த்தற்குரியது. இப்படிக் கருத்தினைத் தெளிவுபடுத்திக் கூறும் முறையில் அ.சி ஓர் அடிப்படைப் பண்பை வகுத்துக்கொள்கிறார். நிகழ்காலத்தில் காணும் காட்சிகளுக்கு ஏற்ப எளிய விளக்கங்களால், குறட்கருத்து விரித்துரைக்கப்படுவதை அவரது தனித்தன்மையாகக் காணமுடிகிறது.

கண்ணோட்டம் பற்றிய வழிமுறைகளைத் திருவள்ளுவர் எவ்வெவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார் என ஆராய்கிறார். 'தம்மொடு பழகினவர் கண்முன் நின்று கூறும் மொழிகளை மறுக்கமாட்டாமையே கண்ணோட்டம்' எனப்படும்.

அக்கண்ணோட்டம் என்பதொன்று இருப்பதால்தான் உலகு நடைபெறுகின்றது. ஆயினும், அது அளவோடு இசைந்ததாக இருக்கவேண்டும். கருமங்கெட்டுப் போகாதவாறு

அளவோடு செலுத்தப்படும் கண்ணோட்டமே மாந்தர்க்குரிய சிறந்த அணிகலன்களுள் ஒன்றாகத் திருவள்ளுவரால் கருதப்பட்டது என்பதாக விரித்துரைக்கும் பாங்கினை அ.சி யின்பாற் காணலாம்.

'கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்' என்ற திருக்குறள் கருத்தினை விளக்கப் புகுகையில், கண்ணிலா மாந்தர் நலனற்றவர் எனின், கண்ணோட்டம் இல்லாத கண்கள் அணிகலம் அற்றவை எனப்படும் இவ்வழியே .நோக்கின், கண்ணோட்டம் இல்லாத மாந்தர் எத்துணைப் பூணாரம் பூட்டினும் அணியுடையராக மாட்டார் என்பது பெறப்படும். அது பற்றியே, திருவள்ளுவர் 'கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்' என்றார். தம்மொடு பழகினவர் கண்முன் நின்று கூறும் மொழிகளை மறுக்க மாட்டாமையே கண்ணோட்டம் எனப்படும் என்று மேலும் ஒரு விளக்கங்கூறுகிறார்.

'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு' என்பதனையும் பண்பின் அடிப்படையில் கூறக்கருதி,' இழிந்த கருமங்காரணமாக, பழி, பாவங்காரணமாகப் பிறக்கும் நாணே சான்றோர்க்கு அழகு செய்தலின் அதனையும் அணி என்றார்' என்று விளங்க உரைப்பர். இதன் தொடர்ச்சியாக, குணநலஞ் சான்றோர் நலனே என்பதனை இக்காலத்திய நிலையோடு தொடர்புபடுத்தி நோக்கும் அ.சி,

> 'நாணுடைமையே மாந்தர்க்குச் சிறந்த அணிகலனாகக் கருதப்பட்டது. 'டை''காலர்' முதலானவற்றால் தம்மை அழகுபடுத்திக் கொள்வாரிடம் நாணுடைமையின்றேல், அவையெல்லாம் பிணிகளாமேயன்றி அணிகள் ஆகா என்பது இதனால் பெறப்படும்'

என்று தற்கால நடைமுறைக்கேற்பத் தம் விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார். கண்ணோட்டத்தைப் பற்றிய விளக்கங்களை விரித்துரைக்கும் பேராசிரியர், 'மண்ணோ டியைந்த மரத்தனையர்' என்ற குறளுக்குரிய விளக்கத்தை இவ்வாறு காண்கிறார் :

> கண்ணிற்கு அணிகலமாகிய கண்ணோட்டமில்லாதார் கண்ணுடையார் எனப்படார். அவர்தங் கண்ணுக்கும் மரக்கணுவுக்கும் பெரியதோர் வேற்றுமையில்லை. மரம் துன்புறுவோரைக் கண்டு இளகுதலில்லாதவாறு போல ஒருவர் வருத்துவோரது துயரைக் கண்டு இரங்காராயின், மரம் பெயருக்கே கண்(கணு) பெற்றிருப்பதுபோலஅவர் பெயருக்கே கண் பெற்றிருக்கின்றார் என்றும், கண்ணின் தொழிலைக் கண்செய்யாததால் அவர் கண்ணிருந்தும் குருடரே என்றும், பிறவிக் குருடரல்லா இக்குருடர் மனிதராக வாழ்கின்றார் என்றல் வாய்மையாகாது என்றும், அன்னார் மரத்தையே யொத்தவரென்றும் வள்ளுவர் கருதினார்
>
> (த.கா.உ. பக்.97)

என்னும் விளக்கத்தைத் தருகிறார்.

> அறைபறை அன்னர் கயவர்தாங் கேட்ட
> மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்

என்ற குறளில் வரும் உய்த்து என்ற சொல்லினை ஆய்ந்து, அச்சொல் அக்குறளின் உயிர்நிலை என்றுரைக்கின்றார். கயவர்க்கு ஒரு இரகசியம் பாரமாக இருந்தது என்பதும், அதனைக் கொண்டுபோய்ப் பிறர்க்குச் சேர்த்தான் என்பதும், உய்த்து என்ற சொல்லினாலே பெறப்படுகின்றன. அதனை எடுத்துவிட்டு வேறு எந்தச் சொல்லை அவ்விடத்துச் சேர்த்தாலும், இவ்வளவு சிறந்த நயங்கள் தோன்றமாட்டா. கயவரிடம் இரகசியம் கூறக்

கூடாது என்ற நீதியை எவ்வளவு நயம் படத் திருவள்ளுவர்கூறியுள்ளார்( மு.ப.கா. ப. 123)எனத் திறனாய்ந்துள்ளமை அ. சி யின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டவல்லது.

''செவியிற் சுவையுணரா'' என்று தொடங்கும் குறட்பாவிற்கு விளக்கம் தருகையில், ' அவிச்சுவை அன்றிக் கவிச்சுவை அறியா வாயினையும், நல்ல பொருள்களைக் கேட்டுக் கேட்டுத் துளைபடா இரண்டு செவிகளையும் உடையவர் இருந்தால் உலகத்தார் பெறுவதும், இறந்தால் இழப்பதும் இல்லை'' என்று கடுமையாக உரைத்திருத்தலை அறியலாம்.

பயனில் சொல்வானைப் பதடி என்று திருவள்ளுவர் சொன்னதன் காரணத்தை ஆராய்கிறார் அ.சி.

> 'அறிவிருப்பின் அங்ஙனம் செய்யாரென்றும், அறிவிலார் வாழ்கிறார் என்றல் ஏலாது என்றும் அவர் கருதியமையே ஆம். கல்வி கேள்வியுடையார் வாளா இருப்பின் பெரியதோர் பயனை விளைவிக்கின்றாரில்லை. அவர் கற்றார் முன் தாம் கற்றவற்றைச் சொல்லும் வகையிற் சொல்ல வல்லார் ஆகவேண்டும். இல்லையேல், தாம் புரிந்த கல்வி கேள்விகளாற் பயன்பெறாது, பிறரைப் பயனெய்தி விப்பதுஞ் செய்யாது கழிகின்றாராவார். அங்ஙனம் கழிகின்றவர் கல்லாதவரினுங் கடையரேயாவர்.

என்று விளக்குவர். செல்வங்கள் பற்றிய திருவள்ளுவரின் கருத்தைப் பல கோணங்களில் எடுத்துரைப்பர். அன்பினைத் திருவள்ளுவர் எவ்வாறு அருஞ்செல்வமாகக் கருதுகிறார் என்பதையும், அன்பு வழி அருள் எவ்வாறு பிறக்கும் என்பதையும் அ.சி வழியே காணலாம்.

> அன்பின் அடிப்படையில் விருப்பம் தோன்றும் என்பதும், விருப்பமுடைமையின் அடிப்படையில் நட்பு தோன்றும் என்பதும் விளங்குகின்றன. முன்னரே அறிந்தார் மாட்டுத் தோன்றும் உள நெகிழ்ச்சி அன்பு. அதன் காரணமாகச் சில இடங்களில் விருப்பம் உண்டாவதுண்டு. அவ்வாறு விருப்பம் உண்டாவதாலும் விரும்பப்படுவதாலும் நட்பு பிறக்கிறது. . நட்பு ஒரு பெருஞ்செல்வம். அந்தச் செல்வம் தோற்றுதற்குச் சிறந்த காரணமாக இருப்பது அன்பு என்பது பெறப்படும். முன்பின் அறியாதார் மாட்டுத் தோன்றும் அன்பும் இரக்கமும் அருள் என்று சொல்லப்படும். அதனால்தான்' அருள் என்னும் அன்பீன் குழவி' என்று திருவள்ளுவர் கூறினார். பொதுவாக, பிறர் படும் அல்லலைக் கண்டு அருள் தோன்றும். எனவே, துயருறுவோரைப் பார்த்துச் செயற்படும் அன்புதான் அருள் எனப்படும்' (த.கா.உ. பக் 34-35)

என்று தனக்கே உரிய வகையில் பொருள்விளக்கம் தருவதை நோக்கலாம். திருவள்ளுவர் செவிச் செல்வத்தைத் தலையாய செல்வம் என்று கூறியதற்கான விளக்கத்தை அ.சி தம் பாணியில் விரித்துரைக்கிறார்.

> அறிவு என்பது இயற்கை அறிவு. கல்வி என்பது ஒருவர் கற்பதனால் வரும் அறிவு. கேள்வி என்பது ஒருவர் வல்லாரிடத்தும் நல்லாரிடத்தும் கேட்பதால் உண்டாகும் அறிவு. அந்த அறிவு சிறிதாயினும் விரும்பி ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது திருவள்ளுவர் கருத்து. இவ்வுலகத்தில் உள்ள மக்கள் பெறலாகும் பெருஞ்

செல்வங்களுட் கேள்வி ஆகிய செல்வம் தலையாயது என்று திருவள்ளுவர் கருதினார். அவ்வாறு அவர் கருதியதன் நோக்கம், மானிடராய் உள்ளார் பெறத்தக்க பேறுகளில் அது சிறந்த பேறாக மதிக்கப்படுகின்றது என்பதாம். வீடு பேறு அடைந்த பிறபாடு வீட்டின்கண் ஒருவர் பேசுவதும் இல்லை. ஆதலால், இவ்வுலக மாந்தர் பெற்றுள்ள தனிச்சிறப்புகளில் கேள்வியறிவு என்பது தனி மதிப்புடையதொன்று. அதனால்தான், திருவள்ளுவர் செல்வங்களுள் எல்லாம் சிறந்தது செவிச்செல்வம் என்ற அளவில் நில்லாமல், அச்செல்வங்கள் எல்லா வற்றிலும் அது தலையாயது என்று வேறு கூறினார். . (த.கா.உ.பக்.40)

திருக்குறள் ஓர் அறநூலாக இருப்பதால் அதில் இலக்கிய நயம் காணவியலுமா என்று வினா எழுப்பி, காண இயலும் என்று விடை பகர்ந்துள்ளார். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்ற குறளுக்கு அவர் கூறும் இலக்கிய நயத்தைக் கீழ்க்காணுமாறு தெரிவிப்பர்.

வள்ளுவர் கனவில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். நேற்று அவன் யாசித்தான். மூன்றாம் நாளும் யாசித்தான், இன்னும் யாசிக்கத்தான் வேண்டுமா? என் செய்வது? தலையில் எழுதிய வண்ணம் தானே நடக்கும். இரந்துதான் ஆக வேண்டும். இன்னொரு எண்ணமும் அவன் மனத்தில் தோன்றியது. யாசிப்பதும் ஒரு தொழிலா? தொழில்களில் ஒன்றாக யாசித்தலையும் சேர்த்து எண்ணினானா பிரமன்? அப்படியானால் அவனே அத்தொழிலைச் செய்யட்டும். அவன் இந்த உலகிற்கு வரட்டும் தெருதெருவாக அலையட்டும் அப்போதுதான் அவன் அறிவான். இரத்தல் தொழில் எவ்வளவு இழிவானது என்பதை. அவன் அலைந்து கெட்டொழியட்டும். இவ்வாறு அப்பிச்சைக்காரன் கருதியதாய் ஒரு கனவைக்கண்டார் போலும் வள்ளுவர் – எழுதினார் ஒரு குறள். (மு.ப.கா.ப 123)

இப்படிச் சிலவற்றைச் சித்திரமாக்கித் திருக்குறளின்கண் இலக்கிய நயம் பொதிந்திருப்பதனைப் வெளிப்படுத்தியுள்ளார்.

திருக்குறள் கருத்துகளைத் தம் உள்ளம் உணர்ந்தவாறு இன்றைய உலகியல் வழி அவற்றிற்கு விளக்கம் தருகிறார். பல்வேறு அதிகாரங்களில் உள்ளவற்றைத் தகுந்தவாறு பொருண்மை அடிப்படையில் பொருத்தி இணைத்துக்காட்டும் நுட்பம் போற்றுதற்குரியதாக உள்ளது. மாற்றுத் திறனாளிகள் பள்ளிக்கு ஒருசமயம் பேசச் சென்ற போது அவர் பார்வையற்றோர் முன்னிலையில் திருக்குறளை அவர்களுக்குத் தகுந்தவாறு விளக்குவது அருமையுடைத்து.

ஒருவருக்குக் கண்ணோ காதோ இல்லாமல் இருப்பது ஒரு பழியாகமாட்டாது. ஆனால், ஒருவரிடத்தில் ஆள் வினையுடைமை இல்லையென்றால், ஒருவரிடத்தில் மடிவந்து குடிபுகுந்துவிட்டதென்றால், ஒருவர் இருக்கண்ணைப்பொடிபடுத்தாமல் இடும்பையில் இடும்பைப்படுகிறார் என்றால் அவர்தாம் வாழத் தகாதவராவார்... பொறியின்மை யார்க்கும் பழியன்று'' என்ற குறளை எடுத்துக்காட்டியுள்ளார் அதோடு அம்மாணாக்கர்கள் உணரும் வண்ணம்,'' இரண்டு புள்ளிகளால் ஆன எழுத்துக்கள் எல்லாம்'பி'அல்லஅல்லது'சிஅல்ல; அல்லது 'எ' அல்ல. மூன்று புள்ளிகளால் ஆனஎழுத்துல' மாத்திரம் அன்று; 'ஓ' கூட ஆகும். அதுபோல மனிதன்இரண்டு கால் உடையவனாக, இரண்டு கண்கள் உடையவனாக, இரண்டுமூக்குத் துவாரம் உடையவனாக இருந்துவிட்டதால் மாத்திரம்மனிதன் ஆவதில்லை. மனிதனுக்குள்ள பண்புகள்,

மனிதனுக்குஇருக்க வேண்டிய நல்ல இயல்புகள் ஒருவனிடத்தில்இருந்தால்தான் அவன் மனிதனாவான். இல்லையேல் அவன்வெறும் மரமாவான். நெடுந்தூண் ஆவான்

(வீ. தி. பக் 97-98)

என்று விளக்கஞ் சொல்லிவிட்டு'உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்' என்னும் குறளையும். 'உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை' என்னும் குறளையும் எடுத்துக்காட்டியுள்ளார். இங்கு அவர் எழுத்துகள் பற்றிச் சுட்டிக்காட்டியிருப்பது பார்வையற்றோர் படிக்கும் எழுத்து முறையான "பிரெய்லி"யை முன்வைத்துப் பேசியிருப்பதை நோக்கக் கருத்தை விளக்கும் அ.சி யின் திறன் வெளிப்படுகிறது.

அறிவுவழிச் சிந்திக்க வைக்கும் திருக்குறட்கருத்துகளுக்கு உணர்ச்சி வழியேயும். கற்பனை கலந்தும் விளக்கம் தரும்போது அவை நாடகப் பாங்குடையதாக விளங்குவதனை அறியலாம்.

கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ. இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்

என்னும் குறளுக்குரிய விளக்கத்தை இவ்வாறு உணர்த்துவர்.

> ஒருவன் இரப்பதாக வைத்துக் கொள்வோம். அந்நிலையில். வேறொருவன் வீட்டிற் புகுந்து. தன் குறை இன்னது எனச் சொல்லத் தொடங்கிச் சொல்ல நா எழாமல் அவன் நிற்கிறான். அவன் வந்து நிற்கிற நிலையைக் கண்டவுடனே. அவன் தன்னிடம் ஒரு பொருள் வேண்டி வந்திருக்கிறான் என்பதை அறியும் செல்வன் கூசாது இல்லை எனச் சொல்கிறான். இல்லையென்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் இரக்கிறவன் உயிர் போய்விடுகிறது. இல்லையென்றவிடமோ சொல்லுகிறவன் வாய் வழியே வந்தது. ஆனால். அவனை ஒன்றுஞ்செய்ய வில்லையே! என்ன விந்தை!! அந்த நேரத்தில் அப்படிச் சொல் சொன்னவன் உயிர் எங்கேயாவது மறைந்திருக்க வேண்டும். எந்தப் புரையிலே புகுந்து அந்நேரம் ஒளித்துக் கொண்டதோ தெரியவில்லையே! இல்லையெனக் கேட்டவன் மாய்ந்தான். கூறினவன் மாய வில்லையே! பொருளை வைத்துக்கொண்டு வழங்காமற் கெடுகிறவன் இருந்தால் என்னஇறந்தால் என்ன? இந்தக் கருத்துக்கள்அனைத்தையும் திருவள்ளுவர் கூறக்கருதினார். அவற்றைக் கூறுதற்குப் பெரிய கட்டுரை எழுதவிவில்லை. அன்றி. நீளமாக ஆசிரியப்பா பாடவில்லை. பின் என்ன செய்தார்? இரண்டடியிலே. அதிலேயும் ஒன்றே முக்கால் அடியிலே ஒரு குறட்பா எழுதினார்"

என்று விளங்க உரைத்திருப்பது உணர்ச்சி வாய்ந்த காட்சிப்படுத்தலாக அமைந்துள்ளது.

சோவியத் நாட்டின் தலைநகரான மாஸ்கோவில் நிகழ்ந்த கீழ்த்திசை ஆராய்ச்சித்துறை அறிஞர்களின் வெள்ளிவிழா மாநாட்டில் (ஆகஸ்டு 1960) அ.சி திருக்குறள் குறித்துத் திருவள்ளுவர் உலகிற்கு வழங்கிய செய்தி (ஜிலீவீக்ஷீஹிஸ்ணீறீறீஹிஸ்ணீக்ஷீ'வ னீமீவ மீரீமீ மீக்ஷீ மீலீமீ ஷ்ஷீக்ஷீறீபீ) என்ற தலைப்பில் ஆற்றிய ஆங்கில உரை. அங்குள்ள உருசிய அறிஞர்களையும். ஏனைய நாட்டினரையும் பெரிதும் கவர்ந்தது. அப்பேச்சில். 'சமய நம்பிக்கையும் ஆன்மிக உணர்வும் மேலோங்கிய இந்திய நாட்டில் துறவறமும். ஊழ்க்கோட்பாடும். நம்பிக்கை வறட்சியுடன் கூடிய அணுகு முறையும் மேலோங்கி நிற்கும் என்று கருதுதல் இயல்பு. திருவள்ளுவர் வாழ்க்கையை உடன்பாட்டு நோக்கில் நம்பிக்கையுடன் நோக்குவதையும்.

துறவறத்தைக் கூறினும் இல்லற மேன்மையை விளக்குவதையும், ஊழின் வன்மையைக் கூறினும், மடியின்மை, ஊக்கமுடைமை, இடுக்கண் அழியாமை, ஆள்வினையுடைமை ஆகிய அதிகாரங்களில் முயற்சி மேம்பாட்டைச் சிறப்பிப்பதையும் தெளிவுறுத்தியுள்ளார். இன்று திருவள்ளுவர் உயிரோடு இருந்திருப்பாரேயானால், பேரழிவிற்கு வாயிலாக அமையும் அணுகுண்டுகள் பற்றியும் நீரகக் குண்டுகள் குறித்தும் கூறுவர்'. ஒருபொழுதும் வாழ்வதறியார் என்ற குறட் கருத்தையும் இதனோடு பொருத்திக்காட்டிப் பேசிய பேச்சினை உருசிய அறிஞர் பெருமக்கள் விரும்பிப் போற்றியதாக அறியப்படுகிறது. அப்பேச்சு அவர்கள் மனத்தில் நிற்கக்கூடியதாக இருந்திருக்கும் என்பதோடு, திருக்குறள் நூற்செய்திகளை அறிவதற்கும் வாய்ப்பளித்திருக்கும்.

சிதம்பரநாதர் இலக்கியச் சொற்சித்திரம் தீட்டுவதில் வல்லவராக இருத்தலைப்போல் தாம் கண்ட இயற்கைக் காட்சிகளையும் அழகுபடவும், சுவைபடவும் நடைச்சித்திரமாக வெளிப்படுத்தும் திறனுடையார் என்பதற்கு உண்மை காணல், சென்னைக் கடற்கரை முதலிய கட்டுரைகள் சான்றாவன. கதிரவன், திங்கள், மாரி, கடல், ஆறு, மரம், பூ, கரும்பு, விலங்கு ஆகியவற்றை வைத்து அவை மனிதர்க்கு உணர்த்தும் செய்திகளாகச் சுட்டுவனவற்றைத் திறம்படக் காட்டுவர். தம் இலக்கியப் பயிற்சியையும் ஆங்காங்கே பொதுளிச் சுவைபடத் தீட்டிய அக்கட்டுரையைக் கட்டுரைக்கொத்து என்ற நூலில் அழகுபடக் காட்டுவர். சென்னைக் கடற்கரை என்ற கட்டுரை அழகியதோர் நடைச்சித்திரம். அதில் கடற்கரைக் காட்சிகளை வருணிக்கும் திறமும், பல்வேறு மாந்தர்களின் மனக்கோல உணர்ச்சிகளும் எள்ளல் சுவையோடு கூறப்பட்டுள்ளன.

## 4 எள்ளலுக்கோர் இலக்கண நூல்

சிதம்பரநாதர் எள்ளல் சுவைபடச் சூத்திரம் தீட்டியிருப்பதனை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். அதுதான் 'காக்காய் பிடித்தலும் குருவி பிடித்தலும்' என்ற சிற்றிலக்கண நூல். இதனை நூற்பா வடிவில் யாத்திருப்பதோடு பண்டைய உரையாசிரியர் நடையிலேயே விளக்கமும் விரிவும் தந்துள்ளார். சிறியவர்கள் பெரியவர்களைக் காரியத்திற்காகப் புகழ்வதனைக் காக்காய் பிடித்தல் எனவும். பெரியவர்கள் தம் காரியங்களை முடிக்கச் சிறியவர்களைப் பாராட்டி அரவணைப்பதைக் குருவி பிடித்தல் எனவும் கொண்டு அதற்கென நூற்பா எழுதியிருப்பது புதுமையானது.

இது 5.11.1933 இல் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவையில் அரங்கேற்றப் பட்டதாக அ.சி. குறித்துள்ளார். இது சிறுநூலாகப் பின்னர் வெளிவந்தது.

1. காக்காய் பிடித்தல் என்பதன் வகையே
பெரியோ ரவரை வயப்படச் செயவே
இருக்கை தலைப்பெயல் இச்சகம் பேசுதல்
செல்லுழிச் சேறல் தாளம் போடல்
மிகைப்படச் செய்தல் என்றவ் வைந்தே

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் காக்காய் பிடித்தலின் வழியும். பெயரும். முறையும் தொகையும் உணர்த்துதனுதலிற்று. இதன் பொருள் இவ்வெண்ணப்பட்ட ஐந்தும் காக்காய் பிடித்தலின் வகையாம். காக்காய் பிடித்தலின் வகையே என்றது "என்பதன்

வகையே "என்றார். அத்தொடர் சான்றோர் செய்யுள் பயிலாமை நோக்கி. என்க.(சென்னை யூனிவர் சிட்டி அகராதி காண்க) பிறர் தம்மை எனக்கூறாது "பெரியோரை வயப்படச் செய்யவே" என எற்றிற்கோ கூறினாரெனின் 'குருவி பிடித்தல்(சூத்.3)என்புழிக்கூறுதும். இக்கூறிய ஐந்தனுள் அடங்குவன பிறவுள என்று காட்டற் கன்றே'வகை'எனக்கூறினாரென்பது.

இருதலைப் பெய்தல்: இருக்கை தலைப் பெய்த பின்னரே இச்சகம் பேசுதலியலுமாகலின் அதனை முன் வைத்தோதினாரென்பது. இருக்கை தலை பெயரானும் காக்காய் பிடித்தலின் வழிகளுள் ஒன்றாதல் நோக்கியே இச்சகம் பேசுதலின் பிரித்துக் கூறினாரென்பது. அதற்குதாரணம்:-

காலையும் பாரான் கடும்பகல் பாரான்
வேளையும் பாரான் வேதனை நோக்கான்
பெயலு முன்றன் வெயிலும் கருதான்

பெயற்றலை செய்வான் பெரியோர் மருங்கே

இச்சகம் பேசுதல் :- இருக்கை தலை பெய்த ஞான்றும் செல்லுழிச் சென்ற ஞான்றும் இச்சகம் பேசுதல் உண்டாதல் பற்றி, அதனைச் சிங்க நோக்காக ஈண்டு வைத்தாரென்பது அதற்குதாரணம் :-

1. ஞாயிறன்ன வெந்திற லாண்மையோய்
திங்களன்ன தண்பெருஞ் சாயலோய்
வானத்தன்ன வண்மைக் கையினோய்

2. வெண்பாவி லொவ்வான் புகழேந்தி
விருத்தத்தி லொவ்வான் கம்பநாடன்

என்றதும் அது

செல்லுழிச் சேறல் :- செல்லுழிச் சென்று இச்சகம் பேசுதலும் தாளம் போடலும் என்றிரு வகையும் உண்டாதலின் அன்றே அதனையும் சிங்க நோக்காக வைத்தாரென்பது. அன்றியும் செல்லுழிச் சேறல் மாத்திரையே காக்காய் பிடித்தலுமுண்டெடன நோக்கியே தனித் தெண்ணினார் என்பது. அதற்குதாரணம்:-

1. அந்திப் போழ்தே ஆன தறிந்து
கந்தி யப்பர் கோயிற் புகுந்து
தந்தி வர்மற் கண்டா னைய

2. கயல்மீன் ஓடுங் கடற்கரைப் பாங்கர்
உயல்மீக் கருத்தின் உருத்திரங் கண்ணன்
அயலார் தவிர்த்தே ஆண்டவற் சேர்ந்தான்
அயலே தலையை ஆட்டினன் கவிழ்ந்தே

என்றதுமது.

தாளம் போடல்;- அதற்கும் செல்லுழிச் சேறலுக்கும் உள்ள இயைபு முன்னரே உரைத்தாம். சமயத்துக்கேற்பவும், கேள்விக் கேற்பவும் விடையிறுத்தலைத் 'தாளம் போடல்' என்றார் என்பது. அதனையே 'ஒத்தூதல்' என்றுரைப்பாருமுளர். அதற்குதராணம்:-

1. குரங்கு நின்றுகூத் தாடிய கோலத்தைக் கண்டே
அரங்கு முன்னிநாய் பாடிக் கொண்டாடுதல் போலும்
கரங்க ணீட்டியே பேசிடுங் கசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெசிடுமறிவிலார் செய்கை
(விவேக சிந்தாமணி)

2. கழுதை காவெனக் கண்டுநின் றாடிய அலகை .
தொழுது மீண்டுமக் கழுதையைத் துதிசெயல் போலும்
பழுதிலா நமக்கார் நிகரிங் கெனப் பகரும்
முழுது மூடரை மூடர் கொண்டா டிடிடும் முறையே
(விவேக சிந்தாமணி)

என்றதுமது

மிகைபடச் செய்தல்:- 'முற்கூறிய நான்கையும் மிகைபடச் செய்தல் என்னுங்கருத்திலன்றி மிகைபட மரியாதை செய்தல் என்னுங் கருத்தில் வைத்தோதினாரென்பது. அந்நான்கு வழியே அன்றிப் பிற வழியாலும் மரியாதை செய்தலுண்மையின் தனித்தெண்ணி அவற்றின் பின்வைத்தார் என்பது'இருக்கை யெழலும் எதிர்செலவும் ஏனை விடுப்ப ஒழிதலோடின்ன மரியாதையைப் பழிக்கின்றாரல்லர். உரியதல்லா மரியாதையையும் அளவு கடந்து செய்யும் அதனையுமே கடிகின்றார் என்பது புலப்படற்கன்றே'மிகைபட'எனக் கூறினாரென்பது.

அதற்குதாரணம்:

1. உட்காரென்ன உட்கார்ந் திலனே
உட்காரென்ன வாய்பொத் தினனே
உட்காரென்ன உட்கார்ந் திலனே
உட்காரென்ன பின்னோ டினனே

2. தண்ணீர் வேணுமோ வெந்நீர் வேணுமோ
உண்ணீர் வேணுமோ உரவுநீர் வேணுமோ
எந்நீர் வேணுமோ இயம்புமி னிசைந்தே என்றதுமது.

இனி அடங்காதனவெல்லாம் 'வகை' என்ற அதனுள் அடக்கிக் கொள்கவென்றார் என்றறிக.

2. பழியுந் தீமையும் பயக்கின்ற மையின்
அறிஞர்க் காக காக்காய் பிடித்தல்

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் இன்னார்க்கு இதனானாகாதென உணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள். அது பழியும் தீமையும் விளைத்தலின் அறிஞர்க்காகாது என்றவாறு.

உலகத்தால் சுட்டவுஞ் சொல்லவும் பட்டுப் பழிக்கிடனாதனோக்கியும். ஒருவனை உயர்த்தியுயர்த்திக் கூறி அவனுக்குண்மையின் உரியதல்லா உயர்ச்சியை அவன் மாட்டுக் காண்பவர் போல் நடித்து அவனையே பொய்ம்மைக்கும் பெருமிதத்திற்கும் ஆளாக்குகின்ற

தீமைக் கிடனாதனோக்கியும், காக்காய் பிடிக்க வல்லரல்லாரையும் பிடிக்க மனமில்லாரையும் இவர் நம்மை மதித்திலர் என வுன்னிப் பிடியுண்பார் செய்யும் தீதுண்டாதனோக்கியும், அது வல்லார்க்கு விசேட மதிப்புக் கொடுக்கப் பெறலால் வரும் நியாயக் கேடுநோக்கியும். அறிஞர்க்காகா என்றார் என்பது. 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்ற விடத்துப் பழி யஞ்சவேண்டியதும்' சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ' என்ற விடத்துத் தீதினை விடவேண்டியதும் அறிஞர் கடன் என்று கூறினார் சான்றோராகலின் அதுவாகாதென்பது.

அறிஞர்க்காகாதென ஒருமையிற் கூறாது 'ஆகா' எனப் பன்மையிற் கூறினார். அதன் வகைகளையெல்லாம் உட்கொண்டென்பது. அறிஞர்க்காகாவெனவே, அறிவிலார்க் காகுமெனில் அற்றன்று; அறிஞர்க்குந் தீமை பயக்குமெனின் அறிவிலார்க்குப் பயத்தல் சொல்லவேண்டா என்க.

3. சிறியோர் மேவிற் குருவி பிடித்தல்

இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் நிறுத்தமுறையான் குருவி பிடித்தல் ஆமாறு உணர்த்துவதாயிற்று.

இதன் பொருள்:- அதுவே பெரியோரால் சிறியோர்பால் செய்யு மிடத்துக் குருவி பிடித்தல் என்னும் வேறு பெயர் பெறும் என்றவாறு.

'பெரியோரவரை வயப்படச் செயவே' என முற்கூறினார் (சூத்.1) ஈண்டுச் சிறியோரை வயப்படச் செய்யும் அவ்வழிகளில் ஒன்றாதல் சிலவாதல் பெரியோர் ஆளுதலைக் குருவி பிடித்தல் என்றாரென்பது. எனவே, பெரியோர் சிறியோரின் இருக்கை தலைப் பெய்தல், அவர்பால் இச்சகம் பேசுதல், அவர் செல்லுழிச் சேறல் முதலாயின வெல்லாம்' குருவி பிடித்தல்' என்னும் பெயர் பெறும் என்றார். இது 'தான் குறியிடுதல்' என்னும் உத்தி என்க( தொல். மரபு. 110)

அதற்குதாரணம்:-

1. மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கற்பகத் தருவே!
ஆசை நாயகி! அல்வா சமைப்பாய்!

2. தம்பீ! நல்லாய்! கடைக்குச் சென்று வா
என்றதும் அது.

அதுவும் அறிஞர்க்காகாதெனச் சிங்க நோக்காக நின்ற முற்சூத்திரத் தானே உய்த்துணர வைத்தாரென்பது. பேராசிரியர் அ.சி தம் காலத்தில் கல்விக்கழகத்தில் நிலவிவந்த காட்சிகளையும், செயற்பாடுகளையும் கண்டறிந்து இவ்வாறு எள்ளல் பட இலக்கணப்படுத்தி இருப்பது புதுமையானதாகும். எள்ளல் இலக்கணத்திற்குரிய நூற்பாக்களும், அவற்றிற்கு அவர் அளித்துள்ள விளக்கமும் தொல்காப்பிய உரையாசிரியர்களின் நடையினை ஒத்துள்ளன.

பல்கலைக்கழகத்திற்கு ஆய்வேடு அளித்த வகையில், தமிழில் முதன்முதலாக, முனைவர் பட்டம் பெற்ற அ.சி. யாப்பியலைத் தம் ஆய்வுப்பொருளாகக் கொண்டிருந்தார். 'தமிழ் யாப்பியல் உயராய்வு (10ஆம் நூற்றாண்டு வரை)'[22] ஆங்கிலத்தில்

எழுதப்பட்டுள்ள இந்த ஆய்வேடு நூல் வடிவம் பெற்ற பின்னர், முனைவர் இராம. குருநாதன், தமிழ் யாப்பியல் உயராய்வு என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அது விழிகள் பதிப்பக வெளியீடாக வெளி வந்துள்ளது என்ற பொருளில் ஆய்வுப்பணியை மேற்கொள்ளவும், நெறிப்படுத்தவும் காரணமாக இருந்தவர்கள் பேராசிரியர் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் கா.சு. பிள்ளை ஆகியோராவர்.

இவருடைய முனைவர் பட்ட ஆய்வினைப் பாராட்டி வையாபுரி பிள்ளை அவர்கள்.

> 'ஆய்வாளரின் ஆழ்ந்த படிப்பறிவையும், கூர்த்த ஆய்வறிவையும் அறிதற்குரிய சான்றாக அவர் படைத்த ஆய்வேடு திகழ்கிறது. பேராசிரியர், நச்சினார்க்கினியர் கருத்துகளின்மீது திறனாய்வுப் பார்வையைச் செலுத்தியிருப்பதும் தம் சொந்தக் கருத்தினை ஆங்காங்கே வழங்கியிருப்பதும் ஆய்வாளரின் ஆய்வுப் புலமையை நன்கு உணர்த்தும்

என உரைத்திருப்பதனை உயர்ந்த பாராட்டாகக் கருதலாம்.

இந்த ஆய்வேடு பற்றிய கருத்தை பண்டர்கர் கீழ்த்திசை நிறுவனத்தைச் சார்ந்த பேராசிரியர் வி.எஸ். சுக்தங்கர் கீழ்க்காணுமாறு தந்துள்ளார்.

> பெரிதும் சுவை பயக்கக் கூடிய இந்த ஆய்வு இந்தியாவில் ஓரங்கட்டப்பட்ட ஒரு பொருண்மை பற்றியது. தொல்காப்பியத்தின் சாலப் பழமையை ஒரு வகையில் உணர்த்துவதோடு எட்டுத்தொகையில் அமைந்துள்ள புறநானூறு முதலானவற்றையும் அவ்வகையில் தொடர்புபடுத்தி ஆய்ந்துள்ளது. மேலும் யாப்பருங்கல ஆசிரியர், காக்கைபாடினியார், அவிநயனார் முதலானோர்க்கிடையேயாப்புத்தொடர்பானஒப்புமைக்கூறுகளை அறிவதற்கும் துணைபுரியக்கூடியது

எனப் பாராட்டியுள்ளார்.

அ.சி தம் ஆய்வேட்டின் முன்னுரையில் தம்மால் முதன்முதலாக இத்துறையில் பதிவு செய்துள்ள ஆய்வுக்குறிப்புகளைக் கீழ்க்காணுமாறு தருகிறார்:

பண்டைக் காலத்தில் அகவலின் ஈற்றயலடி முச்சீர் பெற்றிருப்பது அதன் தனித்தன்மையைக் காட்டுவதாகும்.

தொல்காப்பியத்திற்குப் பிறகே இணைக்குறள் ஆசிரியம் வழக்கத்திற்கு வந்தது.

தொல்காப்பியர் கூறியிருக்கும் மண்டில யாப்பு ஆசிரியத்தின் ஒன்றான நிலை மண்டிலத்தைக் குறிக்காது. ஆயின் அராகம் கலிப்பாவின் ஒரு பகுதியாகும்

பண்டைத் தமிழில் நிலைமண்டில ஆசிரியம் இருந்ததில்லை.

ஏ என்ற எழுத்து மட்டுமே பண்டை நாளில் ஆசிரியத்தின் ஈற்றில் சில சமயங்களில் இதற்குப் பதிலாக, ஓகாரம் இடம் பெற்றிருந்தது. சில சமயங்களில் ஈகாரமும் இடம் பெற்றது.

அகவலால் மட்டுமே பாடப்பெற்றது புறநானூறு என்ற கருத்திற்கு மாறாக, அதில், யாப்பருங்கல விதியின்படி மூன்று வஞ்சிப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

நேரிசை வெண்பாவைக் காட்டிலும் இன்னிசை வெண்பா காலத்தால் முற்பட்டது.

ஓசைப்பிரிவுகளில் ஏந்தல், தூங்கல், ஒழுகல் அல்லது பிரிந்திசை ஆகியவை யாப்பருங்கலம் மற்றும் காரிகை உரைகளின் காலத்திலிருந்துதான் தொடங்குகின்றன.

வெண்கலிக்குரிய மேற்கோள் பாடல்களாகப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் காட்டியுள்ளவை தொல்காப்பிய வரை யறைப்படி, உண்மையில் கொச்சகக்கலிப்பாவாகும். இதற்கான விளக்கம் இங்குத்தரப்பட்டுள்ளது.

வெண்கலி, கலிவெண்பா ஆகிய இரண்டும் வெவ்வேறானவை என நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் தவறாகக் கருதியுள்ளமை தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பின் வந்த வீரசோழியம்,தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் ஆகியனவும் இத்தவறைத் தொடர்ந்தன.

யாப்பருங்கலம் கூறும் கொச்சகம் தொல்காப்பியர் கூறியுள்ள கொச்சக ஒரு போகினை மட்டுமே குறிக்கும்.யாப்பருங்கல ஆசிரியர் கொச்சகக் கலியைக்கூறாமல் தவிர்த்திருப்பது தவறானது. இதனால் பிற்றைக் காலத்திய யாப்பியலார் யாவரும் கொச்சகக் கலிப்பாவின் இருப்பு நிலையை ஆராயாது, தவிர்த்துள்ளனர்.

முன்னர்க் கலிப்பாவில் பயின்றுவந்த சில மூவடிப் பாவினின்றும் பிற்காலத்தில் ஆசிரியத் தாழிசை கிளைத்ததாகலாம்.

கலிப்பாவின் சில ஈரடிப்பாவினின்றும் வெண்செந்துறைப் பாக்கள் தோன்றியதாகலாம்

கலிப்பாவின் நான்கடியான் இயன்ற உறுப்புகளிலிலிருந்து கலிவிருத்தம் தோன்றியிருக்கலாம்

சிலம்பின் வரிப்பாடலிலிருந்து அறுசீர் விருத்தம் தோன்றியிருக்கலாம்.

சிலம்பின் காதை ஏழில் உள்ள சில பாடல்களிலிலிருந்து பிற்காலத்திய ஆசிரியத்துறை தோன்றியிருக்கலாம்

தாழிசையின் வளர்ச்சியிலிருந்து வெண்டாழிசை, வெண்செந்துறை ஆகியன தோன்றி இருக்கலாம். அது போன்றே கலிப்பாவில் காணப்படும் அம்போதரங்கத்திலிருந்து வஞ்சித் துறை தோன்றியிருக்கலாம்.

கலிப்பாவில் காணப்பெறும் ஒருவகைத் தாழிசையினின்றும் குறட்டாழிசை தோன்றியிருக்கலாம்

சீவகசிந்தாமணியில் காணப்பெறும் சில பாடல்கள், கட்டளைக் கலித்துறை என்ற தனிப்பா வடிவமாகக் கருதத்தக்கதாய் உள்ளன. ஐஞ்சீரடி நான்காய் வந்து அடிதோறும் இறுதிநாற்சீரடிகள் வெண்பா யாப்புத் தழுவி வருவதும், ஈற்றடி இறுதிச்சீர் ஏகாரம் பெற்று, நேராயின் 14 எழுத்துகளையும், நிரையாயின் 15 எழுத்துகளையும் பெற்றுவரும். ஒன்பதாம் திருமுறையில் இப்பா வடிவம் காணப்படுகிறது.

சிந்தாமணியில் பாவினங்கள் பயின்றுவரவில்லை என்ற நச்சினார்க்கினியர் கூற்றுத் தவறானது. ஆசிரியத்துறை, வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம், கலி விருத்தம், கலித்துறை மற்றும் பல ஆசிரிய விருத்தங்கள் அதில் காணப்படுகின்றன என்பதனை நான் எடுத்துக்காட்டியுள்ளேன்.

தமிழகத்தில் செய்யுட்பொருத்தம் என்பது கடைச்சங்கத்திற்கு நீண்ட காலங்களுக்குப் பிறகு புகுந்தது. செய்யுட் பொருத்தம் கூறும் முதற்பெரும் இலக்கண நூலான

பன்னிரு பாட்டியல் போலியானது. இயற்கை விதிகளோடு கூடிய தமிழ்மொழி இலக்கியத்தில் அது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

அ.சி தாம் அறிந்தவரையில் மேலே கண்ட யாப்பியல் செய்திகளைத் தம் ஆய்வேட்டில் முதன்முதலாக நிலைநாட்டப்பட்டிருப்பதாக இவ்வகையில் கூறியிருப்பது பின் எழுதப்பட்ட ஆய்வேடுகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது.

இந்த ஆய்வேட்டில் அ.சி தம் முன்னுரையில் தமிழ் இலக்கிய. இலக்கணப் பரப்புக்குறித்துச் சில கருத்துகளை முன் வைக்கிறார்.

> கற்றறிந்த உரையாசிரியர்களைப் புகழ்ந்துரைக்கும் அறிஞர் பலர் உளர். அவர்கள் புகழ்ந்துரைப்பதில் நான் குறுக்கிடவில்லை. உரைகாரர்களின் கருத்துகள் பிழையாகக் கூட இருக்கலாம் என்று அறிஞர்கள் சினம் கொள்ளாமல். நடுநிலையில் நின்று ஆராய்வாளர்களாக ஏனெனில். அவ்வாறு சினம் கொள்வதற்குரிய சில யாப்பியல் கோட்பாட்டு வரலாற்றை எழுதப்புகும்போது ஊகமாக இருக்கும் சிலவற்றை ஏற்றுக்கொள்ளும்படி நேர்ந்து விடுவதுண்டு. தற்போதைக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்களைக்கொண்டே அவற்றை அணுக வேண்டியுள்ளது. வேறு வழியில்லை.

என்று அவர் தெரிவித்திருப்பது கவனத்திற்குரியது. அவர் காலத்தில் உரையாசிரியர்கள் கருத்துகளை மறுத்தல் என்பது சற்று சிந்திக்கப்படவேண்டிய ஒன்று என்பது புலனாகிறது. அ.சி நச்சினார்க்கினியர் கருத்துகளைத் தம் ஆய்வேட்டில் தக்க காரணங்களால் மறுத்துரைப்பதையும் காணலாம்.

தொல்காப்பியம் வழி யாப்பியலில் அடங்கும் எழுத்து. அசை. சீர். அடி. ஒலி இயைபு அல்லது தொடை. ஆசிரியம். வஞ்சி. வெண்பா. கலிப்பா. பாவினங்கள். செய்யுட்பொருத்தம் ஆகியவை பற்றி ஆராய்கிறார். ஆசிரியப்பா. அதன் வகைகள். ஆசிரியத்தின் ஈற்றெழுத்து ஆகியவற்றை விரிவாக ஆய்ந்து தம் கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அகவலின் கீழ் அல்லது மற்ற குறிப்பின் கீழ் அவர் ஏந்திசை. தூங்கிசை. ஒழுகிசை ஆகிய ஆசிரியத்தின் வகைகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டாரில்லை. இவ்வகைகள் யாப்பருங்கல ஆசிரியர் காலத்திலோ. யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் காலத்திலோ கூட அறிமுகமாகவில்லை எனத் தெரிகிறது என்று ஆசிரிய யாப்பு வகை பற்றிய தமது கருத்தை நிலைநாட்டுவர். ஆசிரிப்பாவின் அடி பற்றி உரையாசிரியர் இளம்பூரணர் காட்டியிருப்பது பொருத்தமாகப்படவில்லை என்று கருத்துரைப்பர். தொல்காப்பியர் காலத்தில் நிலை மண்டிலம் வழக்கத்தில் இருந்ததற்கான குறிப்புகள் இல்லை என்பதையும். அவர் மண்டில யாப்பு என்று சுட்டி இருப்பதனை நிலைமண்டிலம் என்று தவறாக உணரப்பட்டுள்ளது என்றும் கருத்துத் தெரிவிப்பர்.

இருசீரடிகள் ஒவ்வொன்றும் நாலசை பயின்று வந்துள்ள புறப்பாடல் ஒன்றனைச் சுட்டிக் காட்டி அது போன்ற நாலசைச் சீர் பயின்று வந்துள்ளமை தொல்காப்பியத்திற்குப் பின்னும். யாப்பருங்கலக் காலத்திற்கு முன்னும் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று ஆய்ந்துரைப்பர்.

தொல்காப்பியர் காலத்தில் நாலசைச் சீர் வழங்கியிருக்குமானால். அவர் அதனைத் தம் நூலில் குறிக்காமல் இருந்திரார் என்ற கருத்தினையும் இது தொடர்பாகச் சிந்திக்கின்றார்.

வெண்பா குறித்துச்சிந்தித்துள்ள அ.சி அதன் ஓசையை ஏந்திசை, தூங்கிசை, ஒழுகிசை என மூவகையாகப் பகுத்துள்ள பகுப்புப் பொருந்துவதன்று என்றும், பரிபாடலில் பன்னீரடிகளுக்கு மேல் வந்த வெண்பாக்கள் சில காணப்படினும் அவை தமக்கான வேறுபட்ட வடிவத்தைக் கொண்டுள்ளதால், அவற்றை வெண்பா வடிவத்துள் அடக்கவியலாது என்றும், பன்னீரடிகளுக்கு மேல் அதன் எல்லை இல்லாத நிலையில் தொல்காப்பியர் சுட்டியிருப்பாரா என்பது ஐயமே என்றும் தம் கருத்தைப் புலப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

ஒத்தாழிசை, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலி முதலியவற்றைப் பற்றிய சில தகவல்களை ஆய்வியல் நோக்கில் விண்டுரைத்து அவற்றை ஏனைய யாப்பியல் நூல் கருத்துகளோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். பாவினங்கள் பற்றிய விரிவான இயல் அகலாய்வும், ஆழ்வாய்வும் மிக்கது.

இறுதி இயலான செய்யுட் பொருத்தம் அவரது யாப்பியல் கண்ணோட்டத்தை ஆழ்ந்து காணத் துணை செய்கிறது. தமது துணிவான கருத்துகளால் சிலவற்றைக் வன்மையாக அவர் கண்டித்திருப்பது அக்காலத்திய போக்கில் ஒரு மாறுபட்ட பார்வையைத் தந்தது. பன்னிருபாட்டியல் நூலில் இடம்பெற்றுள்ள கண்மூடித்தனமான கருத்துகளை அவர் துணிந்து மறுத்துள்ளதை அவரது ஆய்வேட்டில் காணமுடிகிறது.

பன்னிரு பாட்டியல் கருத்துகளை அவர் திறனாய்ந்து அறிவுக்குப் பொருந்தாத நிலையைச் சுட்டியுரைத்திருப்பது எண்ணத்தக்கது.

'ஆண்பால் உயிரெழுத்து எனவும், பெண்பால் உயிர் மெய்யெழுத்து எனவும், அலிப்பால் மெய்யெழுத்து எனவும் வழங்கப்பட்டிருப்பதனை உணர்த்துகிறார். மேலும், உயிரெழுத்து பிரமனால் உருவாக்கப்பெற்றது. தேவர்கள் ஒன்பதின்மர் மெய்யெழுத்தைத் தோற்றுவித்தனர். பன்னிரு உயிர்களும், க, ங, ச, ஞ, ட, ண ஆகியனவும் பார்ப்பனருக்கு உரியன. த, ந, ப, ம, ய, ர ஆகியன அரசர்க்கு உரியன. ல, வ, ற, ன ஆகிய எழுத்துகள் வணிகர்க்குரியன ன, ழ, ள ஆகியன சூத்திரருக்கு உரியன என்று சொல்லியிருக்கும் கருத்து எள்ளி நகையாடக்கூடியது.'

தொல்காப்பியர் எழுத்துகளை இவ்வகையில் பகுத்திருப்பதற்கு உடன்படார். அவர் இயற்றிய இலக்கணத்தில், மொழியினிடத்து உண்மையான நம்பிக்கை வைத்திருந்தார். இது தமிழ் மரபிற்கு முற்றிலும் மாறானது. இது வேற்றவர்களால் உட்புகுத்தப்பட்டது என்று அறுதியிட்டுக் கூறுவது எண்ணதக்கது.

'தமிழகத்திலும், தமிழிலக்கியத்திலும் நிலவிய உறவு நிலைகளைக் கடந்து பன்னிரு பாட்டியல் சாதி பாகுபாட்டினை ஏற்றி, வெண்பா பார்ப்பனச் சாதிக்குரியது. அகவல் அரச சாதிக்கு உரியது. கலிப்பா வணிகச் சாதிக்குரியது. வஞ்சிப்பா வேளாளர் சாதிக்கு உரியது எனவும் சுட்டியிருப்பது அபத்தமானது' என்று கருத்துரைக்கிறார்.

யாப்பியல் பற்றிய ஆய்வுச்சிந்தனையில் அவரது கருத்துகள், அவருக்குப் பின்னர், மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு மேலாய்வுக்கு உரியவாயின என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆய்வு என்பது ஒரு தொடரோட்டம் என்பதும், அதில் மேலாய்வுக்கு இடமளித்தல் வரவேற்கப்படவேண்டும் என்பதும் ஏற்புடையன அல்லவா! அ.சி அவர்களின் முனைவர் பட்டம் பற்றி அவருடைய மாணவர் வ.சுப. மாணிக்கம்,

என் பேராசிரியர் அ.சிதம்பரநாதனார் 1942 இல் அறிஞர் என்ற டாக்டர் பட்டம் பெற்ற முதல் தமிழ்ப் பேராசிரியர் ஆவார். இங்ஙனம் தமிழ்த்துறையில்

நுண்ணாய்வு செய்து ஆய்வு நூல் பணித்துப் பல்கலைக்கழகத்தின் உயரிய பட்டப்பேறு எய்தலாம் என்று இப்பெருமகன் ஓர் ஊற்றுக்கண்ணைத் திறந்துவிட்ட பின்னரே. தமிழ்ப் பேராசிரியர் பலர் பல பல்கலைக்கழகங்களிலும் தமிழ்க்கள ஆய்வு செய்து இப்பட்டம் பெறலாயினர். இன்று தமிழ்த்துறையில் முந்நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் உளரெனில் அதற்கு வழிவகுத்த கண்ணாளர் சிதம்பரநாதனாரே. அறிஞர் பட்டம் எவ்வாறு புதியதோ அவ்வாறே அவர் மேற்கொண்ட தமிழ் யாப்பு என்ற ஆய்வுப் பொருளும் புதியதாகும்.

என்று தம் ஆசிரியரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

ஈழத்தறிஞர் கலாநிதி கா. சிவத்தம்பி,

நமது இலக்கிய வரலாற்று நூல்களில் இத்தகைய பிற கலையிணைப்பு நோக்கின்மையாற் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள துறை யாப்பு வளர்ச்சி பற்றியதாகும். இத்துறையில். மிக்க சிறப்புடைய ஆய்வென்று கூறப்படத்தக்க ஆய்வு எதுவும் இல்லையென்று கூறலாம். அ.சிதம்பரநாதச் செட்டியாரின் கலாநிதிப் பட்ட ஆய்வினை ஓரளவுக்கு இப்பொது நிலைக்கான புறனடையாகக் கொள்ளலாம் என்பர் முனைவர் பொற்கோ.

யாப்பு பற்றி அவர் எழுதிய ஆய்வு நூல் இன்றைக்கும் ஒரு சிறந்த நூலாக விளங்குகிறது' என அ.சி யின் யாப்பியல் ஆய்வினைப் புகழ்ந்துரைப்பர்.

## 6. சிதம்பரநாதனாரின் மொழிநடை

அ.சி அவர்களின் தொடக்க கால மொழிநடை, பண்டித நடையாகவே இருந்துள்ளது. அதற்குக் காரணம் அவருக்கு முன்பிருந்த தமிழறிஞர்களின் நடைப்போக்கே எனலாம். மறைமலையடிகள், திரு.வி.க, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார் ஆகியோரின் நடை அவ்வாறு இருந்தமையே அ.சி அவர்களுக்கு அத்தகையதொரு நடையைப் பின்பற்றத் தோன்றியிருக்கிறது.

அவர் காலத்தில், கடுமையான பண்டித நடையிலேயே பலரும் எழுதி வந்திருப்பினும் அந்நடையிலிருந்து மாறுபட்டு எல்லோருக்கும் புரியும்படியான நடையில் எழுத வேண்டும் என்ற ஆர்வமும் இருந்துள்ளது. திரு.வி.க நடையைக் கடுமையான நடை என்று சொல்ல முடியாவிட்டாலும், சிறுசிறு தொடர்களில் வாக்கியங்களில் இனிமையான சொற்களைப் பெய்து தம் நடையை வெளிப்படுத்தியிருப்பதனை அறியலாம். திரு.வி.க நடை, மு.வ. நடை என்று தனியாகச் சுட்டிச் சொல்வது போல, அ.சி. நடை என்று இனங் குறித்தற்கு அரிதாக உள்ளது.

அ.சி இலக்கியக் கட்டுரை நூல்களுள் முதல் நூலாக வெளிவந்த கட்டுரைக் கொத்தில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் கடுநடையாகவே இருக்கக் காணலாம். சிறுசிறு வாக்கியங்களைக் காட்டிலும், அவர் நீண்டதொரு தொடர் நடையில் எழுதியிருப்பதைக் காணலாம். அத் தொடர்களைச் சங்கிலித் தொடரான நடை என்று நவிலலாம். வினையெச்ச அடுக்கிலமைந்த தொடர்கள் அவரது தனித்திறத்தைச் சுட்டுவதாகக் கருதலாம். 'சுற்றுப் பிரயாணங்களும் பயனும்', என்ற கட்டுரையில்,

யாத்திரை செல்லுங்கால், மனைவியையும் அழைத்துச் சென்று நீராடி க்ஷேத்திரத்தைத் தரிசிக்காவிட்டால் புண்ணியமில்லையென்று பல நூல்கள் நுவலுவது பெண்பாலரும் அத்தகைய அறிவு வாய்க்கப் பெற்றவராகவேண்டும் என்னும் நேரிய கருத்தினாலன்றோ? எனவே, சிதம்பரத்தைச் சேவிக்க முத்தியென்று பலர் அங்குப்போவதற்கும், பள்ளி கொண்ட பரமனைப் பார்க்கலாமெனச் சீரங்கத்திற்குச் சிலர் செல்வதற்கும், பட்டினத்தார் மணலிற் புதைந்து கொண்ட திருவொற்றியூரேகித் திருத்தியாகேசரைத் தரிசிக்கலாம் எனப் பக்தர் பலர் அடைவதற்கும், வடலூர் ஞானசபை, சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூர், கதவு திறக்கபட்ட திருமறைக்காடு முதலான இடத்திற்கு ஆன்ம கோடிகள் நண்ணுவதற்கும், கங்கை கலக்கும் மகாமகக்குள ஸ்நானங்கருதிக் கும்பகோணம் குறுகுவதற்கும் உள்ளூர ஓர் அருங்கருத்துப் பொதிந்திருக்கிறது என்றால் அது பிழையன்றே

(க. கொ. ப. 25)

இந்தத் தொடரில் அவர் வடசொற்களை மிகவும் பெய்திருப்பதோடு, வினையெச்ச அடுக்களைப் பயன்படுத்தி, நீண்ட ஒரு தொடராக அமைத்திருப்பதனை அவருடைய தொடக்க காலத்திய நடையாகக் கருதமுடிகிறது. வடசொற்களைக் கலந்து எழுதுவதனை அன்றைய கால கட்டத்தின் போக்கு என்றாலும் அ.சி போன்றவர்கள் அவ்வாறு எழுதி இருப்பது நெருடலாக உள்ளது. இவ்வாறான தொடர் நடையில், என்றும், ஆதலாலும், கொண்டும் என்பன போன்ற சொற்களால் நீண்ட வாக்கியங்கள் அமைந்து இருப்பதைப் பார்க்கலாம்.

முதியோர் இளைஞராக இருந்த ஞான்று என்ற நினைத்தார்கள்? அவர்தங்காலத்து முதியோர் பழுத்த அறிவிலிகளென்றும், வெறும் ஆமைகளென்றும், பழக்க வழக்கச் சங்கிலியாற் கட்டப்பட்டவ ரென்றும், முன்னேற்றத்திற் கருத்தில்லாதவரென்றும், பயனில்லா முட்டுக்கட்டைகள் என்றுந் தானே அவர்கள் நினைத்தார்கள்?

( க. கொ. ப. 9)

எனத் தொடர் நடையை நீண்ட வாக்கியமாக எழுதிச் செல்வர். இது போல, தொடர் நடை படிப்பதற்குச் சற்றே சோர்வு தருவதாயினும் அஃது அக்காலத்திய நடை என்பதனை எண்ணி அமைதி அடையலாம். ஆதலாலும் என்ற சொல்லினைக் கூட்டு வாக்கியமாக அமைத்து அவர் பயன்படுத்துவதும் இப்படிப்பட்ட தொடர் நடையே. அது கீழ்வருமாறு

மன்னனுக்குக் கொடுக்கும் பகுதி அம்மன்னனால் ஒவ்வொருவருந் தாந்தம் அடையும் சில நலன்களைக் கருதியளிக்கப்பட வேண்டியிருப்பதாலும், ஒக்கலுந்தனக்கும் செலவிடப்படும்பொருள் உண்மையிற்பிறர் பொருட்டுச் செலவிடப்படுதலில்லை யாதலாலும், தென்புலத்தார்க்குந் தெய்வத்திற்கு மென்றுநினைத்து, செய்யப்படுபவை அவ்விரு பகுப்பாராலுங் கண்கூடாக ஏற்கப்படுதலில்லையாதலாலும், ஆனால் விருந்தினர்க்குச் செய்பவையோ தன்னையன்றிப் பிறரைச்சேர்வதோடன்றிக் கொள்வோரை நேரிற் கண்டுகொடுக்கக் கூடியதாயிருப்பதாலும், விருந்தோம்பல் சாலச் சிறப்புடையதாகவே கருதப்பட்டு வருகிறது. (க.கொ ப. 61)

இலக்கியத் தொடர்களை நினைவூட்டிச் செல்லுமாறு அமைந்ததொரு தொடர் நடைக்கு ஒரு சான்று :

காவலன் செங்கோலோச்சித் தன் குடிகளைக் காவானாயின் அவனாட்டுஆநிரைகளை வேற்றுப்புலஞ்சேர்ந்த பசுக்களின் பால் குன்றும்அன்றியும் வேந்தனது காப்பில்லாமையால் அவனாட்டுள்ள ஆன்கள் குறைவுபடும். அதனால் ஆபயனுங் குன்றும்.குடிபுறந்தரூஉஞ் செங்கோலனில்லாக்கால் குடிகளும் தத்தந் தொழிலை ஒழுங்குறச் செய்யார். (க. கொ. ப.71)

என்றவிடத்து இலக்கிய நடையோடு அந்தாதி போன்றதொரு தொடராக்கத்தைக் காணலாம். இதே போன்றதோர் அமைப்பினை 'மாதவியின் கானற்பாணி' என்ற கட்டுரையிலிருந்தும் எடுத்துக் காட்டலாம்.

மாதவி ஊடிப் பாடிய கானற் பாணியைக் கேட்டுக் கோவலன் அவளைவிட்டுப்பிரிந்து, குலக்கொடி கண்ணகியொடு மதுரை சென்றான். அவன் மதுரை செல்லவில்லை என்றால் அவன் கொல்லப்பட்டிருக்கமாட்டான். கொல்லப்படவில்லை என்றால், கண்ணகி மதுரையை அழித்துச் சேரநாட்டிற் காலெடுத்து வைக்கப் போவதில்லை. அவள் அங்குச் செல்லவில்லை என்றால், அவளுக்காகக் கோயில் எடுக்க எண்ணியிரான் செங்குட்டுவன். கோயில் அமைக்க அவன் கருதவில்லை யென்றால், கண்ணகி சிலைக்காக அவன் வடஇமயம் சென்றிருக்க மாட்டான். வடதிசை செல்லவில்லை எனின், கனக விசயர்தம் தலைகள் நெரியப் போவதில்லை. (இ. இ. ப. 51)

அ.சி தாம் எடுத்துரைக்கும் செய்தியையோ அல்லது செய்யுளையோ அழகுறவும். நேர்த்தியாகவும் விரித்துச் சுவை படக்கூறுவர். இதனைக் காட்சி நடை எனல் தகும். 'சென்னைக் கடற்கரை' என்ற கட்டுரையில் அவர் செய்தியை வருணனை கலந்து கூறியிருப்பினும் அதில் காணலாகும் காட்சிகள் வியத்தற்குரியன. அவரது கட்டுரை வன்மையின் திறம் அதில் வெளிப்பட்டுள்ளது. இக்காட்சி நடையைச் செய்திநடையாகவோ அல்லது நடைச் சித்திரமாகவோ கருதலாம்.

அ.சி இக்கட்டுரையை அவர் எழுதும் போது மணிமேகலையில் வரும் மலர்வனம் புக்க காதை அவருக்கு நினைவு வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் இருக்கிறது. அதில் வனத்தினூடே வழியிடைக்காட்சி இடம் பெற்றுள்ளது. இதில் கடற்கரைக் காட்சி இடம் பெற்றுள்ளது. அங்கு உலவும் மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டும் போது எள்ளல் சுவையும் கலந்து வருவது கவனிக்கத்தக்கது. இதில் வரும் காட்சி நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு. கடற்கரையில் மனிதர்கள் ஒருவரை மற்றவர் சந்திக்கும் சூழ்நிலையைக் கீழ்வருமாறு காட்டுவர்.

வண்டிகளில் போவோரை யறியாத பலரும், அவரால் அறிந்துகொள்ளப்படாத பலரும், அறிமுகஞ்செய்து வைக்கப்படாத பலரும், "கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்கலாம்" என நினைத்தும், "காரில் போகுமவரும் கும்பிடு போட்டாரல்லவா?"

என்ற வீண்பிதற்றலால் மகிழக் கருதியும், கும்பிடு போட்டுக் கும்பிடு வாங்குவதையும், சிற்சில சமயங்களில் மறு கும்பிடின்றித் தலைகுனிந்து செல்வோரையும் காணலாம். மோட்டாரிற் போவோர்க்கே யன்றிக் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள கற்றரையின் மீது கடவுள் கொடுத்துள்ள இருகால் மோட்டாராற் செல்லுஞ் சிலருக்கு வேறு சிலர் கைம்மாறு கருதாது கும்பிடு போடு வதையும்,கரக் கம்பஞ் செய்து சிரக் கம்பம் பெறுவதையும், அஞ்சலி செய்து அரைக்கும்பிடு பெறுவதையும், அரைக்கும்பிடு கொடுத்துத் தரைக்கும்பிடு வாங்குவதையும், கைக்கும்பிடு கொடுத்துக் கண்கும்பிடு வாங்குவதையும், கரக்கும்பிடுகொண்டு மூரற்கும்பிடுவாங்குவதையும் கண்டு எத்தனை விதமான கும்பிடு ஐயா!'' என்று சொல்லாவிட்டாலும் நினைப்பார் பலர் ... .' (க.கொ. ப. 30-31)

கும்பிடு போடுவதில் எத்தனை எத்தனை வகைகள் உள்ளன, எந்தச் சூழலில் அவை எவ்வெவ்வாறு வெளிப்படும் என்பதனைச் சுவைபடவும், எள்ளல் இழையோடவும் காட்டியுள்ளார்.

கடற்கரைக் காட்சிகள் படிப்போர்க்குச் சுவை பயக்கும் விதத்தில் அமைந்திருப்பதோடு அவரது நடையில் எதுகை மோனை இணைந்து வருவதையும் காணமுடிகிறது. இக்கட்டுரைக்கண் பிறிதொரு காட்சியில் எதுகை மோனை இயைந்து வருவதைக் காணலாம்.

> பருத்த வயிறு விரியப் பட்டாடை தரித்துப் பலங்கொள்ள நடப்பார் சிலர்;பாத கோசம் பதிந்த அடிகளிலே அடிபுதை அரணம் பூட்டிப் படிமிசையுள்ள தூளி மடி மீது கொள்வார் போல,நீண்ட கால் சட்டை, சிறு கைக்குட்டை, கழுத்திலே டை இவற்றோடு நடப்பார் சிலர்;... பாலாடை யன்ன மேலாடையாக விளங்கும் 'மல்'லையும், கல்கத்தா சிலிப்பரையும், தரித்துப் போவார் சிலர்; அன்றன்று தேய்த்த அழகான மூவாடை தரித்துப் போவார்சிலர்;உடுப்பவை இரண்டே என்று நக்கீரனாரது மொழியைப் பொய்ப்பிக்கச் செய்யமன மில்லாதவர் போன்று ஈராடையே உடுத்திப் போவார் சிலர்; "ஆடையில்லா மனிதர் அரை மனிதர்'' ஆதலால், ஆடையின்றிப் போவார் ஆங்கு அருமையே!'' (க.கொ., -32-33)

உண்மை காணல் என்ற கட்டுரையில் காணுறும் அவரது மொழி நடை அழகிது. செந்தமிழ்ச் சொற்களைப் பெய்த செவ்விய நடை அது. ஆறுகள் பேசுவது போன்று அதனை அமைத்துள்ளார்.

> கடலின் கருத்திற்கிணங்க ஆறுகள் பலவும் "மனிதர் காள்! எம்மிடத் தோடு நீரற்ற விடத்தும் ஊற்று நீரான் யாமுமக்குதவ வில்லையா? அது போல நீவிர் பொருளற்ற விடத்தும் இயைந்தவளவு ஏன் பிறர்க்குதவலாகாது? யாம் ஆண்டாண்டுதோறும் இடும் மேடும் மடுவும் போன்ற தல்லவா உமது செல்வம்! எம்மிடத்துத் தோன்றுங் குமிழிபோலும் வானத்திடைத் தோன்று மின்னலைப் போலும் நிலைத்தலில்லாத செல்வத்தை உடாதும், உண்ணாதும், உம்முடம்பு செற்றுங் கொடாத நல்லறமுஞ் செய்யாதும், உய்த்தீட்டி யிழக்குந் தேனீயைப் போன்று, கொன்னே காத்தே னிழக்கின்றீர்..... கங்கையாடிலென், காவிரி
>
> யாடிலென், ஓதநீர்க் கடலாடிலென், எங்கு மீசனெனாதவர்க் கில்லையே அவற்றானாய பயன் என்பதை அறிமின். எம்மைக்கடக்க விரும்பும் நீவிர் தோணியியக்குவோன் கீழ்ப்பாலொருவனென்று கருதாது அத்தோணியிலேறிச்

செல்லுதல் போல அறிவுப் பெருக்கத்தில் நீவிர் விருப்ப முற்றிருப்பிராயின், கற்றோனைக் கீழோனென்றும், தாழ்ந்தோனென்றும் நினையாது அவனைத் துணையாகக்கொண்டு கல்வி கற்பீராக. எம்மைச் சேர்ந்த ஊரங்கணநீர் (சாக்கடைத் தண்ணீர்) புனிதமடைவதைப் போன்று கல்வியில்லாதவரே யாயினும் நீவிர் கல்விவல்ல நலமாட்சி நல்லோரைச் சேர்வீராயின் பெருமை பெறுவீர்.

(க.கொ .ப 72)

இவ்வுரைநடை, கவிதை போன்றிருத்தலோடு பெரும்பாலும் வடசொல் கலவாது எழுதும் போக்கினைக் காட்டுகிறது. இலக்கியங்களிலிருந்து சொற்களையும், தொடர்களையும் மிடைந்து எழுதுவதனை அவரது தொடக்ககாலத்தே எழுதப்பட்ட கட்டுரைகளில் காணமுடியும்.

உவமை நடையோடு கூடிய அறக்கருத்தை வலியுறுத்தும் அவர் கீழ்க்காணும் வகையில் தம் கருத்தினை வெளிப்படுத்துவர்.

கரும்பை நுனியிலிருந்து அடிநோக்கித் தின்று சிறிது சிறிதாகச் சுவை மிகுதியாக அடையப் பெறுதல் போலச் சான்றோராற்கூறப்படும் கடுஞ்சொற்களை முதலில் பெற்று நாளடைவில் அவரிணக்கத்தால் வரும் பெருமையையும் இன்பத்தையும் அடைய முயலவேண்டும். இனிய கரும்பிற் பூத்த பூ நறுமணம்பெறாததால் விரும்பப்படுதலில்லை யாதல் போல, ஒண்குடியிற் பிறந்தவரேயாயினும் நல்லொழுக்கமில்லா திருப்பரேல் அவர் சான்றோரால் விரும்பப்பட மாட்டார்.....கரும்பை நன்றாயிடித் தாலும் இனிய சாறே அதனினின்று வெளிப்படுதல் போல, நல்லோரைப் புடைத்தாலும் அவரிடம் இருந்து இன்சொல்லே வெளிவரும்.கரும்பிலிருந்து வரக்கூடிய சாற்றை யெடுத்துக் கொண்டபின் சக்கையை விட்டுவிட மனம் வருந்தாதது போல, இவ்வுடம்பினால் பெறற்குரிய அறம் பொருள் இன்பத்தைப் பெற்றுக்கொண்டபின் இவ்வுடலை விட்டுவிட்டோட வருந்தோம். ஆதலின், அறநெறியிலேயே பொருளீட்டி அதனால் வருமின்பத்தை நாமுந் துய்த்துப் பிறரையுந்துய்ப்பித்தல் நமது கடமையாகும்.
(க. கொ. ப.76- 77)

கதை போலக் கூறிச் சென்று விரிக்கும் கட்டுரையான 'பெண்ணரசு' என்ற கட்டுரையின் தொடக்கம் இலக்கிய நடையுடன் எதுகை மோனை விரவி நிற்கும் நடையாகும்.

சிவானந்த விளைவு என்னுமோரூரிலே பவானந்த மென்றொருவனிருந்தான்.அவன் மனையாளின் கண்கள் மைகண்டறிந்தில; அவள் அடிகள் செம்பஞ் சறிந்தில; இரு கைகளோ வரிவளை யறிந்தில; கூந்தலோ மொய்ம்மலர் அறிந்திலது; அவள் மார்போ பாலொடு வறந்து பசியொடு வெதும்பித் தோலொடு திரங்கிச் சுருங்கியதொன்று...'நெடும்பசியென்னுங் கொடும்புலி யிரைகொள' நின்ற அம்மக்கள்' ஆயே ஆயே ஈயாய் கூழென' நின்ற காலை, அவள் கவற்சி கொண்டு கதறுவதன்றி என் செயக்கூடும் (க.கொ. ப 36-37)

இவ்வாறு செவ்விய நடையில் எழுதிவந்தவர், பின்னர் எழுதிய நூல்களில் இயல்பான நடையினைக் கால மாற்றத்திற்குத் தகுந்தவாறு மாற்றிக்கொண்டிருக்கிறார். இயல்புக்கேற்ப எதுகைமோனை ஆட்சியினைப் பிறிதொரு கட்டுரையினினின்றும்

அறியலாம். 'செல்வமும் வறுமையும்' என்னும் கட்டுரையில் காணப்படுவதான நடை கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது:

> ஒருவர் செல்வத்தின் பெருமையை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுதற்குத் தகுதியுடையவராகவும், இன்மையின் அல்லலை எடுத்துக்காட்டுதலில் வல்லவராகவும் இருத்தல் இயலும். அங்ஙனமே, வறுமையின் இடும்பையால் வருந்தி இருப்போரின் நிலையைச் செவ்வன் காட்டவல்ல ஒருவர் செல்வச் செருக்கினைச் செம்மையாக எடுத்துக்காட்டுதல் இயலாதவராக இருத்தல்கூடும்.
>
> (த. கா. உ. ப.9)

காலம் செல்லச் செல்ல ஒருவரது நடையில் மாற்றம் காணப்படுவது இயல்பு. எனினும், அ.சி காலத்திற்கேற்றவகையில் சாதாரண நடையிலும் தம் நடையை வெளிப்படுத்தி இருப்பதைக் காணலாம். சிறுசிறு தொடர்களிலான வாக்கிய அமைப்பினைக் காணுவதற்கு உரிய இடங்களும் சில.

மக்கள் எல்லாம் உழவர்கள்; இன்சொல் உழுநிலம்; ஈகை விதை; வன்சொற்கள் களைகள்; உண்மையே எரு; அன்பு பூணுதலே நீர்ப்பாய்ச்சுதல்; அறமே கதிர். விதையொன்று போடச் சுரையொன்று முளைக்கா தன்றோ? அதனால், ஈகை என்னும் வித்துக் கேற்ப, ஈகை பொருளுடைய அறமே கதிராக வைக்கப்பட்ட நயம் அறியத்தக்கது.

(த.கா.உ ப. 88)

> முன்பனிக்காலத்தில் கருவிளையும் கரும்பும் பூக்கின்றன; பிடவும் பகன்றையும் பிணிவிடுகின்றன; தோன்றியும் கோடலும் பூத்துத்தோன்றுகின்றன; பயறும் உழுந்தும் பழுத்துக் காயைச் சிந்துகின்றன; அவரை முகை அவிழ்க்கின்றன இவற்றை எல்லாம் பழந்தமிழ்ப்புலவர் கண்டறிந்து தத்தம் பாடல்களில் ஆங்காங்கே முன்பனிக் காலத்திற்கு உரியனவாகச் சொல்லி இருப்பது பாராட்டத்தக்கது.
> (மு.ப.கா ப. 3)

வினைச் சொற்களைத் தொடர்ந்தமைத்துப் பாங்குறக் காட்டும் அவர்தம் செழுமையான நடைத்திறனுக்குக் கீழ்க்காணும் வரிகள் சான்று பயக்கும்.

> தடுமாறு பிறவியை விடுமாறு முயலும் இவள் அவன் பொன்றிக் கிடக்குங்கால், அழுது, அரற்றி ஏங்கி, நெட்டுயிர்த்து எழுந்து அவனுடம்பருகே செல்ல நினைக்கிறாள். ஆனால், கந்திற் பாவை யென்னும் தூணில் நின்ற தெய்வத்தால் தடுக்கப்படுகிறாள். (த.கா.உ ப. 135)

நாடகக் காட்சி ஒன்றைக் காணுமாறு போல நிகழ்ச்சிகளைத் தம் நடையில் எளிமை தோன்ற சொற்களைப் பெய்தும், சிறுசிறுவாக்கியங்களில் வினைமுடிபுடன் பிணித்தும் உடல்மொழியோடு கூடிய நடைத் திறத்தைக் காணலாம். மானனீகை பந்தாடும் காட்சி இவ்வகையில் அமைந்துள்ளது.

> இவளுக்கும் இரண்டே கைதான். ஆயினும், வளைத்து வளைத்துப் பந்துகளை அடிப்பதை நோக்கினால், பல கைகள் உள்ளவள்போல் இவள் காணப்படுகிறாள்.தேர்ச்சக்கரத்தைப் போலச் சுழன்றுசுழன்று அன்றோ அடிக்கிறாள், நடக்கிறாள்.ஓடுகிறாள். ஒடிகிறாள், துவளுகிறாள்! பந்து எழஎழ அதனுடன் எழுகிறாள்! இவள் கை யெங்கே, கால் எங்கே, மெய் எங்கே, தெரியவில்லையே

என்கிறார்கள் சிலர். இவர்கள் கண்பட்டதுபோல, கூந்தல் குலைந்தது; மாலை சுழன்றது;மேகலை கழன்றது; வியர்வை எழுந்தது; சாந்தம்இழிந்தது. அப்போதும் பந்தடித்தலை நிறுத்தவில்லை மானனீகை. (த.கா.உ. ப. 19-20)

பெருங்கதையில் வரும் செய்யுட்பகுதியை நாடகப் பாணியிலான உரைநடையில் இவ்வாறு வெளிப்படுத்திக் காட்சியைக் கண்களுக்கு விருந்தாக்கியுள்ளார்.

அகநானூற்றுப்பாடல் ஒன்றனுக்கு விளக்கம் தருகையில் உரையாசிரியர் நடை போன்ற சாயலில் எழுதியிருப்பது காணத்தக்கது. அது நயவுரையாகவும் கொள்ளத்தக்கது.

..... ....... ..... தன்ஐயர்
காலைத் தந்த கணைக் கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்
நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகிற்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்
கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயங்கெழு வைப்பு..........

என்ற பாடலுக்கு அவர் தரும் விளக்க உரை.

"அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்" என்ற சில சொற்களால் ஓர் அழகிய, தேனூறும் சொல் பேசுகின்ற ஒரு வடிவத்தை நம் கண்முன்னே உருவாக்கிவிட்டார். "நெடுங்கொடி நுடங்கும்நறவுமலி மறுகு" என்றமையால்,இன்னின்ன பொருள் இந்த இந்தக் கடையில் விற்கப்படுகிறது என்பதை விளக்கிக் காட்டும் பெருந்தெரு ஒன்றனுள் அவள் செல்கிறாள் என்பது குறிக்கப்பட்டுள்ளது. "நறவு மறுகில்" என்றமையால் பலர் தாளாற்றிய பொருள் கொண்டு கள் குடித்துச் சென்றார்கள் ஆக, அவள் உர நெஞ்சுடன் அக்கடைகளுள் எதனையும் எட்டிப்பார்க்காமல் நெடுகச் சென்றாள் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. "பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்" என்று கூறிய வகையால் நகர மாந்தரின் செல்வச் செழிப்பும் பற்றாக்குறையின்மையும் எடுத்து இயம்பப்பட்டது. (இ.இ ப. 102-103)

இவ்வாறு இலக்கிய நடையோடு பெருமிதம் இடும் நடைநலன் கைவரப்பெற்றவராக இருந்தும், மொழி நடையில் இருவேறு கருத்துடையோர் இருப்பதைத் தம் கண்ணோட்டத்தில் ஆய்ந்து உரைப்பது சிந்தனைக்கு உரியதாக இருக்கிறது. தமிழ்மொழியில் பிற மொழிச் சொற்களைக் கலந்து எழுதும் போக்கு பற்றி எடுத்துரைக்கும் போது அவர்,

தனித்தமிழ் நடையிற் பற்றுடையராய் இருத்தல் இழுக்கன்று; அன்றியும் சிலர் பல முத்துக்களிடையே ஒன்றிரண்டு பவளங்களைஎதிரெதிராகக் கட்டி அழகு காண்டலும் ஒக்கும். அது போலப் பல தமிழ்ச்சொற்களின் இடையே இன்றியமையாத சில வேறு சொற்களை ஆளுதலும் குற்றமில்லை எனக்கூறலாம். அவ்வாறு ஆளுங்கால், தமிழொலி இயல்புக்கேற்ப அவற்றைத் திரித்துக் கொள்ளுதலே தொன்றுதொட்ட வழக்கம். (த. ஓ ப. 57)

இவ்வாறு தெரிவிக்கும் கருத்து எண்ணிப்பார்க்கவேண்டிய ஒன்றாகும். அ.சி. யின் மொழி நடையைப் பொறுத்தவரை. அவரது தொடக்க கால நடைக்கும். பின்னர் எழுதி வந்த நடைக்கும் வேறுபாடு உள்ளது. மொழித் தூய்மையைப் போற்றிச் சற்றே கடின நடையில் எழுதி வந்திருப்பினும். வடசொல் கலந்து எழுதியது தொடர்ந்துள்ளது. அதனை அறவே நீக்கி விட்டதாகச் சொல்லமுடியாது. வடசொல் கலந்து எழுதியிருப்பது தவிர்க்கமுடியாததாகவே இருந்திருக்கிறது. ஆயின். இலக்கிய நடை இயல்பான தமிழில் நடையிடுகிறது. பழந்தமிழ் இலக்கியச் சொல்லாட்சிகளை ஆங்காங்கே புகுத்தி எழுதியதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# 7. பல்வகைப் பார்வை

## வாழ்க்கை வரலாறு

வாழ்க்கை வரலாறு என்ற அளவில் அ.சி அவர்கள் மக்களிடையே மாண்புடன் திகழ்ந்த தாமசு மன்றோ, உழைப்பால் உயர்ந்த புக்கர் தி வாஷிங்டன், மன்னுயிர்க்கு அன்பரான ஆல்பர்ட் சுவைட்சர் ஆகியோரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படைத்துள்ளார். மன்றோவின் கடிதங்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளமை அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்ட வல்லது. மன்றோ பற்றிய நூல் அவரைப் பற்றிய தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. அந்த நூலின் முன்னுரையில் அ.சி குறிப்பிட்டிருப்பது கவனிக்கதக்கது.

'இந்திய சரித்திர மாலை' என்னும் ஒரு சிறு புத்தகத்தை எழுதும் நோக்கத்துடன் சிற்சில சரித்திர நூல்களை நான் படித்துவருங்கால், பெரியார் பலருடைய சரிதங்களுள் மன்றோ பற்றிய நூல் என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டது', என்று சொல்லிச் செல்கிறார். இந்தியரது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த மன்றோ பற்றி விரிவானதொரு நூலாக இது திகழ்கிறது. இந்த நூலில் மன்றோ எழுதிய கடிதங்களை மொழிபெயர்த்துத்தந்திருப்பது பாராட்டுக்குரியது.

தம் தந்தைக்கு எழுதிய கடிதங்களில் ஒன்று மொழி பற்றியது.

"குடிகளின் மொழியை யறியாத எவரையும் ஜில்லாவின் அதிகாரத்தில் வைக்கக் கூடாது. அம்மொழியைக் கற்றுக் கொள்ளும் ஊக்கம் அவருக்கு இல்லையாயின், அவர் எப்படி நல்ல கலெக்டர் ஆவர்? அம்மொழியை அவர் அறியாவிடில் கீழ்உத்தியோகஸ்தர்களுடைய ஆதிக்கம் வலுத்துப் போய் உண்மையறிய முடியா நிலை வந்து சேரும் அன்றோ?

(பெ. ம. பக் 18)

ஒருவருடைய தாய்மொழியை அறிந்து கொண்டு செயற்படவேண்டும் என்ற கருத்தினை மன்றோ வெளிப்படுத்தியிருப்பதனை அறிகிறோம். அன்பும் பாசமும் மிக்க மன்றோவின் குடும்பச் சூழல், இந்திய நாட்டில் வாழ்ந்த சூழல் முதலியவற்றை விரிவாக அறிந்து கொள்வதற்கு அவரது கடிதங்கள் உறுதுணையாக உள்ளன.

'உழைப்பால் உயர்ந்த ஒருவர்' என்ற நூல் முன்னுரையில் சொல்வது போல்,'அடிமையிற் பிறந்து, அறியாமையில் தவழ்ந்து, வறுமையில் வளர்ந்து, இடுக்கண் பலவற்றைப் பொடியாக்கி, பிறந்த குடியை உயர்த்து நிறுத்திய பெரியாருள் ஒருவரான' புக்கர் தி வாஷிங்குடன் என்பாரைப் பற்றியது எனக் குறித்துள்ளார். கவர்னர் புல்லக் என்பவரால் ஒரு பொருட்காட்சி திறந்துவைக்கப்பட்டபோது, புக்கர் பேசிய பேச்சிலிருந்து புக்கர் எந்த அளவிற்கு உயர்ந்த பண்பாளர் என்பது விளங்கவரும்.

மன்னுயிர்க்கு அன்பர் என்னும் நூல் ஆல்பர்ட் சுவைட்சர் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியது. வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைக் கூறும்போது ஆங்காங்கே திருக்குறளையும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன் இயற்றிய பாடல்களையும் இடையிடையே பெய்து தம் கட்டுரைக்குச் சுவை சேர்ப்பதைக் காணலாம். இளமைக்காலத்தே சுவைட்சர் தமக்கு உகந்த கொள்கைகள் அமைந்த ஒரு பாட்டை அட்டையில் எழுதித் தம் அறையில் தொங்க விட்டிருந்தாராம். அந்தப் பாடல் பின் வருமாறு அ.சி யால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக
மனக்கினிய கனாக்களொடும் விருப்புக்களொடும்
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!
நீ விரும்பி மனக்கொளும் குறிக்கோள் எல்லாம்
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக!
இடிவரினும் முகில்சூழினும் உயர்வன ஆகுக!
நம்பிக்கை என்னும் இன்னொளி யினாலே
மேன்மேலும் மேன்மேலும் உயர்வன ஆகுக

இந்த நூலின் ஓரிடத்தே சுவைட்சர் பிறருக்காக உழைக்கும் நோக்கோடு பிற நாட்டு இளைஞருடன் படகில் சென்றதை எண்ணிப் பார்த்த கட்டுரையாசிரியர் அ.சி. பாரதியார் கற்பனை நெஞ்சத்தோடு 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' என்று பாடிய பாடலோடு பொருத்திக்காட்டுகிறார். உலகம் முழுதும் ஓரினம் என்று சுவைட்சர் எண்ணிய உயர்ந்த கருத்தைப் பின்னணியாகக் கொண்டு அவரது வாழ்க்கை வரலாற்றை எல்லோருக்குமாகப் புரிய வைக்கிறது அந்நூல்.

வாழ்க்கை வரலாறு பற்றி இந்த மூன்று நூல்களும் பாடத் திட்டத்திற்காக எழுதப்பட்டிருக்கிறது என்பது அவற்றின் எளிமையான மொழி நடையிலிருந்து தெரியவரும்.

## திறனாய்வுக்கலை

மேனாட்டுத் திறனாய்வுகள் பற்றிய தனிச்சிந்தனைகள் அ.சி வழியே தனிநூலாக எழுதப்பட்டிருக்குமாயின். இலக்கியத் திறனாய்வு உலகிற்கு மிக்கப் பயன் கிட்டியிருக்கும். அ.ச.ஞா வின் இலக்கியக் கலை. மு.வ வின் இலக்கிய மரபு. இலக்கியத் திறன். இலக்கிய ஆராய்ச்சி போன்று அந்த வகையில் அ.சி எழுதாதது ஒரு குறையே. எனினும். திறனாய்வுக் கலையில் அ.சி. நாட்டம் செலுத்தியிருப்பதனை அவரது கட்டுரைகளில் ஆங்காங்கே காணப்படும் கருத்துரைகளிலிருந்து அறியமுடிகிறது.

இலக்கியக் கலையில் கலை கலைக்காகவே. கலை வாழ்க்கைக்காகவே என்ற மேனாட்டாரின் இருவிதக் கோட்பாட்டில் அ.சி. இரண்டாம் வகைக்கு ஆதரவாக இருப்பதனைக் காணமுடிகிறது.

> காவியத்தில். இலக்கியத்தில் வரும் கருத்தை நோக்கவேண்டா. இன்பத்தை மாத்திரம் நோக்குங்கள் என்கிறார்கள். இது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. இலக்கியங்கள் சிற்பத்தைப் போல. நடனத்தைப் போல ஒரு நுண்கலையாக மதிக்கப்பட்டு இன்பம் நல்குமென்று எதிர்பார்க்கப்பட வேண்டுவது உண்மைதான். ஆனால். இவ்வருங் கலைகளுக்கும் இலக்கியமாகிய கலைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அது யாதென்றால். சிற்பம். சித்திரம் முதலியவற்றினுடைய நோக்கம் இன்பம் பயப்பதொன்றேயாகவும்.இலக்கியத்தினுடைய நோக்கம் அதனோடு நில்லாமல் மக்களுடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்த உதவுவதாகவும் இருத்தல்வேண்டும் என்பதே.... வாழ்க்கையைச் சீர்ப்படுத்த அமைந்த நீதிநூல்கள் சில இலக்கிய நயம்பெற்றிருத்தல் கூடும் என்பதும் ஒன்று. நல்ல இலக்கியங்களிற் சில இன்பம் பயப்பதோடு நில்லாமல் வாழ்க்கையை மேம்படுத்தவும் கூடும் என்பதும் மற்றொன்று. (மு.பி.கா. 118-119)என்று கூறியிருப்பதனை நோக்க இலக்கியத்தின் பயன் இன்னது என்று அவர் சுட்டியுள்ளமை காண்க.
>
> இலக்கியத்தில் வெறும் அழகுணர்ச்சி மட்டும் போதாது. அது வாழ்க்கைக்கு வழி வகுக்கும் நல்ல நெறிகளையும் சொல்லுவதாக இருக்கவேண்டும் என்பது அ.சி.யின் ஆழ்ந்த கருத்து. இலக்கியம் இன்பம் தருவதோடு நில்லாது. அறிவினையும் புகட்டவேண்டும். அறிவும் இன்பமும் அழகுற இயைந்ததாய் இருக்கவேண்டும் என்பதில் கருத்தூன்றியவர். நல்லறிவை அடிப்படையாகக் கொள்ளாத எதுவும் சிறந்த இலக்கியமாய் மலர்தல் இயலாது என்பது அவரது சிந்தனை வெளிப்பாடு. அறிவைப் புகட்டும் நோக்கம் தலையாயதாய் இருப்பதாலேயே தமிழ் இலக்கியம் விரைவில் முன்னேறாமல் உள்ளது. என்றும். இலக்கியம் இன்பம் ஊட்டுவதாயினும். அதனிடையே போதனையும் வேண்டும் என்றும் நவநீத கிருஷ்ணன் என்பார்க்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் (காண்க - முல்லை -இதழ்த் தொகுப்பு பக் 110)

இந்த நோக்கில் பாரதியின் குயில் பாட்டு பற்றி மதிப்பிடுகையில்.

குயில் பாட்டில் எதோ ஒர் அறிவுரை மறைபொருளாய் வைக்கப்பட்டிருக்கிறது. தானே பெரியவன் எனச் செருக்கத்திலிருக்கும் மனிதனுக்கு உவமையாகக் கூறப்பட்டிருக்கும் காளை ஒரு விலங்குதானே எனக் குயில். காளையைப் பார்த்துக் கூறுவதைப்போல வைத்திருக்கிறார் பாரதியார்.

என்ற கருத்து சற்றே புதுமையான கண்ணோட்டமாகவும் தோற்றுகிறது.

செய்யுளுக்கும். உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகளை மிக எளிதாக உரைத்திருக்கும் பாணி நோக்கத்தக்கது.

கோவலனுக்கும். கண்ணகிக்கும் நடந்த திருமணத்தில் மகளிர் வாழ்த்து இடம் பெறுகிறது. திருமண வீட்டில் பூவும் புகையும் சாந்தும் சுண்ணமும் விளக்கும் கலமும் இருந்தன என்று வருணிப்பது இயல்பு. இவ்வாறு ஒருவர் எழுதுவது உரைநடை. இதனையே. விரையினர் மலரினர் விளங்கு மேனியர் உரையினர் பாட்டினர். விளக்கினர் கரத்தினர் விரித்த முளைக்குட நிரையினர்' என ஒருவர் எழுதுவது செய்யுள் (இ.இ பக் 2)

சிலம்பில். கண்ணகி தோற்றம் பற்றி வாயிற் காப்போன் ஐயுற்றுக் கூறுவான்.

"வந்தவள் காளியோ பிடாரியோ. கொற்றவையோ" எனக் கலங்கினான் வாயிலோன் என்று எழுதுவது உரைநடை."அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி.....கணவனை இழந்தாள் கடையகத்தாளே"என்று இளங்கோ எழுதியிருப்பதுபோல் எழுதுவது கவிதை.

(இ.இ பக். 17-18)

என்று சுட்டிக்காட்டி உரைநடைக்கும். கவிதைக்குமுரிய வேறுபாட்டினை உணர்த்துவர்.

இளங்கோவடிகள் எண்சுவையும் ததும்பக் கவி செய்வதில் வல்லவராயினும் அவர் அவலச் சுவையைச் சிறப்பாக உணர்த்தும் காட்சிகள் ஈர்ப்புடையன என்று கருதி. சிலபகுதிகளை விளக்கியுரைப்பர். புறஞ்சேரி இறுத்த காதையிலேயே அவலச்சுவை தொடங்கிவிடுகிறது. இது துன்ப மாலையில் உச்ச நிலை அடைகிறது. கண்ணகியின் துன்பம் இளங்கோவடிகளால் தடுமாற்றத்தோடு இயம்பப்படுகிறது என்று சொல்லிச் சிலம்பில் " சொல்லாடாள் சொல்லாடா நின்றாள்" என்று வரும் அடிகளின் சூழலை உணர்வுபடத் தெரிவிப்பர். இவ்வடிகளில் "சொல்லாடாள்" என்று ஒரு பக்கங்கூறிச் சொல்லாடும் என்று மறுபக்கம் கூறினமையால் அமைந்துள்ள முரண்தொடையைப்பற்றி நாம் கவலைகொள்ளவில்லை.

அந்நங்கைக்கு என்பது கண்ணகிக்கா வந்துற்ற பெண்ணிற்கா என்பதில் பெரும் ஐயப்பாடு உண்டு. ஓடோடி வந்தவள் கண்ணகிக்குச் சொல் கூறினாளா அன்றிச் சொல்லாடாமல் நின்ற அந்த நங்கையிடம் கண்ணகி சொல்லாடினாளா என்பது இன்றும் ஆராய்ந்து காண முடிவுகட்டாத நிலையில்- நம்மைத் திகைக்க வைக்கும் நிலையில் இவ்வடிகளை இளங்கோ அமைத்துள்ளார் என்று உணர்த்தும் நுட்பம் கவனத்திற்கொள்ளத்தக்கது. படிக்கவேண்டிய முறைப்படி அந்த அடிகளைப் படிப்போமேயானால் கேட்போரிடத்திலும் இத்திகைப்புணர்ச்சியை ஊட்டிவிடுதல் கூடும். இங்ஙனம் செய்வதுதான் கவிதையைப் படிப்பிக்கும் நோக்கங்களில் தலைசிறந்த நோக்கம்

( இ.இ பக் 72-73)

இலக்கிய நயம் காணும் போக்கில் மிகுந்த ஈடுபாடு கொண்டு வார்த்தைகளை அலசி ஆராயும் போக்கு சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர்களிடம் நிரம்ப இருந்திருக்கிறது என்பதற்கு அ.சி யின் நயங்காணும் முறையும் சான்றாகிறது.

அ.சி மேனாட்டுத் திறனாய்வுக் கருத்துக்களை ஆங்காங்கே எடுத்துக்காட்டித் தம் கருத்துகளுக்கு அவை அரண் செய்திருப்பதைத் தமிழில் சிறுகதை பற்றிய இரு பெரும் கட்டுரைகளிலிலிருந்து அறிய முடிகிறது. எட்கர் ஆலன்போ, ஹென்றி ஹட்சன், பேரி பெயின், ஆகியோரின் மேற்கோள்கள் இச்சிறு நூலில் இடம் பெற்றுள்ளன. ஒரு சிறுகதையின் அமைப்பு, அதன் வகைகள், பொருள், பயன், பாத்திரங்கள், நடை முதலியவை குறித்து ஆராய்கிறார். சிறுகதைக்கும், புதினத்திற்கும் இடையே விளங்கும் வேறுபாடுகளை ஒப்பிட்டுக் காட்டியிருப்பது சுவையான தகவலாகும்.

> புதினங்கள் ஓய்வு உள்ள பணக்காரர்கள் சாவகாசமாகச் சுவைத்து உண்ணும் பெருவிருந்து போன்றவை. சிறுகதைகளோ சுறுசுறுப்பான வேலைக்காரர்கள் தின்னும் நேந்திரங்காய் வறுவல் போன்றவை. புதினங்கள் தயிர்ச்சோறு என்றால் சிறுகதைகள் தயிர்ப்பச்சடி எனலாம். புதினங்களை நாரால் கோக்கப்பட்ட பூமாலைக்கு ஒப்பிடலாம். சிறுகதையை அழகிய பூவிற்கு ஒப்பிடலாம். புதினங்கள் படித்து முடித்த பிறகு தம் அளவில் திருப்தி நல்கும். சிறுகதைகளோ வாசகர்களுடைய உள்ளத்தைக் கிளறிவிடும். (த.சி.தோ.வ.பக்3) சிறுகதை என்பது ஓவியம் வல்லவன் சில கீறல்களால் சில நிமிடத்தில் தீட்டிவிட்ட ஒரு முகம் போன்றது (த.சி.தோ.வ பக்.4)

என்று கூறியிருப்பது கூட மேனாட்டுத் திறனாய்வுச் சிந்தனை வழி வந்த கூற்றாகக் கருதமுடியும்.

தமிழில் சிறுகதை எழுத்தாளர்களின் தனித்தன்மையைச் சுட்டும் போது கல்கியின் சிறுகதைகள் சில குட்டி நாவல்கள் என்று கூடச் சில காரணங்களால் சொல்லிவிடலாம் என்றும், புதுமைப் பித்தன், கு.ப.ரா ஆகியோர் சிறப்பும் ஆற்றலும் பெற்றிருந்த சிறுகதையாசிரியர்கள் எனவும், கு.ப.ரா வின் சொல்லாட்சி தனிமதிப்புடையது என்றும் தொடக்க காலச் சிறுகதையாசிரியர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நாடகம் பற்றிய திறனாய்வுக் கட்டுரை ஒன்று, நடிப்போர்க்கான சில குறிப்புகளைத் திறனாய்கிறது. அக்கட்டுரையில் ஒவ்வொரு உடல் அசைவும் எவ்வாறு காட்டப்படவேண்டும் என்பதனை இலக்கியம் வழி உணர்த்துவர். மெய்ப்பாட்டியலில் சுட்டப்பட்டிருக்கும் கருத்துகளை எளிய வடிவில் வடித்துத் தந்துள்ள கட்டுரையாக அக்கட்டுரை திகழ்கிறது. சான்றாக, வெகுளியை வெளிப்படுத்த வேண்டுமாயின் அதனை எவ்வாறு உடல்மொழியால் தெரிவிப்பது என்பதனைக் கீழ்க்காணுமாறு விளக்குவர்.

> வெகுளியைக் காட்டக் கருதுகின்றவர் வாயை மடித்துக்கொண்டு புருவத்தைத் துடிக்கவிட விடவேண்டும். சுட்டுவிரலை நீட்டிப் பேசலாம். ஒரு கையை மற்றொரு கையொடு தட்டி, 'விட்டேனா பார்' எனப்பேசலாம். அவரது கண் சிவக்க வேண்டும். மேனியில் வேர்வை தோன்றவேண்டும். நடிப்போருக்குச் சில குறிப்புகள் - (மதுரைத் தமிழ்ச்சங்க மலர் பக். 25)

பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகங்களைத் திறனாய்ந்து கூறும்பொழுது,

குறிப்பிட்ட நடிகர்களுக்காகப் பாத்திரங்களின் இயல்பை வேறுபடுத்தி வரைவது சிறந்த முறையோ எனப் பலர் ஐயுறுவர். பழைய கதைகளில் வரும் பாத்திரங்களை நடிகருக்கு ஏற்ப மனம் போனவாறு திரித்தல் கூடாது. இவ்வாறு திரித்திலர் முதலியார். ஆனால், புதுக்கதைகளையும் உள்ள நடிகருக்கு ஏற்ப வரைந்துவிட்டால் , பிற சபையினர், பிற கூட்டத்தார் நடிக்கும்போது இடையூறு ஏற்படும். நாடகத்திற்கு நடிகரே ஒழிய, நடிகருக்காக நாடகம் அன்று. (மு.ப.கா பக் 106-107)

என உரைத்திருப்பதிலிருந்து நாடக ஆக்கத்திற்குரிய திறனாய்வுப் பார்வை அ.சி யிடம் இருந்துள்ளது என்பது போதரும்.

பேராசிரியரின் விரிந்ததொரு திறனாய்வுத் திறத்தினை, கீசகன், பிருதுவிராஜன் ஆகிய நாடகங்களை ஆய்வு செய்திருப்பதன் வழி அறியலாம். இலக்கிய நயம் காண்பதில் ஆர்வம் கொண்டவராக இருந்தாலும் அவர் திறனாய்வுப் பார்வையில் பாடலின் நுட்பத்தைக் காணத் தவறியதில்லை. இலக்கிய வளர்ச்சியில் மரபின் ஆளுமையையும் அதன் வழிப் புதுப்புதுக்கருத்துகள் தோன்றுவதையும் எடுத்துக்காட்டுவர். சான்றாக,

தாமரை போன்றது முகம் என்ற மரபு இலக்கிய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக் காணவில்லை.. அந்த உவமையையே புதுப்புது மெருகிட்டு ஆண்டமையால், ஒரே மாதிரியாகக் கையாளும் சலிப்பு நீங்கிவிட்டதாகக் காண்கிறோம்... பவழம் போன்ற வாய் என்ற வழக்கத்திற்கு வேறாக, பாரதியார்''மாம்பழ வாயினிலே- குழலிசை வண்மை புகழ்ந்திடு வோம்'' என்று குறிப்பிட்டார். சிலருடைய வாய் உருட்டிவிட்ட மாம்பழம் போல நிறமாகவும் சதையாகவும் இருக்கும். கற்பனை உலகிற் கண்ணனிடத்துக் கண்டார் பாரதியார். அதனால், அவ்வண்ணம் பாடினார். மேலும் முகம் போன்ற மதி என்ற படியையும் தாண்டி இளையள் ஒருத்தி மீதெழும் அன்பின் விளை புன்னகையினள் முத்தம் வேண்டி முன் காட்டும் முகத்தின் எழில்,வெண்ணிலாவின்முகத்தில் நிரந்தரம் விளங்குவது எப்படியோ''எனப்பாடினார்.இதனால் தாமரை போன்றது முகம்,முகம் போன்றதுதாமரை என்ற அடிப்படை இன்னும் அகலவில்லை எனக் காண்கிறோம் (மு.ப.கா பக் 81-82)

இலக்கியத்தில் கருத்தின் சிறப்பையும், வருணனையின் அழகையும் கூட்ட உவமை, உருவகம் ஆகியவற்றை மாற்றி மாற்றி மரபினை உயிரோடு உலாவ வைத்திருக்கின்றனர் என்று காட்டுதற்கு மேலே எடுத்தாண்ட சான்று போதும்.

மரபின் மாற்றம் குறித்து ஆராய்கையில், உவமை மாறிவரும் சூழலைக் கம்பராமாயணத்தில் வரும் ஒரு காட்சி கொண்டு விளக்குவர். ஆண்தான் பெண்ணிடத்திற் காதலை முதன்முதலாக வெளிப்படுத்துவது வழக்கம். இந்த வழக்கத்தைச் சூர்ப்பணகை பொருட்டுக் கம்பருக்கு மாற்றத் தோன்றியிருக்கிறது. கடலன்ன காமம் உழந்தாலும், தம் காமத்தை வெளிப்படுத்துவது பெண்டிர் மரபு அன்று. ஆனால் அரக்கியரிடத்து இம்மரபு செல்லாது என்றுரைக்கிறார் கம்பர்.

தாமுறு காமத்தன்மை தாங்களே உரைப்ப தென்பது
ஆமென லாவ தன்றால் அருங்குல மகளிர்க் கம்மா!

ஏமுறு உயிர்க்கு நோவேன்! என்செய்கேன்? யாரு மில்லேன்
காமன்என் னொருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள்

(சூர்ப். படலம் பா.45)என்ற பாட்டில், முதலிரண்டி அடிகளால் நல்ல பெண்கள் காமத்தைத் தாமே உரையார் என்பதுதானே கருத்து. அதைச்சொல்லக் காமம் என வேண்டிய இடத்தில் காமத்தன்மை என்றும், தாங்களே உரையார் என வேண்டிய இடத்தில் தாங்களே உரைப்பதென்பது ஆமென லாவதன்றால் என்றும், நீட்டி வளர்த்திருப்பதாலேயே இம்மரபு பேணப்படாது பேணப்பட்டிருக்கிறது.அருங்குல மகளிர்க்கு ஒவ்வாததைச் சொல்கிறேனே, இஃதென்ன விந்தை' என்பாள் போலச் சூர்ப்பணகை' அருங்குல மகளிர்க்கு அம்மா' எனக்கூறினதாகவே கம்பர் காட்டினார் என்று இப்பாடற்குப் பொருள் விளக்கம் கண்டுரைத்துள்ளார்.

## நாட்டுப்புறக் கலையார்வம்

அ.சி நாட்டுப்புறக் கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராய் இருந்துள்ளார். தாம் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போதெல்லாம் ஊர்ப்புறத்தே மாடு மேய்ப்போர்க்குக் காசு கொடுத்து நாட்டுப்புறப்பாடல்களைப் பாடச்சொல்லிக் கேட்பதனை வழக்கமாக்கிக்கொண்டவர். வாய்ப்பு நேரும்போது நாட்டுப்புறக் கலைத் தொடர்பான நிகழ்ச்சிகளில் பார்வையாளராகக் கலந்து கொண்டு தம்மை மெய்ம்மறந்து இரசிப்பதுமுண்டு. நாட்டுப்பாடல்களின் இன்றைய நிலை பற்றி எடுத்துரைக்கும்போது அவை பற்பல கோலங்கொண்டு தம் தொன்மையும், கலப்படமற்ற தன்மையையும் இழந்துவிட்டன என்று கருதுகிறார். அது தன் தூய்மை இழந்தமைக்குக் காரணம் கூறுவார், நகரங்கள் மத்தியில் வாழ்வோர் புதிய பாடல்களைக் கற்றுக்கொள்வதும்,கிராம மக்கள் திருவிழாக் காலங்களில் திரைப்படம் சென்று அதன் பின் படப்பாடல்களைப் பாடுவதில் நாட்டம் கொள்வதும் கிராமங்களில் கூடத் தூய பழைய பாடல்கள் கலப்பற்ற நாட்டுப்பாடல்கள் அரிதாகிப் போய்விட்டன. அவற்றை மீட்க வேண்டும் என்ற சிந்தனை அவருக்கு இருந்திருக்கிறது. நாட்டுப்பாடல்களில் அறிவு வேலை செய்வதைக் காட்டிலும் உணர்ச்சி வழியே பாட்டின் சொல்லொலி இன்பத்தில் ஆழ்ந்துவிடுகிறோம் என்பது அவரது கருத்து. அல்லி அரசாணி மாலையின் பாடல் நயத்தை எடுத்துக்காட்டிப் படிப்போரை இன்பத்தில் ஆழ்த்திவிடுகிறார்.

நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் நாடக அமைப்புச் சார்ந்த சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான 'வையாபுரிப் பள்ளு' பற்றியும் ஒரு கட்டுரை எழுதியிருப்பதை ஈண்டு எடுத்துரைக்க வேண்டும். அந்த நூலின் கதைப்போக்கைப் பாடல்கள் வழி விரித்துரைத்துள்ளார். இறுதியில், அந்நூலாசிரியர் கூறியிருக்கும் சில வருணனைகள் வெறுக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டிவிட்டு அவை போன்று வருவனவெல்லாம் இழிசின மக்கள் கருத்தை ஒட்டி எழுதினார் போலும் என்று கருத்துத் தெரிவிக்கிறார்.

நாட்டுப்புற இலக்கியத்தில் பழமொழிகளும் இடம்பெறும். அ.சி அவர்கள் தமிழ் நாட்டில் வழங்கி வந்த பழமொழிகளை ஆராய்ந்து அவற்றிற்கான பொருள்நலனை நான்கு கட்டுரைகளில் விரிவாக எடுத்துரைப்பர். பழமொழிக்கான விளக்கத்தைத் தந்து.

மக்கள் வழக்கில் அதற்குரிய இடத்தை வரையறுத்துக் கூறும் போது பழமொழிகளை வகைப்படுத்துகிறார்.

1) சில பழமொழிகள் முற்றும் உண்மையாயிருத்தல்

2) சில பாதி உண்மையின்பாற்படுவன,

3) சில பொய்யே உரைக்கும் இயல்பின

4) பிறிதொரு பொருளாய் அமைவன

பழமொழிகளை இவ்வாறு வகைப்படுத்தி அவற்றிற்கான விளக்கங்களைச் சுவைபடச் சொல்லிச் செல்வர். உண்மையாய் இருத்தலுக்கு அகதிக்குத் தெய்வமே துணை, முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். அக்கரைக்கு இக்கரை பச்சை போன்றவற்றையும், பாதி உண்மையாய் இருத்தலுக்கு அகத்தின் அழகு முகத்தில் தெரியும், அறிவுடையாரை அரசனும் விரும்பும், உண்மையைச் சொல்லிக் கெட்டாரும் இல்லை; பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை போன்றவற்றையும், பொய்யே உரைக்கும் இயல்பிற்கு, கதி கெட்ட மாப்பிள்ளைக்கு எரு முட்டைப் பணியாரம், குணத்தை மாற்றக் குருவில்லை, பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது போன்றவற்றையும், பிறிதொரு பொருள் தருவனவற்றிற்கு ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன், ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய், வாயுள்ள பிள்ளை பிழைக்கும் போன்றவற்றையும் விளக்கமுற எடுத்துக்காட்டித் தாம் வரையறுத்த வகைப்பாட்டிற்குப் பொருத்தமுற விளக்கஞ் சொல்லியுள்ளார்.

'களவும் கற்று மற' என்னும் தலைப்பிலமைந்த கட்டுரை ஒன்று, பழமொழியின் பொருள் நயத்தை யாரும் எதிர்பாராத விதமாகப் புதுக்கி ஆராய்ந்துரைக்கிறது. அதற்குரிய பொருளைப் பல்வேறு கோணங்களில் தடைவிடைகளோடு எடுத்துரைத்து இறுதியில்,

> தலைவனும், தலைவியும் களவொழுக்கத்திலேயே எந்நாளும் பழகாமல் சிறிது காலத்திற்குள் களவை மறந்து யாவருமறிய மணம் புரிந்து கொள்ளக்கடவர் என்ற பொருளைக் கொண்டு நின்றது போலும்! ஆதலால் கற்று மற என்ற சொற்களின் பொருளும் களவொழுக்கத்தைக் குறித்து நிற்பதைக் காண்க
>
> (க.கொ.பக் 85.)

என்று சொல்லியிருப்பது சற்றே புதுமையானது.

செந்தமிழ்ச் செல்வியில் வந்த இக்கட்டுரை குறித்து, அவ்விதழின் ஆசிரியர், 'களவும் கற்று மற என்னும் திரு உரையில் களவு என்பது களவொழுக்கத்தைக் குறிக்குமென்றும், மற என்பது அவ்வொழுக்கத்தை மற்றொரு பெண்ணின் பொருட்டுக் கைக்கொள்ளலாகாதவாறு மறந்துவிடுக என்பதை உணர்த்தும் என்றும் காட்டப்பட்ட பொருளுண்மை பொருந்துவதேயாம்.' என்று அ.சி யின் அக்கட்டுரையை வியந்து போற்றுவர்.

## சமுதாய உணர்வு

இலக்கியத்தின் நோக்கமே வாழ்க்கையை எடுத்துக்காட்டுவது என்ற கருத்துடைய அ.சி தம் கட்டுரைகள் வழியே சமுதாய உணர்வை ஆங்காங்கே விதைத்துச் சென்றுள்ளதை அறியலாம்.

> உலகில் மக்களாய்ப் பிறந்த அனைவரும் ஒரே இனம், ஒரே குலம் என்ற கருத்தைப் போற்றுபவராக இருந்துள்ளார். மக்கள் மனத்தில் ஒருமை எண்ணம் விதைக்கப்படவேண்டும் என்ற ஆழமான சிந்தனையை வெளிப்படுத்துவர். சகோதரத்துவம் என்ற உயர்ந்த எண்ணம் உலகம் முழுவதும் பரவுமானால், 'பொத்தானை அழுத்தினதும் உலகு முழுதையும் பாழாக்கக் கூடிய அணுக்குண்டினை உண்டாக்குவதற்கு இடமே இல்லை' என்ற கருத்தை உள்ளத்தில் பதிய வைக்கிறார். (த. கா. உ. பக் 4)

ஆல்பர்ட் சுவைட்சர் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள அ.சி உலகநாடுகள் ஒன்றோடொன்று போர் உடற்றுவதைக் கண்டு சுவைட்சர் மனம் நொந்ததைக் குறித்துள்ளார். சுவைட்சர் எண்ணிய அந்த எண்ணம் இவரையும் ஈர்த்த காரணத்தால் அ.சி. போர் வேண்டா நெறியில் நின்று தம் கருத்தை உணர்த்தவரும்போது பாரதிதாசன் பாடலை எடுத்தாண்டு விளக்குவர்.

போரற்ற சமுதாயத்தைக் காணவே நாடு விழைகிறது. எது நல்ல சமுதாயம் என்ற இந்தக் கேள்விக்கு விடையாக, போருக்கு எதிரான வாழ்வுமுறைதான் சமுதாயம் (Society is the exact antithesis of war) என்ற பொருளியல் அறிஞர் மெக் ஐவர் (விணீ மிஸ்மீக்ஷ்) குறிப்பிட்டுள்ள கருத்தை அ.சியின் கருத்தோடு எண்ணிப்பார்க்கலாம். மன்னுயிர்க்கு அன்பராகிய சுவைட்சரின் போர் வேண்டாமை நெறி வரவேற்கக் கூடியதாக இருத்தலின் அ.சி போர் பற்றிய அவருடைய கருத்தினை மொழிபெயர்த்துத் தந்துள்ளார். போரில் வெற்றி என ஒன்று கொண்டாடப்படுகிறதென்றால், வென்றவன் சுடுகாட்டு விழா ஒன்றனில் இருப்பது போலத் தன்னை எண்ணிக்கொள்ளுதல் வேண்டும். போரில் பல மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆதலால், அவர்களுக்காக ஒவ்வொருவரும் அழுதல் வேண்டும். அவர்களிடம் இரக்கங்கொண்டு ஒவ்வொருவரும் கண்ணீர் விடுதல் வேண்டும். இதற்கு மாறாக வெற்றிமுரசு முழங்குதல் ஒவ்வாது' என்ற சிந்தனையை மேற்கொண்டு ஒழுகினால் உலகில் பூசல் ஏது? பொறாமை ஏது? போர்தான் ஏது? அன்பில் தழைக்கும் இந்த வையம் என்பதே இந்தச் சிந்தனைக்கு ஊற்றுக்கண்ணாகும். எனவேதான் அ.சி அன்பு நெறியைத் தம் கட்டுரையில் ஆங்காங்கே சுட்டிக்காட்டுவர்.

உழவுத் தொழில் குறித்துச் சிந்தித்த அ.சி திருவள்ளுவர் கருத்தாக மக்கள் உழவேண்டும்; உழுது உண்ணவேண்டும்; உண்பதோடன்றிப் பிறர்போல உடுக்கவும் வேண்டும். உறைவிடமும் பெறுதலும் வேண்டும். தாம் உண்டலே யன்றிப் பிறர்க்கும் கொடுத்தலும் வேண்டும். இக்கருத்துகள் அனைத்தும் திருவள்ளுவர் கூறிய 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற விளக்கத்தில் அடங்கும். பொதுவுடைமைக் கருத்தாக்கத்தின் சாயலை இதன் வழி உணரலாம். இந்தக் கருத்தின் அடிப்படையில் உண்பொருளில் மன்னனுக்கு எனத் தனித்தும்,மக்களுக்கு எனத் தனித்தும் சமைக்கும் நிலை இல்லை என்பதைக் காட்டுதற்குப் பதிற்றுப் பத்திலிருந்து சான்று காட்டுவார். செங்குட்டுவன் தனக்கு என ஒருவகைச் சோறும், பிறர்க்கென வேறுவகையான சோறும் சமைக்குமாறு பணிக்கும் வழக்கம் இல்லை என்றுணர்த்த, 'சோறு வேறு என்னா ஊன்றுவை அடிசில்'

என்ற பாடலடியின் பொருள் நயத்தைச் சுட்டியிருப்பதனை இது தொடர்பாகச் சிந்திக்க வாய்ப்புண்டு.

சமுதாயத்தில் ஆள்வோரையும் ஆளப்படுவோரையும் பற்றிச் சிந்திக்கும் அ.சி. குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு மன்னனைச் சார்ந்திருக்கிறது என்பர். அதனால்தான் மன்னன் காவலன் என்று அழைக்கப்பட்டான். மக்களுக்கு இடையூறு நிகழாவண்ணம் பாதுகாப்பது மன்னனின் கடமை என்பதனைச் சேக்கிழாரின் பாடல் கொண்டும், தசரதனைக் குறிப்பிடும் இடத்தில், 'வறிஞன் ஓம்பும் ஓர் செய்யென வையக முழுவதும் காத்தினிதரசு செய்கிறான்' என்று கம்பர் பாடியிருப்பதைக் கொண்டும் ஆராய்கிறார்.

'நக்கீரர்' பற்றிய கட்டுரை ஒன்றில் அப்புலவரின் எண்ணத்தை இக்கால நடைமுறையில் வைத்து நோக்கியிருப்பது எண்ணத்தக்கது. 'இக்காலப் பொதுவுடைமையர் கருத்தை ஒத்த கருத்தினை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே இயம்பிவிட்டதாக எழுத்தில் வடித்திருப்பதை எண்ணி மகிழும் போக்கை நக்கீரர் கவித்திறன் என்ற கட்டுரையில் காணலாம்.

> உலகில் மக்களாய்ப் பிறந்தார் எல்லாம் ஒத்தவர்கள் என்ற கருத்தினையும் அவரவருக்கு இயன்ற வகையில் ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும் என்பதையும், அவரவருடைய தேவைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் பொருள்கள் கிடைக்கப்பெறுதல் வேண்டும் என்பதையும் நக்கீரர் அன்றே அறிந்திருந்தார். பேரரசு நடாத்திய பெருமையோர்க்கும் உறக்கமின்றித் தொழிலை உன்னிப்போடு செய்த தொழிலாளருக்கும் உண்பதற்கு நாழி அரிசியும், உடுப்பதற்கு இரண்டு உடுக்கையும் தானே தேவை எனக் கேட்டார் அவர். மற்றன எல்லாம் ஒக்குமல்லவோ என்றார். நாமே அனைத்தையும்நிமற்றன எல்லாம் ஒக்குமல்லவோ என்றார். நாமே அனைத்தையும் தின்று உடுத்தி இழக்கின்றவை பலவல்லவோ என்றார். (செ.வே. பக். 13-14)

புறநானூற்றில் இடம்பெற்ற 'தண்கடல் வளாகம் பொதுமையன்றி' என வரும் பாடலின் கருத்தை இவ்வாறு அ.சி விரித்துரைப்பது பொதுவுடைமைக் கருத்தில் அவர் கொண்டிருந்த நாட்டத்தைக் காட்டுகிறது.

சென்னையில் கடற்கரையை ஒட்டியுள்ள சாந்தோமில் வசித்தவர் அ.சி. பொழுதுபோக்குக்காகவும், நடைப்பயிற்சிக்காகவும் கடற்கரை செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். 'சென்னைக் கடற்கரை' என்னும் கட்டுரையை அழகுணர்ச்சியுடன் ஓவியமாகத் தீட்டிக்காட்டியவர். மீனவச் சமுதாயத்தைப் பற்றிய தம் உணர்வை வெளிப்படுத்தும்போது, " கடலோடி, வலை வீசி உயிர் பிடித்து வாழும் பரதவர் வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமையாவிட்டால் வாரி வளத்தை மக்கள் பெற்றவாரில்லை. மற்றையோர் உண்டு கொழுத்து வாழ, தமது அருந்தொழிலாற் சமுதாயம் இயங்கத், தம் பணியினைச் செம்மையுடன் செய்துவரும் செம்படவர் வாழ்க்கை ஆபத்து நிறைந்த அரிய வாழ்க்கை" என்று எழுதிச்செல்வது அச்சமுதாய வாழ்வை அவர் அறிந்து அவர்கள்பால் அக்கறை கொண்டிருந்ததைக் காட்டும்.

வாழ்க்கைக் கலையில் குடும்பம் நடத்துவதற்கான வழிமுறைகள் சிலவற்றை அ.சி சொல்லியுள்ளார். குறிப்பாக, ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்துடைய அ.சி. குடும்பக் கலை பற்றிய சிந்தனையில் ஒரு புதிய செய்தியைத் தெரிவிக்கிறார். வருவாய்க்குத்

தக்க செலவு செய்ய வேண்டியவள் மனைவி. வாழ்க்கைத் துணையாய்ச் செயற்பட விரும்புகிறவள் கணவனுடைய ஊதியத்திற்கு ஏற்பக் குடும்பத்தினுடைய வருவாய்க்கேற்பச் செலவினத்தை அமைத்துக்கொள்பவள் ஆவள். 'வருவாய் குறைவாகச் செலவு செய்யக் கற்றுக்கொள்வதைப் போல, வருவாய் நிரம்ப இருக்கிறபொழுது நிரம்பிய வருவாய்க்கு ஏற்ப வாழவும் வகை தெரிந்தவளாக ஒருத்தி இருத்தல் வேண்டும். கணவன் ஆயிரம் ரூபாய் வருவாய் உடையவனாக இருப்பானேயானால் அவனுடைய மனைவி உயர்ந்த வகையில் குடும்பத்தை நடத்துதல் வேண்டும். ஆயிரம் ரூபாய் வாங்குகிறபொழுதும் ஐம்பது ரூபாய் வருவாயில் நடந்து கொண்டவாறு நடந்து கொண்டு இருத்தல் கூடாது'.....இந்தக் கண்ணோட்டம் யாவருக்கும் பொருந்துமா என்று அலசி ஆராயக்கூடிய ஒன்றாக உள்ளது. காரணம் குடும்பச் சூழலில் இது நடைமுறைச்சாத்தியமா என்று பார்க்கிறபோது. இருவரும் மனமொத்த நிலையில் ஒரு புள்ளியில் இயங்கினால் மட்டுமே இயலும். என்றாலும். அ.சி யின் கருத்து. பொருளாதாரம் உயர உயர அதற்கேற்றவாறு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளவேண்டும் என்பது பொதுக் கருத்தாக ஏற்க உடன் படுமா? 'ஒருவருடைய பொருள் நிலை உயர உயர அவருடைய உடுத்தி இழக்கின்றவை பலவல்லவோ என்றார்.

(செ.வே. பக். 13-14)

புறநானூற்றில் இடம்பெற்ற 'தண்கடல் வளாகம் பொதுமையன்றி' என வரும் பாடலின் கருத்தை இவ்வாறு அ.சி விரித்துரைப்பது பொதுவுடைமைக் கருத்தில் அவர் கொண்டிருந்த நாட்டத்தைக் காட்டுகிறது.

சென்னையில் கடற்கரையை ஒட்டியுள்ள சாந்தோமில் வசித்தவர் அ.சி. பொழுதுபோக்குக்காகவும். நடைப்பயிற்சிக்காகவும் கடற்கரை செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். 'சென்னைக் கடற்கரை' என்னும் கட்டுரையை அழகுணர்ச்சியுடன் ஓவியமாகத் தீட்டிக்காட்டியவர். மீனவச் சமுதாயத்தைப் பற்றிய தம் உணர்வை வெளிப்படுத்தும்போது. " கடலோடி. வலை வீசி உயிர் பிடித்து வாழும் பரதவர் வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமையாவிட்டால் வாரி வளத்தை மக்கள் பெற்றவாரில்லை. மற்றையோர் உண்டு கொழுத்து வாழ. தமது அருந்தொழிலாற் சமுதாயம் இயங்கத். தம் பணியினைச் செம்மையுடன் செய்துவரும் செம்படவர் வாழ்க்கை ஆபத்து நிறைந்த அரிய வாழ்க்கை" என்று எழுதிச்செல்வது அச்சமுதாய வாழ்வை அவர் அறிந்து அவர்கள்பால் அக்கறை கொண்டிருந்ததைக் காட்டும்.

வாழ்க்கைக் கலையில் குடும்பம் நடத்துவதற்கான வழிமுறைகள் சிலவற்றை அ.சி சொல்லியுள்ளார். குறிப்பாக. ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்துடைய அ.சி. குடும்பக் கலை பற்றிய சிந்தனையில் ஒரு புதிய செய்தியைத் தெரிவிக்கிறார். வருவாய்க்குத் தக்க செலவு செய்ய வேண்டியவள் மனைவி. வாழ்க்கைத் துணையாய்ச் செயற்பட விரும்புகிறவள் கணவனுடைய ஊதியத்திற்கு ஏற்பக் குடும்பத்தினுடைய வருவாய்க்கேற்பச் செலவினத்தை அமைத்துக்கொள்பவள் ஆவள். 'வருவாய் குறைவாகச் செலவு செய்யக் கற்றுக்கொள்வதைப் போல. வருவாய் நிரம்ப இருக்கிறபொழுது நிரம்பிய வருவாய்க்கு ஏற்ப வாழவும் வகை தெரிந்தவளாக ஒருத்தி இருத்தல் வேண்டும். கணவன் ஆயிரம் ரூபாய் வருவாய் உடையவனாக செலவினமும் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து

போகவேண்டும்.' என்று அவர் வற்புறுத்திக்கூறியிருப்பது தனிப்பட்ட கருத்தாகவே கொள்ளத்தக்கது.

இன்னொரு கருத்தும் பொதுவான வாழ்க்கைக்கும், நாட்டுப் பொருளாதார நலத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. மகளிர்க்கிருக்கும் பொன்னாசை குறித்த கருத்தாக அவர் சொல்வது சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய ஒன்று எனலாம்.

> 'வீட்டுக்குச் செலவிடுகிற பணத்தைத் தவிர எஞ்சியவற்றை எல்லாம் பொன் உருண்டையாக்கிக்கொள்ள வேண்டும் என எண்ணுகிற மகளிர் தொகை குறைய வேண்டும். நம் நாட்டில் உள்ள பொன்னணிகள் அரசின் சேமிப்பு நிலையங்களில் இருக்கவேண்டிய பொன்னுக்குப் பதிலாக மகளிர் உடம்புகளுக்குப் பாரமாகிக் கொண்டு இருப்பவை. ( வீ.தி. 120-121)

சமுதாயத்தில் குடும்ப உறவும், பொருளாதாரமும் எத்தகைய நிலையில் வினையாற்ற வேண்டும் என்பதும், கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழவேண்டும் என்ற உணர்வும், எண்ணமும் ஓர் ஒழுங்கிணைவான வாழ்க்கைக்கு அடையாளம் ஆகும் என்று அவர் சொல்லியிருக்கும் கருத்துகள் ஏற்புடையன.

சமுதாயச் சிந்தனையில் தோய்ந்த அ.சி பழமை இலக்கியத்தில் மட்டுமே காலூன்றாது புத்திலக்கியங்களிலும் பார்வை செலுத்தியவர். பாரதியார், பாரதிதாசன் பாடல்களில் மிகுதியும் ஆர்வம் காட்டாத கல்வி நிலையங்கள் அன்று இருந்துள்ளன. அன்றைய பேராசிரியர்கள் பலரிடையே இத்தகைய நிலை இருந்ததுண்டு. மிகச் சிலரே அவ்விரு கவிஞர்களின் கவிதைகளை வரவேற்றுப் போற்றியவர்கள். அவர்களில் அ.சி. யும் ஒருவர். அவ்விரு கவிஞர்களின் கவிதைகளைப் பற்றிய கட்டுரைகளில் அக்கவிஞர்களின் சமுதாயச் சிந்தனை அ.சி. யைப் பெரிதும் ஈர்த்திருப்பதனை அக்கவிஞர்கள் பற்றி எழுதியுள்ள கட்டுரைகளின் வழி அறியலாம்.

எழுத்தாளர்கள் வாழ்வு சிறக்க குரல் கொடுத்திருக்கிறார் அ.சி. அரசும், பதிப்பாளர்களும் மக்களும் எழுத்தாளர்களைப் போற்றிப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்றும், 'எழுத்தாளர்களுக்கு உதவி' என்ற கட்டுரையில் எழுத்தாளர் என்ற சொல்லைத் தம் நோக்கில் புதுமையாகக் கையாள்கிறார் அ.சி. எழுத்தாகிய கருவியினை எடுத்து ஆளும் திறமை படைத்தவர்கள் எழுத்தாளர் என்று சொல்லவேண்டும் என்பது அவரது உள்ளக் கிடக்கை. எழுத்தாளர்களைப் பேணினால் நாடு செழிக்கும் என்பதை அக்கட்டுரையின் அடிநாதமாகக் கொள்ளலாம். சாகித்திய அகாதெமி அமைப்புக் குழுவில் இருந்த போது, தென்னிந்திய எழுத்தாளர்களின் எண்ணிக்கை அக்குழுவில் இன்னும் மிகுந்த அளவில் இடம் பெறவேண்டும் என்று சாகித்திய அகாதெமியினைத் தோற்றுவிக்ககாரணமானவர்களில் ஒருவரான பண்டித ஜவகர்லால் நேருவிடம் முறையீடு செய்ததை ஈண்டு எண்ணிப் பார்ப்பதோடு, எழுத்தாளர்களைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையை அவர் முன் மொழிந்துள்ளார்.

## 8. மொழிபெயர்ப்புக் கலை

நாடு விடுதலை பெறுவதற்கு முன் அன்றிருந்த ஆங்கிலக் கல்வித்திட்டம் ஆங்கில நூல்களைப் படிப்பதற்கு ஏதுவாக இருந்த காரணத்தால் பலரும் ஆங்கில நூல்களைப் பரவலாக அறிவதற்கு வாய்ப்பாயிற்று. ஆங்கிலக் கல்விபால் ஈடுபாடு கொண்டிருந்த பலருக்கும் ஆங்கில இலக்கிய ஆர்வம் தொற்றிக் கொண்டது எனச் சொல்லலாம். குறிப்பாக, புனைவியல் கவிஞர்களின் படைப்புகள், சிந்தனையாளர்களின் அறிவார்ந்த கட்டுரைகள், சேக்சுபியர் நாடகங்கள் முதலானவை தமிழகத்தில் வலம் வரத்தொடங்கின. தமிழில் அவற்றைக் கொண்டுவரவேண்டும் என்ற பேரார்வம் கிளைக்கத்தொடங்கியது. ஆங்கிலக் கல்வியில் புலமை பெற்றவர்கள் அதன் தாக்கம் பெற்றனர். அதன் காரணமாகத் தமிழில் படைப்பாக்கங்களை வளர்க்கவேண்டும் என்ற சிந்தனை கொண்டோர், பிற மொழிகளில் தாகம் கொண்டோர், இலக்கியத்தில் புதுமை காணவேண்டும் என்ற ஆர்வ நெஞ்சினர் முதலியோர் மொழிபெயர்ப்பில் இறங்கினர்.

ஆங்கிலத்தின் வழியே பிற மேலைநாட்டு இலக்கியப் பதிவுகள் புதிய பார்வையில் விரியத் தொடங்கின. கட்டுரை, கதை, கவிதை, நாடகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்குத் தரவேண்டும் என்ற சிந்தனை மொழிபெயர்ப்பின் மூலம் சாத்தியமாயிற்று.

அ.சி. தமிழில் பெற்றிருந்த புலமை போலவே, ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்த காரணத்தால் ஆங்கிலத்தில் எழுதியும் பேசியும் வந்தவர். அவரது ஆங்கிலப் பேச்சின் உச்சரிப்பினைக் கூட ஆங்கிலேயரைப் போலிருந்தது என்று அவருடைய மாணாக்கர்கள் கூறியதுண்டு. ஐரோப்பியரின் வருகையால் ஆங்கிலக் கல்வியும், இலக்கியப் பயிற்சியும் மிக்கிருந்த காலமாதலால் அஃது அவர்க்கு எளிதில் கைகூடிற்று. சில சூழலில் அ.சி.

யின் நடை கூட ஆங்கில வாக்கிய அமைப்பினை ஒட்டியதாக இருப்பதும் எண்ணிப் பார்க்கத் தக்கது.

மேனாட்டு அறிஞர்களான அடிசன். ஸ்டீல். ஹேஸ்லிட். காபெட். செஸ்டர்பீல்டு. ஸ்டீவன்சன். ஆவ்பரி பிரபு. சர். ஹ்யூபர்ட் பாரி. மார்லி பிரபு போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்துகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

## மொழிபெயர்ப்பும் தழுவலும்

ஆலிவர் கோல்ட்ஸ்மித் எழுதிய மீலீமீ நீவீமீஹ் ஸீவீரீலீமீ ஜீவீமீநீமீ என்ற கட்டுரையைத் தழுவி 'அல்லின் நாப்பண்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இவரது மொழிபெயர்ப்புச் சற்றுக் கடின நடையுடையது. தூய தமிழில் தலைப்பினைப் பெயர்த்திருப்பது. முப்பதுகளில் அவருக்கு இருந்த தனித்தமிழ்ப்பற்று காரணமாக இருக்கலாம். கோல்ட்ஸ்மித் கட்டுரை உறங்குவோரும். அந்நேரத்தில் திரிவோரும் பற்றிய காட்சிச்சித்திரம். இதனைக் காட்சி நடையாகச் சித்திரித்துக் காட்டுகிறார் பெயர்ப்பாளர்.

தெருக்களையே படுக்கையாகக் கொண்டு பொருள் படைத்தோர் வாயில்களின் கீழே தமது ஏழ்மைத் தன்மையுடனிளைப்பாறுபவர் யார்? அவர்தாம்.மீட்கப்பட முடியாதவாறு. தாழ்வடைந்திருப்போரும். பிறரிடமுண்டாகுமிரக்கத்தாற் பயன்பெற முடியாதவாறு பேரிடர்ப்படு வோருமாகிய அயலாரும் நாடோடிகளும் பற்றுக்கோடில்லாதவருமாவர். அவர்தம் ஏழைமை இரக்கத்தினு மிகுதியாக அச்சத்தையே யெழுப்புகின்றது...

> இன்று பனியிலுங் குளிரிலுங்கிடந்து நடுக்கமுறும் பெண்கள் கட்டழகு வாய்ந்தவரென்று பிறராற் புகழப்பட்டு ஒரு கால் மகிழ்ச்சியுற்றிருந்தனர். களியுண்டு கடலன்ன காமமுழந்த கண்ட கனாற் கட்டுண்ட காரிகைகள் இப்பொழுது மாரிக்காலக் கொடுமையைக் காண வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனர்[3]. கட்டுரைக்கொத்து பக். 10-11)

ஆலிவர் கோல்ட்ஸ்மித் கட்டுரைகளுள் ஒன்றனை இன்பமும் வெளிப்பகட்டும் என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். சர். ஹ்யூபர்ட் பாரியின் கட்டுரைகளுள் ஒன்றனை 'இளைஞரும் முதியரும்' என்ற தலைப்பில் தழுவி எழுதியுள்ளார்.

அ.சி. தமது சிறுகதைத் திறனாய்வுக் கட்டுரையில் ஹென்ரி ஹட்சன். பெயின் ஆகியோரின் கருத்துகளை ஆங்காங்கே மொழிபெயர்த்துத் தம் கருத்துகளுக்கு அரண் சேர்க்கும் விதத்தில் அமைத்துச் செல்வதையும் குறிப்பிட்டாகவேண்டும்.

பழந்தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அ.சி. தாம் எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரைகளில் ஆங்காங்கே சங்கத் தமிழின் கருத்துகளையும். திருக்குறள் கருத்துகளையும் உரைநடையில் பெயர்த்திருப்பதைக் காணலாம். புறநானூற்றில் கோப்பெருஞ்சோழனின் பாடலான.

> செய்குவன் கொல்லோ நல்வினை யெனவே
> ஐயம் அறார் கசடீண்டு காட்சி
> நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
> யானை வேட்டுவன் யானையும் பெறுமே
> குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே

அதனால், உயர்ந்த வேட்டது துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனில்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியும் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையின் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே[4]

என வருவதனை உரைநடையில் ஆங்கிலப்படுத்தியுள்ளார். திருக்குறளின் கருத்தினை எளிதான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளமையை எண்ணிப்பார்க்கலாம்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது [5]

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து [6]

என வரும் குறட்பாக்களை உரைநடையில் பெயர்த்துள்ளார்.

'தன்குற்றமும் பிறர் குற்றமும்' என்ற கட்டுரையின்கண் தன்குற்றம் காணார் பிறர் குற்றம் காணும் போக்கினை இலக்கிய வழி விரித்துரைக்கும் இடத்து, மேற்கோளாக பைபிளில் இருந்து எடுத்துக்காட்டுகளைத் தமது பெயர்ப்பில் தருவதை நோக்கலாம். தன் கண்ணில் உத்திரம் அளவு பெரிய கட்டை போன்ற குற்றமிருந்தும் பிறர் கண்ணில் துரும்பளவு போன்ற சிறு மாசு இருப்பதைக் காணப்பொறாத மக்கள் தம்மைக் குறித்து நோவாமற் பிறரைப் பற்றி ஏச்சுரை கூறுவர். இவ்வாறு செய்தல் ஆகாது[7] எனப் பெயர்த்திருப்பதனை மொழியாக்கமாகக் கொள்ளலாம்.

## தமிழில் சேக்சுபியர் நாடகங்கள்– அ.சி மொழி பெயர்ப்பில் 'ஒத்தெல்லோ'

அன்றிருந்த ஆங்கிலப் பாடத்திட்டத்தில் சேக்சுபியர் நாடகங்கள் பரவலாக இடம் பெற்றிருந்தன. சேக்சுபியர் நாடகங்கள் சிலரால் மொழிபெயர்ப்பாகவும், தழுவலாகவும் தமிழில் எழுதப்பட்டன. சார்லஸ் லாம்ப் சேக்சுபியர் நாடகங்கள் சிலவற்றைக் கதை வடிவங்களில் தந்தமை அன்றைய தமிழுலகில் மிக்க வரவேற்பைப் பெற்றது. சேக்சுபியர் நாடகங்களில் இடம் பெற்றிருந்த அண்டனியின் நீண்ட புரட்சி உரை, போர்சியாவின் கருணை, ஹேம்லட்டின் தனிமொழி, சைலக்கின் கொடிய பண்பு, மனித வாழ்க்கையின் ஆறு பருவங்கள் முதலியனவும் ஆங்கிலப் பாடத்திட்டத்தில் மனனப் பகுதிகளாக இருந்துள்ளன. அதனால் சேக்சுபியர் நாடகங்களைப் பற்றிய சிந்தனை வளர்ந்தது. சேக்சுபியரின் முப்பத்தேழு நாடகங்களில் ஏறக்குறைய இருபத்தேழு நாடகங்கள் மொழிபெயர்ப்பாகவும், தழுவலாகவும் வெளிவந்துள்ளன. 1870 முதல் 2005 வரையிலான கால கட்டங்களில் தமிழுலகம் சேக்சுபியர் நாடகங்களைப் பல்வேறு வகைகளில் கண்டிருக்கிறது. 1870 இல் தான் முதன்முதலாகத் தமிழில் சேக்சுபியரின் வெனீசு வர்த்தகன் மொழி பெயர்ப்பாக வெளிவந்தது. 1870 முதல் 1897 வரையிலான ஆண்டுகளுக்கிடையே ஏறக்குறைய ஐந்து நாடகங்கள் தழுவலாக வெளிவந்தன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பத்திற்கும் மேற்பட்ட நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டன.

ஐம்பதுகளில்தான் மொழிபெயர்ப்பாகப் பதினான்கு நாடகங்களும், தழுவலாக எட்டு நாடகங்களும் வெளிவந்தன.

நடிப்பதற்கு உரியனவாகவும், படிப்பதற்குரியனவாகவும் இருவகைகளில் அவரது நாடகங்கள் வெளிவரத்தொடங்கின. பம்மல் சம்பந்த முதலியார் மேடையில் நடிப்பதற்காக நாடகங்களைத் தழுவி எழுதினார். சலசலோசன செட்டியார், விபுலானந்த அடிகள், வடுவூர் குப்புசாமி முதலியார், எம். எஸ். துரைசாமி முதலியோர் தழுவி எழுதினர். அன்றிருந்த மேடைப் பாணிக்குத்தக்கவும், பொழுது போக்கிற்குரிய வகையிலும் பம்மலின் தழுவல் நாடகங்கள் நடித்தற்குரிய வகையில், அமைந்திருந்தன. கதைப்போக்கில் தமிழ் மரபிற்கேற்ப நாடக மாந்தர் பெயர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் மாற்றி அமைக்கப்பட்டிருப்பதை அவரது நாடகத் தழுவலில் பார்க்கமுடிகிறது. தழுவல் நாடகங்கள் பலவும் சேக்சுபியரின் உயிரோட்டமான பகுதிகளை உள்வாங்கிக் கொண்டு தழுவப் பெற்றிருப்பதையும் அவற்றில் காணலாம். சேக்சுபியரின் சிறந்த துன்பியல் நாடகங்களில் ஒன்றான ஒத்தெல்லோ, தமிழில் சிலரால் தழுவலாகவும், மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்தது. ஏறக்குறைய, பதின்மர் மொழி பெயர்த்துள்ளனர்.

ஸ்ரீ. நிவாச வரதாச்சாரியார் (1902),

அ.மாதவய்யா (1907)

எம்.எஸ். துரைசாமி (1910)

பவானந்தம் (1916)

டிஎன்.சேசாசலம் (1935-முதல் மூன்றுகாட்சிகள்வரை),

மயிலேறு (1950),

கு.ஆதித்தர் (1950-உத்தமலோலன் என்ற பெயரில் தழுவல்)

அ.சிதம்பரநாதன் (1960)

வி.ஆர்.எம்.செட்டியார் (1967-சில பகுதிகள் உரைநடை)

அரு.சோமசுந்தரம் (1980)

விரிசை அருளிளங்குமரன் (1999- 'வானில் தேயும் நிலவு'
என்ற பெயரில் கவிதை நாடகம்)

புவியரசு (1999)

ஆகியோரின் பெயர்ப்புகளும், தழுவல்களும் நூல் வடிவம் பெற்றன.

அ.சி மொழிபெயர்த்துள்ள ஒத்தெல்லோ சாகித்திய அகாதெமி சார்பாக வெளிவந்தது. முதன் முதலாக ஒருவர் செய்திருக்கும் மொழிபெயர்ப்பினைப் பின்னவர் படிக்க நேரிடும்போதோ அல்லது அதனைப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றிராமல் மொழி பெயர்க்கும் போதோ தங்களுக்கென்று தனித்த சில இயல்புகளைக் கொண்டு மொழிபெயர்த்திருப்பதனை அறிய முடிகிறது. பின்னால் வந்தவர்கள் முந்தைய பெயர்ப்பிலிருந்து காலத்திற்கு ஏற்ற மொழி நடையைப் புதிதாய்த் தந்திருப்பதனை அறியலாம். பெயர்ப்பை அமைத்துக்கொள்ளும் போது, ஒருவரோடு ஒருவர் மாறுபடுவது இயல்பு. அவற்றில் மொழியின் ஆளுமையையும் வெளிப்படுத்தும் திறமும், பெயர்ப்பின்

அருமையும் தோன்றுமாறு பெயர்த்திருக்கின்றனர். பெயர்க்கப்பட்ட காலம், பெயர்ப்பை அமைத்துக்கொண்ட பாங்கு, மூலமொழிக்கும் பெயர்ப்பு மொழிக்கும் இடையே நிலவும் உறவும், உறழ்வும் முதலியவை ஆராயத்தக்கன.

ஒத்தெல்லோவை மொழிபெயர்த்தவர்கள் பெரும்பாலும் மூல மொழியிலிலிருந்து விலகாமல் பெயர்த்துள்ளனர். தொடக்க காலத்தில் அந்நாடகத்தைப் பெயர்த்தோரிடம் இத்தகைய போக்கு காணப்படுகிறது. சிலரின் பெயர்ப்பில், கருத்துச் சுருக்கம், ஒட்டுமொத்தக் கருத்தைத் தொகுத்துத் தரல், கதை மாந்தர் பற்றிய திறனாய்வு, இன்றியமையாத இடங்களின் சூழலைத் தனியே விளக்கியுரைத்தல், பொருட்குறிப்புத் தருதல், குறிப்புரை தருதல் முதலிய நிலைகளில் தங்கள் பெயர்ப்பின் அணுகுமுறையாகக் கொண்டுள்ளனர். மொழிபெயர்ப்பில் விடுபாடு களையும் காணமுடிகிறது. தேவையில்லை என்று கருதி விட்டிருக்கலாம். பின்னர் வந்த பெயர்ப்புகளில் ஒட்டுமொத்த கருத்துகளைப் பெய்திருப்பதையும் காணலாம். அரு. சோமசுந்தரம் பெயர்ப்பில் இத்தகைய போக்கினைக் காணமுடிகிறது. விரிசை இளங்குமரன் பெரும்பாலான இடங்களில் அ.சி.யின் தாக்கத்தைக் கொண்டே பெயர்த்திருப்பதோடு கவிதை நாடகம் போலவே படைத்துள்ளதனை உணரமுடிகிறது. புவியரசின் பெயர்ப்பில் இக்காலத்திற்கு ஏற்ற வகையில் அவர் நடை அமைந்துள்ளது.

அ.சி.யின் ஒத்தெல்லோ மொழிபெயர்ப்பு, எளிமையாகவும், இலக்கிய உணர்வோடும், உணர்ச்சி வாய்ந்த பாத்திர உரையாடலோடும், சிற்சில இடங்களில் தமிழ் மரபோடும் அமைந்துள்ளது. அ.சி. தமது மொழிபெயர்ப்புக்கு டோவர் வில்சனின் பதிப்பை எடுத்துக்கொண்டுள்ளார். சேக்ஸ்பியரின் துன்பவியல் நாடகங்களுள் ஒத்தெல்லோ சிறந்த துன்பியல் நாடகமாகக் கருதுவர் சேக்ஸ்பியரின் நாடகத்திறனாய்வாளர்களில் சிறந்த ஏ.சி பிராட்லி. அ.சி இந்நாடகத்தை மொழிபெயர்க்க இத்திறனாய்வாளரின் கருத்தின் ஒத்திசைவு காரணமாக இருந்திருக்கக்கூடும். உணர்ச்சியும் செறிவும் கொண்டுள்ள நடையினைக் கீழ்க்காணும் பகுதி காட்டும்.

என் மனைவியின் வளர்ப்பிற்கு ஏற்ற நல்ல பெருமையும் இடமும் உதவியும் உறையுளும் மதிப்பும் காட்டுதல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.[88] I crave fit disposition for my wife உணர்ச்சி வாய்ந்த நடை பாத்திரத்தின் மீது கழிவிரக்கம் தோன்றுமாறு நாடக மொழிபெயர்ப்பு அமைந்துள்ளமைக்குச் சான்று. எனக்குத் துன்பம் தரவேண்டும் என்று ஆண்டவன் கருதினால் கூட வருத்தப்படமாட்டேன். புண்களையும் துயர்களையும் தலைமீது மழை போலச் சொரிந்திருந்தால் கூடப் பல்ஒட்டிப்போகும்படி வறுமையினால் வாட்டமுற்றிருந்தாலும் நான் எதிர்பார்த்தவாழ்வெல்லாம் சிறைப்படுத்தப்பட்டிருந்தாலும், ஏதாவது கொஞ்சம் பொறுமை கண்டிருப்பேன். ஆனால், அந்தோ! ஏனை நகைப்பிற்கு எதிரே காட்டப்படும்உருவமாக என்னை ஆக்கியதுதான் பொறுக்கமுடியவில்லை. அதைக் கூடப் பொறுத்தாலும் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், எங்கே என் இதயத்தைச் சேமித்து வைத்தேனோ, எங்கே நான் வாழலாமோ அன்றிச் சாகலாமோ எந்த இடத்திலிருந்து என் மின்கதிர் அருவியாய் ஓடுகிறதோ அன்றி வற்றிவிடுகிறதோ அந்த இடத்திலிருந்து வெறுத்து ஒதுக்கப்பட்டேன்.[9]

ஒத்தெல்லோ டெஸ்டிமோனாவின் கழுத்தைநெரித்துக்கொள்வதற்கு முன் அவன் பேசும் பேச்சு உணர்வுபடப் பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக இருந்ததுதான் எனக்கு வருத்தத்தைத்தருகிறது. தூய விண்மீன்களே காரணம் இன்னது என்று சொல்லமாட்டேன். காரணந்தான் கவலையைத்தருவது. ஆயினும்,இவளுடையஇரத்தத்தைச் சொட்டவிடேன்.

பனிக்கட்டியிலும்வெண்மையானதும்.வெண்மையினும் மென்மையானதும் ஆகிய இவள் தோலினை வடுவாக்கமாட்டேன். எனினும். இவள் செத்தாக வேண்டும். இல்லையேல். இன்னும் பல மனிதரைப் பாழ்படுத்திவிடுவாள். விளக்கை அணை. பிறகு அந்த ஒளியை அணை. விளக்கினைஏற்றிக் கொள்ளமுடியும். ஆனால். உன் ஒளியினை அணைத்து விட்டால் எந்தப்பெரு விளக்கினைக் கொண்டு ஏற்றுதல் கூடும் என்பதை அறியேன். உன்னுடையநறும் பூவினைப் பிய்த்துவிட்டால் அதற்கு மறுபடியும்வளர்ச்சியைத் தருதல் இயலாது. அது வாடிப் போகவேண்டியதுதான். மரத்திலே முகந்துபார்க்கவேண்டியதுதான். நேர்மையான வாளினை உடைத்தெறியும்படி தூண்டிவிடும் மெல்லிய நறுமணமே.... நான் அழவேண்டும். இந்த வருத்தம் விண்ணுலகத் தொடர்புடையது. என் அன்புக்குரிய இடத்தையே உதைக்கிறது.[10]

இத்தகைய பேச்சின் மூலம் ஒத்தெல்லோவின் கொடூரமான உணர்வினைப் பெயர்ப்பில் வெகுளிச் சுவை குன்றாதவாறு செய்திருக்கிறார் அ.சி

ஒத்தெல்லோ நாடகத்தின் ஆணிவேர் கைக்குட்டை பற்றிய ஐயம் என்றறிவோம். அந்த நாடகமே கைக்குட்டை பற்றிய துன்பியல்தானே! அந்த ஐயத்தின் இயல்பை இயாகோ கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறான். அ.சி பெயர்க்கும்போது.

காற்றுப் பட்டாற் பறந்தோடும் அளவு மெல்லியன கூடச் சந்தேகப் பிராணிகளுக்கு வேத வாக்கியம் போல அமைந்த பெருஞ்சான்றுகளாகும்[11]

என்று எளிமையாகப் பெயர்த்துள்ளார்.

இலக்கிய உணர்வு தோன்றத் தம் சொல்லாட்சிகளை ஆங்காங்கே கடைபிடித்தொழுகும் முறைமையை அவரிடம் காணலாம்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும் அறிந்திருக்கிறேன்[12]

வறியவரே ஆயினும் திருப்தி உடையவர் செல்வம் நிறைந்தவர் ஆனால். தான் வறியன் என்று நினைத்து அஞ்சுபவனுக்கு எல்லையில் செல்வக்காலையும் இலையுதிர் அல்லற்காலம் போல வறியதே ஆகும்.[13]

இது பழந்தமிழ்ச் செய்யுளில் காணப்படும் உவமை போல அமைந்திருப்பதனை எண்ணியே இவ்வாறு பயன்படுத்தியிருக்க வேண்டும். வறியவன் சிறுமை போல் வாடிய சினையவாய்' என்ற கலித்தொகைத் தொடர் இங்கு நினைவுக்கு வருகிறது. டெஸ்டிமோனாவின் அழகினை வியக்கும் வகையில்.

அவளது கண்ணழகே அழகு;

அக்கண்ணெதிரே வாய்ச்சொற்கள் பயனில்லை[14]

திருக்குறள் கருத்தினை இங்கு அழகுறப் பொருத்தியுள்ளமை எண்ணிப்பார்க்கத்தக்கது.

அவர் ஒப்பிலா மாணிக்கம் ஒன்றைப் பெற்றுள்ளார். அந்தச் சீர்சால் நங்கை வருணிப்பில் அடங்காதவர்.அவர் பண்பு காரணமாக. எழுதிக்காட்ட வொண்ணாஓர்அழகிய கலைப்பொருள்.[15]

இவ்வாறு இலக்கிய உணர்வினை ஆங்காங்கே பொருத்தி உள்ளமை அ.சி. யிடம் இயல்பாகவே இருக்கும் இலக்கியத் தாக்கத்தை அறிந்துகொள்ள ஏதுவாகிறது.

சேக்ஸ்பியரின் நாடக உரையாடலில் இரட்டுற மொழிதல் (pun upon the words) என்பது தனித்த சிறப்புக்குரியது. தமிழில் இதனைப் பெயர்ப்பது என்பது சற்றே கடினமானதுதான் என்றாலும் பெயர்ப்பாளர்கள் தத்தம் புலமையைக் காட்டியுள்ளனர். ஒத்தெல்லோவில் நகைவேழம்பர் ஒருவனும், இசைக்கலைஞர் ஒருவனும் உரையாடுமிடத்தே முதலாமவன், 'அங்கே ஒரு சதை தொங்குகிறது' என்று சொல்கிறான். அதற்கு மறுமொழியாக ஒலி உச்சரிப்பில் ஒன்றுபடும்படியான சொல்லாக இசைக்கலைஞன் எங்கே ஐயா கதை தொங்குகிறது என்று கேட்கிறான். மூலத்தில் Tail- Tale என்று வருவதனை அ.சி சதை, கதை என்று இரட்டுற மொழிதலாகப் பயன்படுத்தியுள்ளார். அது போல, கேசியோ எங்கு வாழ்கிறார் என்று டெஸ்டிமோனா நகைவேழம்பரைப் பார்த்துக் கேட்கவும் அவன் அவர் வாள் (வீசிக்கொண்டிருக்கிறார்)கிறார் என்று பதில் இறுக்கிறான். மூலத்தில் லிவீமீஎ- றீவீமீஎ என்று வருவதனைப் பெயர்ப்பாளர் வாழ்-வாள் என்று ஒன்று போலாக்கி இரட்டுற மொழிந்துள்ளார்.

சில தொடர்களைத் தமிழ் மரபில் பொருத்திக் காட்டுவது அ.சி.யின் பெயர்ப் பெருமையை உணர்த்தும். சான்றாக, தனக்கு ஈட்டமும் ஊட்டமும் தரும் படிப்பினையாதலால் இலாபம் என்று வருமிடத்தே (I thank you for this profit) profit என்பதற்குப் பாடம் என்று பெயர்த்து, நான் இந்தப் பாடத்தைப் பெற்றதற்காக நன்றியுடையேன்' எனப் பெயர்த்துள்ளார். அது போல, இயாகோ தனக்குள்ளே ஒத்தெல்லோவைப் பற்றி நகையாடும் சூழலில் அவனைக் கல்வி அறியாப் பொறாமை (unbookish jealousy) என்றும், ஒத்தெல்லோ டெஸ்டிமோனாவை வேசி எனக் கூற, ஒத்தெல்லோவிற்காகத் தன்னைப் பாதுகாத்துவருவதாக உரைக்குமிடத்து.

அவள் தன்னைப்பற்றிக் கூறும்போது நீதியற்ற தொடுகை (Unlawful Touch) என்றும் பெயர்த்திருப்பது கவனமாகவும், கூர்மையுடனும் செய்திருப்பதாகத் தோன்றுகிறது. சில மரபுத் தொடரின் பயன்பாட்டை அழகிய முறையில் பொருத்திக் காட்டியுள்ளார். குறிப்பாக, தொடை நடுங்கிகள் (knee crooking knave) காலக் கடப்பிற்கு விட்டுவிடுங்கள் (leave it time) அடக்கிப் பேசு (speak within door) எனப்பெயர்த்திருப்பது எண்ணத்தக்கது.

## ஒத்தெல்லோ மொழி பெயர்ப்பு -ஒப்பீடு

ஒத்தெல்லோவை அ.சி. க்கு முன்னர் மொழிபெயர்த்தவர்களுள் அ.மாதவய்யா, எம்.எஸ்.துரைசாமி, டி.என்.சேசாசலம் ஆகியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்களாவர். இங்குச் சுட்டிக் காட்டியவர்கள் அனைவருமே கவனமாகவும், நுட்பமாகவும் மொழிபெயர்த்திருப்பதைஅறியலாம். இவர்களின் பெயர்ப்புகளோடு அ.சி.யின் பெயர்ப்பினை ஒப்பிட்டு உணரலாம். ஒத்தெல்லோவில் இடம் பெற்றுள்ள கவிதைகளை அ.சி. அவர்கள் அழகுறப் பெயர்த்துள்ளமை அறியற்பாலது. இயாகோ கள்ளருந்திக் களிக்கும் சூழலில்,

மோத்தை ஒன்று மோத்தை ஒன்று
ஆத்தை ஒன்று ஆத்தை ஒன்று

படைஞன் ஒருவன்
வாழ்க்கை ஒரு முழம்
ஆயின் படைஞன் குடித்தல் நன்று[1616]

**And let me the canakin clink, clink**
**And let me the canakin clink, clink**
**A soldier's man**
**A life 's but a span:**

**Why, then, let a soldier drink (II/ii 59-63)**-அ.சி

தாரீர் மதுவெனத் தட்டுகின் றேனிதை

போரினிற் புகழ்சால் வீரனும் மனிதனே

தேரி னுயிர்வாழ்வும் நீரினிற் குமிழியே
வாரீர் மதுவினை வீரர்கா ளுண்போம்
ஏதோ கொஞ்சம் மது -எம்.எஸ்.டி

குவளையை நான் கொட்டுவன். கொட்டுவன்
யுத்த வீரனும் ஓர் நரன் தானே
உலக வாழ்க்கையும் என்னே ஓர் சாணே
பின்னை யென்ன அவன் குடிக்கட்டும்
அடே பயல்களா. சிறிது திராக்ஷ மது -டி.என்.சே

இவ்வாறு கவிதையைப் பெயர்த்துள்ளனர். தங்கள் நோக்கில் மொழி பெயர்த்திருப்பினும் அ.சி. ஆங்கில மூலத்தின் சொற்களுக்கு ஏற்ப ஆத்தை. மோத்தை என்று மொழிபெயர்த்திருப்பதைக் காட்டிலும் மற்றவர்களின் பெயர்ப்பில் மொழியாக்கமாகச் சிறந்துள்ளது. டெஸ்டிமோனா பழம்பாடல் ஒன்றைப்பாடுமிடத்து. ஷ்வீநீஷீஷ்வைப் பற்றி வருகிறது. அ.மா. வில்லோவை வில்லுவம் என்று தமிழ்ப்படுத்தியுள்ளார். எம்.எஸ். துரைசாமி. தம் விருப்பப்படி' ஊது சங்கே என அடிதோறும் வரும்படியாக அந்த மெட்டில் மொழியாக்கம் செய்திருக்கிறார். இது தழுவி எழுதுவோர்க்கு உள்ள உரிமையைக் காட்டுகிறது. வில்லோவைச் சோகத்தின் குறியீடாகக் குறிப்பிடுகிறார் அ.மாதவய்யா. அ.சி யின் பெயர்ப்பு பின்வருமாறு :

களையாத பெருந்துயரக்
காட்டினிலே இடர்ப்பட்டுக்
கவல்கின்ற அத்திமரத்
தோட்டத்தில் நீருகுத்தே
இளகாத கருங்கல்லை
இளக்கிவிடும் இன்னலந்தோ
இளவலரி இளவலரி
இன்னலறி எனுந்தானே

கைகளவள் மார்பினிலே
கவலுந்தலை மடிமீதில்
கரைந்துவரும் ஓடைநீர்
கழறிநிற்கும் அவள்துயரை
மெய்தளர உளமுடைந்து
மேலுரைப்பாள் இளவலரி
மேனின்றே இகழறக
மிகுந்தினிக்கும் அவனிகழ்ச்சி[17]

The poor soul sat sighing by a sycomore

என வரும் கவிதை சூழ்நிலையை உணர்த்தும் வண்ணம் மொழி

பெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு அ.சி. தமிழ் மரபிற்கு ஏற்றவாறு அலரி என்று பெயர்த்திருக்கிறார். டெஸ்டிமோனா ஒத்தெல்லோ காதலில் மயங்கியதை அவள் தந்தையான பிரபான்ஷியோ விடம் இயாகோவும், ரோடரிக்கோவும் கூறவருமிடத்தைப் பெயர்ப்பாளர்கள் தங்கள் நோக்கில் பெயர்த்துள்ளதைக் காணலாம்.

உம் மகளை ஒரு பார்பரி தேசத்துக் குதிரைக்குக் கட்டிக்கொடுக்க உடன்படுகிறீர் (அ. மா)

ஒரு பார்பரிக் குதிரைக்கு வாழ்க்கைப்படச் சம்மதிப்பீர் (டி.என். சே)

உமது மகள் வேற்றுப் புலத்துக் காளையால் கவரப்படட்டும் (அ.சி)

உங்கள் மகளைக் காட்டுமிராண்டிக் குதிரை கவரட்டும் (அரு.சோ)

அ.மாதவய்யா பார்பரி தேசத்துக்குதிரை[18] என்று எழுதிச் செல்கிறார். டிஎன்.சே. பார்பரி குதிரை என்றே அப்படியே எழுதியுள்ளார். அ.சி குதிரைக்குப் பதிலாக ஆண்களைப் பொதுவாகக் காளை என்று தமிழில் வழங்குவதனை இடமாற்றுகிறார். இது ஒவ்வொருவரும் அவரவர் நோக்கில் பெயர்த்திருப்பதனைத் தெரிவிக்கிறது. பார்பரி குதிரை என்பது குதிரை வகைகளுள் ஒரு தனிஇனத்தைச் சார்ந்ததாகும் என்று தெரிகிறது.

ஒத்தெல்லோ எங்கு இருப்பான் என்பதனை டெஸ்டிமோனாவின் தந்தையிடம் இயாகோ கூறுகிறான். உணீரீவீமீமீணீக்ஷீஹ்[19] யில் இருப்பான் என்று அவன் கூறியதை ஒவ்வொரு வகையில் பொருள் கொண்டு மொழிபெயர்த்துள்ளனர்.

'அவனை உறுதியாகக் கண்டு பிடிக்க வேண்டுமானால் எழுப்பித் திரட்டிய தேடு கூட்டத்தை அம்புக்குறிக்கு அழைத்து வா. நான் அங்கே அவனோடுதான்இருப்பேன் (அ.மா)

ஸாஜிட்டாரிக்கு நடத்திச் செல். அங்குதான் நான் அவனோடு இருப்பேன். (டி.என்.சே)

உண்ணும் சாவடியில் அவரைத் தேடிக்கொண்டுபோனால் அங்கே கட்டாயம் அகப்படுவார் (அ.சி)

டி.என்.சேசாசலம் தம் குறிப்புரையில் ஸாஜிட்டரி என்பது இன்னதென்று தெரியவில்லை. ஒத்தெல்லோ வெனிஸ் நகரத்தில் தங்கியிருந்த விடுதியின் பெயராக இருக்கலாம். இது அந்நகரத்தில் உள்ள ஆயுதச் சாலையின் பெயரென்றும் சிலர் கருதுகின்றனர் (கலாநிலையம் 10 ஜனவரி 1935 பக்.21)

என்று எழுதிய இவரே பின்னர். இந்நாடகத்தில் காஸியோவிடம் ஒத்தெல்லோ உரையாடுமிடத்தே 'ஸாஜிட்டரி' என்பது ஒரு வீட்டின் பெயராக இருக்கலாம் என்று ஊகித்து எழுதுகிறார்.

அ. மாதவய்யா தம் குறிப்புரையில் விளக்கம் தந்து அதன் பொருட்புலப்பாட்டைத்தெரிவிப்பர்.

மேனாட்டுப் புராணங்களில் இடம் பெற்றுள்ள பெயர்களைத் தமிழ் மரபிற்கு ஏற்ப மொழிபெயர்ப்பாளர்கள் தருவதனைக் காணலாம். janus என்று கூறப்படும் தெய்வத்தை இயாகோ ஓரிடத்தே குறிப்பிடுகிறான். அதனை அ.மா. டி.என்.சே. ஆகியோர் அப்படியே பயன்படுத்தியுள்ளனர். எம். எஸ். துரைசாமி நான்முகனாக்கிவிடுகிறார். அ.சி. இரட்டை முகமுடைய கடவுள் என்று சுட்டியுள்ளார். இயாகோ இவ்வாறு உரைப்பது பொருத்தமே என்று குறிப்பும் தந்துள்ளார். அ.மாதவய்யா குறிப்பில் ரோமரால் தொழப்பட்டு வந்த இருமுகத்தேவதையின் பெயர் என்று குறிப்புத் தந்துவிட்டு இரு முகவஞ்சகனாகிய இயாகோ இவ்வாறு சத்தியஞ்செய்தற்கு உரியவன் என்று எழுதியுள்ளார். டி.என்.சே. தமது குறிப்புரையில்.

ஜேனஸ் என்பது உரோமரது தெய்வங்களுள் ஒன்று. இதற்கு இருப்பது ஒரு தலையானாலும் அத்தலையின் இருபுறமும் முகங்கள் உண்டு. ஒத்தெல்லோவுக்கு நண்பன் போல். இங்கொரு முகமும். பகைவன் போல் அங்கொரு முகமும் காட்டுகின்ற இந்த இரண்டகன் வாயில் இருமுகக் கடவுளின் பெயரே வந்தது தக்கதாயிற்று என விளக்கம் தருவர்.

பெயர்ப்பாளர்கள் தங்களுக்குக் கிடைத்த சேக்ஸ்பியர் பதிப்புகளை அல்லது தாங்கள் விரும்பிய பதிப்புகளைத் தங்கள் பெயர்ப்புக்குளடுத்துக்கொண்டமையால் சிற்சில மாற்றங்கள் தென்படுவது இயல்பு என்பதையே இது காட்டுகிறது.

சிறு சொல் கூடப் பெயர்ப்பாளர்களிடையே விதவிதமாகப் பெயர்க்கப்பட்டிருப்பதற்கு ஒரு சான்று காட்டலாம். virtue! ணீ யீவீரீ என்பதனை மண்ணாங்கட்டி என அ.மா.வும். தருமமா. அது அத்திக் காய் என டி.என்.சே.வும். பிரமாத தருமமாம்! கத்தரிக்காய் என அ.சி.யும். பண்பு. அது அத்திப்பூ என அரு.சோ.வும் பெயர்த்திருப்பது சுவையானது. மண்ணாங்கட்டியும். கத்தரிக்காயும் தமிழ் மரபை ஒட்டி அமைந்துள்ளன. காய் பூவானது விந்தையாக இருக்கிறது.

ஒத்தெல்லோவின் காதலி டெஸ்டிமோனா தன் காதலைத் தெரிவிக்கும் இடத்தில்.

எனது நேருற ஆழ்ந்த வன்மையும் அதிர்ஷ்டத்தின்
சூறாவளியும் உலகிற்கு எக்காளம் ஊதலாம்'[2020]

**That I did love the Moor to live with him,**
**My downright violence and storm of fortunes**

என டி.என். சேசாசலம் பெயர்த்துள்ளார். அ.சி. இதனை.

நான் தெரிந்துதெடுத்துக் கொண்டிருக்கிற வழியும். என் வாழ்க்கைப் புயலும் ஒத்தெல்லோவைக் காதலித்து அவரொடு வாழவிரும்பினேன் என்பதைப் பறையறையும்'

எனப் பெயர்த்துள்ளார். அ.சி. அவர்களின் பெயர்ப்பு பொருட் புலப் பாட்டை எளிமையாக்கித் தெற்றென உணரவைக்கிறது.

மொழிபெயர்ப்பு. சில இடங்களில் மொழியாக்கமாக அமைந்துவிடும் சூழ்நிலையும் உண்டு. சான்றாக. மாண்டனோ. கேஸியோவைப் பார்த்து ஒத்தெல்லோவிற்கு மனைவி இருக்கிறாளா என்று கேட்குமிடத்து. அவன் டெஸ்டிமோனாவின் அழகை விவரிக்கிறான்.

நலமிகு அதிர்ஷ்டமே! வருணனையும் கட்டுக்கடங்காப் புகழையும் கடந்து நிற்கும் வீறுடைய மாதொருத்தியைச் சார்ந்திருக்கின்றார். மிகவே புனைந்து விளம்புகின்ற எழுது கோல்களின் மொழிகளின் திறமனைத்தையும் விஞ்சுகின்றவள். படைப்பின் சாரமான உடுப்பினில் அவள் சூழ்ச்சித் திறமுடைய புலவனைக் களிப்படையச் செய்கின்றாள்.[2121]

**That hath achieved a maid**
**That paragons description and wild fame**
**one that excels the quirks of blazoning pens**

என டி.என். சேசாசலம் மூலநூலின் கருத்திணங்க அப்படியே மொழிபெயர்த்திருக்க. அ.சி. இப்பகுதியைக் கீழ்க்காணும் வகையில் மொழியாக்கமாக மாற்றுகிறார்.

அவர் ஒப்பிலா மாணிக்கம் ஒன்றைப் பெற்றுள்ளார். அந்தச் சீர்சால் நங்கை வருணிப்பில் அடங்காதவர்.அவர் பண்பு காரணமாக. எழுதிக்காட்ட வொண்ணா ஓர்அழகிய கலைப்பொருள்

எனப் பெயர்த்திருப்பது செறிந்த இலக்கிய நடையைக் காட்டுகிறது. மொழிபெயர்ப்பு என்று தெரியாதவாறு மொழிபெயர்த்துள்ளார் அ.சி.

பெண்களைப்பற்றித் தன் மனைவி எமிலியாவிடம் வசைபாடும் இயோகோ பேசும்போது

நீங்களெல்லாம் வெளியே வந்தால் சித்திரப்பதுமைகளே! வீட்டு முன்கட்டில் வெண்கலமணிகள் சமையல் அறையில் காட்டுப் பூனைகள்; ஏதேனும் தீங்கிழைக்கும்போது. பரம சாதுக்களாகவே தோற்றம்; கோபம் வந்துவிட்டாலோ பைசாசங்கள்தான்; கிரக கிருத்தியங்களில் படுக்கையில் தான் குடித்தனச் சுறுசுறுப்பு எல்லாம்.விளையாட்டுத்தனமே![2222]

**You are pictures of doors**
**Bells in your parlours, wild cats in your kitchens**

என அ.மாதவய்யா பெயர்த்துள்ளார்.

டி.என்.சேசாசலம்.

> மனையின் வாயிலிற்கு வெளியே நீங்கள் சித்திரப்படங்கள்; கூந்தல் ஒய்யாரிகள்; சமையற்கட்டிற் காட்டுப்பூனைகள். உங்கள் தீமைகளில் உத்தமிகள்; வெகுண்டக்கால் பேய்கள்; வீட்டுக்காரியத்தில் விளையாட்டுக்காரிகள்; மற்றும் பள்ளியிடத்தோ வீட்டுக்காரிகள்

என மொழிபெயர்த்துள்ளார்.

அ.சி. யின் பெயர்ப்பு வருமாறு;-

> நீங்கள் எல்லாம் வீட்டிற்கு வெளியே நடமாடும் ஓவியங்கள்; திண்ணையில் மணிகள்; சமையற்கட்டில் காட்டுப் பூனைகள்; துயரின் தேவ பக்தர்கள்; குறை கூறப்பட்டால் பைசாசங்கள்; வீட்டுவேலை செய்யும் பொழுது விளையாட்டுப் பிள்ளைகள்; துயிலிற் சிறந்த வேசிகள்

இம்மூன்று மொழிபெயர்ப்புகளை நோக்கப் பெண்களை வசைபாடும் இயகோவின் உணர்ச்சி இவர்களின் கண்ணோட்டங்களில் உரைவீச்சாக வெளிப்பட்டுள்ளது. இயகோவின் பேச்சுத் தொனி பெயர்ப்பில் மூலத்தில் உள்ளபடியே உருவாகியுள்ளது. இருப்பினும் அ.சியின் பெயர்ப்பின் இறுதி வாசகம் சற்றே கடுமையாய் இயகோவின் மனவெளிப்பாட்டைப் பிரதிபலிப்பது போல் உள்ளது.

ஒத்தெல்லோவிடம் டெஸ்டிமோனா பற்றி உரையாடும் இயகோ அவள் வஞ்சனை மிக்கவள் என்று சொல்லும் இடத்தில், அ.மாதவய்யாவிடமிருந்தும், டி.என்.சேசாசலத்திடமிருந்தும் மாறுபட்ட நிலையில் அ.சி மொழிபெயர்த்திருப்பதனைப் பார்க்கிறோம்.

அது பின் வருமாறு :-

> இவ்வளவு இளமையிலேயே தன் தகப்பன் மந்திரவாதமென்று எண்ணும்படி சுவர் வைத்தாற்போல் அவர் கண்ணை முழுதும் மறைத்து மேலுக்கு நடிக்கவல்லவன்.[23] (அ.மா)

இவ்வளவு இளமையளாயிருந்தும் தன் தந்தையின் கண்களை மரம் போல் இறுகத் தைத்துவிடும்படியாய ஒருதோற்றத்தைத்தரக்கூடியவள்.

(டி.என். சே)

கண்ணிமைபோல் காத்த தந்தையின் கண்ணில் மண்ணைத் தூவி இவ்வளவு சின்ன வயதிலே தன் தோற்றத்தால் ஏமாற்றக்கூடிய அந்தப் பெண் (அ.சி.)

இம்மூவரில் அ.சி. நேரடியான பொருளைத் தராது தமிழ் வழக்குக்கு ஏற்பப் பெயர்த்திருப்பதைக் காணலாம். மூவரிலும் அ.சி.யின் பெயர்ப்பு எளிமையாகவும், மரபார்ந்தும் இருக்கிறது. இந்த நாடகத்தின் *'வார்விக்'பதிப்பு* (warwick edition) இந்தப்பகுதி பெயர்ப்பதற்குக் கடினமாக இருப்பதான ஒரு குறிப்பைத் தந்திருப்பினும் அ.சி.யின் பெயர்ப்பில் ஓரளவு புரியும்படியான சூழலை நாடகம் படிப்போரிடம் உண்டாக்கிவிடுகிறது. டெஸ்டிமோனாவைப் பற்றி ஒத்தெல்லோ கருத்துத் தெரிவிக்கும் இடத்தைப் பெயர்ப்பாளர்கள் தத்தம் நோக்கில் சூழலைப் புரிய வைத்துள்ளனர்.

வயப்படா வல்லூறாக அவளை நான் ரூபிப்பேனாயின், அவள் கால்களின் வார்கள் என் இதயத்தின் நார்களாயிருந்தபோதிலும் வீதியிலே இரை தேடிக்கொள்ளும்படி அவளைக் காற்றினோடு ஊதித் தள்ளிவிடுவேன்[24]

என்று மொழி பெயர்த்துள்ளார் டி.என்.சே.

இதற்கு அ.சி மொழிபெயர்ப்பு வருமாறு:

இவள் பொருந்தாப் புறா என்பது வெளியானால், நான் இவள் இதயத்தோடு இதுவரை கலந்திருந்தாலும், இப்பொழுதே ஓடும்படி செய்து தன் விருப்பம் போல் அதிர்ஷ்டத்தைத் தேடிக்கொள்வேன்.

என மொழிபெயர்த்திருப்பது சிந்திக்கத்தக்கது.

மேலே கண்ட இரண்டுமே சிறந்த பெயர்ப்புகள். எனினும், haggard என்பதற்கு வல்லூறு என்பதே சரியான சொல். அ.சி புறா என்று பெயர்த்திருப்பது வித்தியாசமானது. டெஸ்டிமோனா மென்மையிலும் வன்மை மிக்கவளாகத் இருப்பதாக உணரப்படுவதால், ஒத்தெல்லோ, அவளை வல்லூறு என்று சுட்டுகிறான். புறா என்ற சொல்லாக்கம் இங்குப் பொருந்தாதெனினும், அ.சி முன்பு ஒரு காட்சியில் ஒத்தெல்லோவைக் காளை என்று சுட்டியிருப்பது போல, அவளைத் தமிழ் மரபுப்படி ஒரு பெண்ணைப் புறா என்று பெயர்த்திருப்பது மொழி மரபிற்கு ஒத்ததாகப்படுகிறது.

நாடக உரையாடலில் எதுகை, மோனையும் பயின்று வருவதனை மொழி பெயர்ப்பாளர்கள் தத்தம் பார்வையில் பெயர்த்துள்ளமை சுவையான தகவலாகும். சான்றாக, ரோடரிகோவும், இயகோவும் உரையாடுமிடத்து we work by wit not by witchcraft (Act II 11/sc.III lines 343) என்ற தொடரைக் கீழ்க்காணுமாறு அணுகியுள்ளனர்.

நாம் மதிகொண்டு வேலை செய்கிறோமேயன்றி,
மந்திரங் கொண்டன்று (அ. மா)

நாம் இயற்றுவது மதியினாலன்றி, மந்திரத்தாலன்று
(எம்.எஸ்.டி & டி.என்.சே)

நாம் விரகினால் செய்கின்றோமே அல்லாமல்
விந்தையினால் அன்று (அ.சி)

பெருவிரகி னாலே நண்ணி னோம்வினை நலிவிந் தைதானா
லன்றென அறிக (விரிசை. இளங்)

மனிதர்கள் புத்திகொண்டு செயல்படவேண்டும்;
மந்திர சூனியத்தால் அல்ல (புவியரசு)

இங்கு அ.சி. முன்னைய பெயர்ப்புகளைக் காட்டிலும் விரகு, விந்தை என்ற சொற்களைப் பெய்து தம் தனித்தன்மையை உணர்த்தியுள்ளமை காண்க.

இயாகோ டெஸ்டிமோனாவைப் பற்றி ஒத்தெல்லோவிடம் தவறான செய்திகளைச் சொல்ல எண்ணி வஞ்சக வலை விரிக்கிறான். தன்னோடு கேஸியோ உரையாடிவிட்டுச் சென்றபோது. தனிமையில் இயாகோ தனிமொழி பேசுகிறான். அதனைப் பெயர்ப்பாளர்கள் ஒவ்வொருவரும் பெயர்ப்பருமை தோன்ற உணர்த்தியுள்ளனர்.

> இதுதான் வேதாகமம்! பைசாசங்கள். அதிகொடூரமான பாதகங்களைத்தூண்டும்பொழுது நான் இப்பொழுது செய்வதுபோல். தெய்வீகமான புண்ணியத்தோற்றங்களை முதலிற் காட்டி. மனத்தைக் கவர்கின்றன. இவ்விதமாக அவள் நற்குணத்தைக் கரியாக்கி. அவள் சத்துவ குணத்தைக் கொண்டே அவர்களனைவரையும் சிக்கச் செய்யும் வலையை உண்டுபண்ணி விடுகிறேன்.[2525]

**Divinity of hell !**

**When devils will their blackest sins put on**

என்று அ.மாதவய்யா மொழிபெயர்த்துள்ளார். எம்.எஸ்.துரைசாமி.

என்று அ.மாதவய்யா மொழிபெயர்த்துள்ளார்.

எம்.எஸ்.துரைசாமி.சிரித்துக் கழுத்தறுப்பதென்பது இதுதான்! கொடிய பைசாசங்கள். கோரமான பாதகத்தைச் செய்யுமுன் இப்படித்தான் என்னைப் போல் முதலில் தெய்வீகமான புண்ணியங்களைக் காட்டும். இவ்விதம் அவளுடைய உத்தமகுணங்களைப் பாழாக்கி அவளுடைய நற்குணங்களைக் கொண்டே அவர்களுடைய உயிருக்கெல்லாம் உலை தேடுகிறேன்

எனப் பெயர்த்திருப்பது தழுவல் என்ற நிலையில் அவர் எடுத்துக் கொண்ட உரிமையைக் காட்டுகிறது. அ.சி யின் மொழிபெயர்ப்பில்.

> நரகின் கடவுள் தன்மை! நான் இப்பொழுது செய்கிற மாதிரிதான். பைசாசங்கள் கொடிய பாவங்களைத் தேவலோக ஆடம்பரங்களால் மறைக்கின்றன. அவளுடைய நெறிமையையே அவளுக்குத் தீ தாக்குவேன். அவளுடைய நேர்மையைக் கொண்டே ஒரு வலை வீசி அவர்களை எல்லாம் பிடிப்பேன்

என்று பெயர்க்கப்பட்டிருக்கிறது. புவியரசு.

> நரகத்தின் சக்திகளையெல்லாம் இனிக் கிளறிவிடப்போகிறேன்! மனிதர்களைப் பாவம் செய்யத் தூண்டும்போது. பிசாசுகள் மகான்கள் போல் தோற்றமளிக்கும். எவ்வளவு தீவிரமாக வாதாடுகிறாளோ அவ்வளவுக்கவ்வளவு அவள் அவனுடைய மதிப்பை இழப்பாள். அவள் கற்பு கறுத்துப்போகும்படிச் செய்துவிடுவேன். அவளது நற்பண்புகளையே வலையாக விரித்து வைப்பேன். அதில் எல்லோரையும் விழவைப்பேன்.

என்றளவில் அவரது பெயர்ப்பு அமைந்துள்ளது. இப்பகுதியில். **So will I turn her virtue into pitch,** என்ற தொடரில் வரும் **pitch, foul,black, sticky associations** எனப்பொருள் இருப்பதை உணர்ந்து கரியாக்குதல் என்ற சொல்லைப் பெய்திருக்கிறார் மாதவய்யா. இது நேரடிப் பெயர்ப்பு. புவியரசு. கற்புக் கறுத்துப் போகும்படி என்ற தொடரைப் பெய்துள்ளார். மற்றவர்கள் தீ தோடு எனப் பெயர்த்ததோடு நிறுத்திக் கொண்டுள்ளனர்.

அ.சி அவர்களின் மொழிபெயர்ப்பருமைக்கு நயத்தோடு கூடிய சான்று ஒன்றனைக் காட்டலாம். ஒத்தெல்லோவில் எல்லோரும் அறிந்த ஒரு காட்சி. ஒத்தெல்லோ உறங்கிக்கொண்டிருக்கும் தன் மனைவி டெஸ்டிமோனோவின் படுக்கையறைக்குள் நுழைகிறான். ஐயத்தின் பேரில் ஆராயாது அவளைக் கொலை செய்யும் எண்ணத்தோடே வருகிறான்.

அவளைக் கொலை செய்யும் முன் தனி மொழியாக அவன் *பேசுமிடத்து*, put out the light and then put out the light (Act IVSc. /II.Line7) என்கிறான். அ.சி. இதனைத் தமிழில் தரும்போது 'விளக்கை அணை;பிறகு வாழ்க்கையாகிய அந்த ஒளியை அணை' எனப் பெயர்த்துள்ளார். இங்கு light என்பதனைப் பொருள் பொதிந்ததாய்ப் பெயர்த்துள்ளார்.

விளக்கை அணை என்பது விளைக்கையும். ஒளியை அணை என்பது டெஸ்டிமோனாவைக் கொலை செய்ய இருப்பதையும் ஒருங்கே புலனாகும் வகையில் விளக்கு- ஒளி என்ற சொற்களால் வேறுபடுத்திக் காட்டியுள்ள நுட்பம் பிறருடைய பெயர்ப்பில் காணக்கிடைக்காததாகும்.

அ.சி அவர்களின் பெயர்ப்பில். தமிழ் மரபிற்கு ஏற்றவாறு சொற்களைக் கையாளுதல். பழந்தமிழ் இலக்கியத் தொடர்களைப் பயன்படுத்துதல். சொல்லாட்சி. கவித்துவமான நடை. ஒலிக்குறிப்பு. இரட்டுற மொழிதல். மாறுபடக்கூறல். சேர்த்தல். நீக்கல் முதலியவற்றைப் பார்க்க முடிகிறது.. அ.சி.யின் பெயர்ப்பில் சில தனித்தன்மையான சொல்லையும் காணலாம். அருங்கலம் (jewel), நெறிமை (virtue), விறலி (wench) தங்கப் பொன்னுலகு (marble heaven), அணங்கு, (caitiff) கண்ணாட்டி (chuck), செந்நிற அணங்கு (rose lipped cherubin) முதலிய சொற்கள் சில சான்றுகளாகும். ஆங்கிலத்தில் உள்ளது போலப் பன்மைவிகுதிகளைப் பயன்படுத்திக் கொண்ட போக்கினையும் அறியலாம். அன்புகள், (loves) கண்ணீர்கள். (tears) நரகுகள் (hells) முதலிய சொற்கள் இத்தகையன. தமிழின் மரபைப் பெய்துள்ளமையையும் உணரலாம். கண்ணகி (Diana), ஆதிசேடன் (hydra), மேரு (Olympus) எனவும் வருவன சான்றுகளாம். மொழிபெயர்ப்பாளர்களும். தழுவி எழுதியோரும் இத்தகைய முறையைப் பின்பற்றியிருப்பது பொதுமரபாக இருக்கக் காணலாம்.

ஓரோவிடத்து ஆங்கிலச் சொற்களை அப்படியே பின்பற்றிய சூழலையும் எடுத்துக்காட்டலாம். சான்று : கவர்னர். செனட்டர் என்ற சொற்களை அப்படியே கையாண்டிருப்பதை அ.சி யிடம் காணமுடிகிறது. . அ.சி.யின் ஒத்தெல்லோ மொழிபெயர்ப்பு மொத்தத்தில் எளிமையுடன் கூடிய மொழிபெயர்ப்பாகத் திகழ்கிறது.

> அதிக அடிக்குறிப்புகளின்றி.எந்தப் பகுதியினையும் விட்டுவிடாமல். இனிய தமிழில் இவரது மொழிபெயர்ப்புகள் அமைந்துள்ளன.(தினமணி சுடர். டிசம்பர் 16.1989) எனப் பழநி. அரங்கசாமி அ.சி யின் ஒத்தெல்லோ மொழிபெயர்ப்புக் குறித்துத் தம் முனைவர் பட்ட ஆய்வான தமிழில் சேக்ஸ்பியர் என்ற ஆங்கில நூலிலும். தினமணிக் கட்டுரை ஒன்றிலும் எழுதியுள்ள கருத்து ஏற்புடையதாக உள்ளது.

அ.சி ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றை மொழி பெயர்த்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. லீ ஹண்ட் எழுதிய Abou Ben Adhem என்ற கவிதையை 'மக்கட்கு அன்பன்' என்ற தலைப்பில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். அது முல்லை என்ற இதழில் வெளிவந்துள்ள கவிதையாகும் அதன் தமிழ் வடிவம் பின்வருமாறு :

அன்றொருநாள் அயலூரில் அரங்கன் கண்டான்
அறையினிலே ஓருருவம் எழுதுங் காட்சி;
நின்றபடி நின்றிட்டான்; நிலாவும் வீசும்
நிழலுருவம் போற்றிகழும் நீடுருவம் எழுதும்
குன்றனைய குணவுயரக் குமரன் நடந்தான்"
குறுகியவன் அவ்வுருவைக் கூறிடுக என்றான்

பொன்றாத அவ்வுருவம் போற்றிடக் கேட்க
புங்கவன் அன்புள்ள பேரின் பேரை
எனக்கூற ஆங்கவனும் என்பேர் உண்டோ
எடுத்துரைக்க எனக்கேட்க உருவம் பேசும்
உன்பேர்தான் ஈங்கில்லை என்செய்வேன்
உளமுடைந்தும் தளராதே அரங்கன் உரைப்பான்

"நனவோதான் கனவோதான் என்றாலும் எழுது
நானிங்கே இனத்தார்க்கு மக்கட் கன்பன்"
என.ஆங்கே அவ்வண்ணம் எ.முதியே சென்ற
எழிலுருவம் அவன்பெயரை முன்வைத்த தாமே![2626]

Abou Ben Adhe m (may his tribe increase!)

Awoke one night from a deep dream of peace,

And saw, within the moonlight in his room,

Making it rich, and like a lily in bloom,

An angel writing in a book of gold:—

Exceeding peace had made Ben Adhem bold,

And to the Presence in the room he said "

What writest thou?"—The vision raised its head,

And with a look made of all sweet accord,

Answered "The names of those who love the Lord."

"And is mine one?" said Abou. "Nay, not so,"

Replied the angel. Abou spoke more low,

But cheerly still, and said "I pray thee, then,

Write me as one that loves his fellow men."

The angel wrote, and vanished. The next night

It came again with a great wakening light,

And showed the names whom love of God had blessed,

And lo! Ben Adhem's name led all the rest. - Leigh Hunt

## 9. கவிதை முயறசி

அ.சி.க்குக் கவிதை எழுதுவதில் ஓரளவு ஆர்வம் இருந்திருக்கிறது. எனினும், தொடர்ந்து எழுதுவதில் ஆர்வம் காட்டினாரில்லை. தேனாற்றுப்படை என்ற கவிதையைச் செந்தமிழ்ச் செல்வியில் எழுதியுள்ளார். அ.சிதம்பரநாத செட்டியார் பி. ஏ என்ற பெயரில் அதனை வெளியிட்டிருக்கிறார். (செ.செ.சிலம்பு 13. பரல் 4. ஆண்டு 1934.பவ கார்த்திகை) புதுக்கவிகள் (original poetry) என்று தலைப்பிட்டு அவ்விதழ் வெளியிட்டுள்ளது. ஐம்பத்தோர் அடிகளைக் கொண்ட இப்பாடல் சங்க இலக்கிய ஆற்றுப்படை போல் இல்லாமல் பிற்காலத்தெழுந்த சமய வெளிப்பாட்டினைப் புலப்படுத்தி எழுதப்பட்ட சில வகை ஆற்றுப் படையை ஒத்துள்ளது. உலகு என்று வழக்கில் வழங்கப்படும் மங்கலச் சொல்லில் தொடங்கும் இப்பாடல், தும்பியைப் பார்த்து விளிப்பதாகப் பாடப்பட்டிருக்கிறது ஆற்றுப்படை இலக்கணத்தை இவ்வாற்றுப் படையோடு அப்படியே பொருத்திப் பார்க்க இயலாது. மனிதனாகிய வண்டை இறைவனது அடித்தாமரை இடத்து ஆற்றுவித்தது போல் இயற்றப்பட்டுள்ளது. ஆற்றுவிப்பது யார் என்று நேரடியாக இல்லையெனினும் வண்டினை நோக்கிக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. பன்னிற மலர்களை நாடி வரும் வண்டினை..

தினைத்தனைத் தேனுணத் திரிதரும் தும்பி!

அனைத்தா னாந்தம் அளித்திடுந் தேனை
நினைத்துங் கண்டும் உண்டும் வருதும்
எனைத்தே யெனைத்தே யெபுறத் ததுவே
எனநீ வினவிற் கூறுவங் கேட்டி...

என விளித்துக் கூறப்படுகிறது. இறைவனின் ஆற்றலைப் பின்வருமாறு புகழ்ந்துரைக்கிறது.

எனைத்தோ பிறவி யெனவிரப் போர்க்கே
வினைத்தனை நீக்கி விடுத்திடும் அருளும்
தாதைக்குத் தாதை தப்பிலாத் தாயாய்
மேதைக்கும் மேதையாய் மேவிய மேன்மையும்.
ஆருயிர்க் காருயிரா யடைந்தார்க்கு மனைத்துயிராய்
வேடன்பாற் சேர்ந்து விலங்கிய மகற்கு
நாடளித்து நலனல்கு மன்னவன் போலத்
தாடலை வைத்தற்குந் தனதாக்கிக் கொள்ளற்கும்..

.................

பொள்ளற் பிழைகள் எல்லாம் பொறுத்துக்
கள்ள மனத்தைக் கரைக்கும் விச்சையும்
திருவா சகமெனும் ஒருவா சகத்தார்க்
கொருவாய் பெருந்தளை ஒடித்த அருமையும்
கானார் நிற்பக் காட்டும் இச்சையும்
பூணாப் பொலியும் புனிதன் பொன்மலர்
அடியென நின்ற அரவிந்த முளகாண்!
படிமீ தியாரும் பரவவும் போற்றவும்
ஞானம் மடுத்து வினையை யறுத்தே
ஆனந்தஞ் சொரியுந் தேனவை யாங்கே

இப்படி இறைவனின் எண்ணிலாப் பண்புகளை வரிசைப்படுத்திப் புனிதன் பொன்மலர் அடியென நிற்கும் தாமரை உள்ளது. அதனைப் போற்றி வணங்கின் அந்த மலர் ஆனந்தத் தேன் சொரியும். அஃது அளிப்பது உண்ண உண்ணத் தெவிட்டாத தேன். ஞானமளிக்கும் தேன். அது சித்தத்தில் தித்திக்கும் தேன். எண்ண எண்ண இனிக்கும் அத்தேன் கொள்ளக் கொள்ளக் குறையாது ஊற்றெனப் பெருகிவரும். குறைவின்றி வளரும். வண்டே! அதனைப் பாடிச் செல்லின் அந்த ஆனந்தத் தேனை அள்ளி அருந்தலாம் என்று பாடியுள்ளார்.

பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் அ.சி. பாடல் ஒன்று காணப்படுகிறது. மனத்தின் வெளிப்பாடாக அக்கவிதை வாழ்வறம் கூறுகிறது. எண்ணம் இனிதானால் எல்லாம் இனிதாகும் என்ற மையக்கருத்து இப்பாடலின் அடிநாமாக உள்ளது.

இன்பமும் துன்பமாம் துன்பமாக் கொள்ளினே;
துன்பமும் இன்பமாம் இன்பமாக் கொள்ளினே ;
துன்பமும் இன்பமும் உள்ளத்தான் அமையுமே
இன்பமே வேண்டுவோன் இன்பமே பெறுவனே
இன்பத்தை விழையானாய் இடும்பையே இயல்பென்பான்
துன்பமே வருங்காலைத் துயருறுதல் இலைகண்டாய்
வேணவாக் கொள்ளானாய் வேண்டாமை நெறி நிற்பான்
மாணவே இன்புறுவான் மனத்தினால் அதுகண்டாய்;
பகைவரே யில்லாது பழகவே வழியறிவான்
தகைதலில் இன்பமே தவறாமற் பெறுவன்காண்;
இன்னாமை யின்பமே எனமதிப்பான் தன்னையே
இன்னாமை வெல்லுதல் எஞ்ஞான்றும் இல்லைகாண்

சிந்தையாற் செல்வத்தைச் சிறப்பாகத் துய்த்திடுவான்
அந்தமில் இன்பங்கள் அடைந்திடுதல் மெய்யேகாண் எனவாங்கு.
பொன்னல பெண்ணல பொருளல ஊணல
மண்ணல மாடல மற்றவை தாமல
உண்ணிறை யுவகையே உண்மையா யின்பமாம்
எண்ணத்தால் இன்பமே எண்ணத்தால் இன்பமே
எண்ணமே இன்பமே!

வாழ்வில் உண்மையைக் கடைபிடிக்கவேண்டும் என்ற உந்தவாவினை ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இச்செய்யுள். உண்மையான இன்பம் மனிதனுக்கு எதுவெனில் உள்ளத்தில் நிறைந்திருக்கும் இன்பமே. எண்ணம் விழுமியதாக இருக்குமானால் எல்லா நன்மையும் பெறலாம். அதற்கு எண்ணம் இனிதாக இருக்கவேண்டும். எண்ணத்தால் இன்பம் பெறுவதே மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி என்பதனை வற்புறுத்துகிறது.

நன்னிலை நோக்கம் வெளிப்படுமாறு அமைந்த அச்செய்யுள். திருவள்ளுவர் கருத்தினை உள்ளடக்கியதாக உள்ளது.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்

முதலிய குறட்பாக் கருத்துகளின் பிழிவாக விளங்குவதை இப்பாடலில் கண்டறியலாம்.

## 10. ஒப்பியல் உணர்வு

அ.சி. ஒருமொழி, பிறமொழி இலக்கிய ஒப்பியல் சிந்தனை மிக்கவர் என்பதனை அவர் எழுதிய கட்டுரைகளில் ஆங்காங்கே எடுத்துக் காட்டும் கருத்துகள்வழி அறியலாம். இலக்கிய ஒப்பீடு மட்டுமன்றி, இலக்கண ஒப்புமை பற்றியும் தம் கருத்துகளை மொழியாய்வுக் கட்டுரைகள் வழி உணர்த்தியிருக்கிறார்.

'தமிழ் காட்டும் உலகு' என்ற கட்டுரையில் சங்கப் புலவர்களுள் ஒருவரான கோவூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலில் வரும் அடுதீ அல்லது சுடுதீ அறியார் என்ற தொடரும், குறுங்கோழியூர் கிழார் பாடிய 'திருவில் அல்லது கொலைவில் அறியார்' என்ற தொடரும், பிற்காலத்தில் 'வறுமை இல்லை ஒரு வண்மை இல்லையால்' என்று கம்பர் பாடுதற்கு மூலமாய் இருந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறார். அதனை ஒட்டியே, பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள 'குலைபடுவன வாழையே' என வரும் சேக்கிழாரின் தொடரையும் அவற்றோடு பொருத்திக் காட்டி விளக்கும் நுட்பம் ஒரு மொழி ஒப்பீட்டிற்கு நல்ல சான்றுகளாகும்.

முன்பனிக் காலம் பற்றிய கட்டுரையில் அக்காலத்தே தோன்றும் பனித்திவலைகள், மலரும் பூக்கள், மக்களிடம் அப்பருவத்தில் உண்டாகும் மெய்ப்பாடுகள் போன்றவற்றை ஒப்பிட்டுக் காட்டுவது எண்ணத்தக்கது.

திருக்குறளும் சிலப்பதிகாரமும் என்ற கட்டுரை ஒரு மொழி ஒப்பீட்டிற்கு வழிவகுக்கும்படியான கட்டுரையாகும்.

சங்கமன் மனைவி நீலி இட்ட சாபத்தின் காரணத்தால் கண்ணகி கோவலனை இழந்து கடுந்துயருற்றாள் என்பதைத் தெரிவித்து, முற்பிறப்பில் செய்த தீமை, மறுபிறப்பில் வந்து சேரும் என்ற கருத்துடைய 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தானே வரும்', என்ற குறளை எடுத்துக்காட்டி விளக்குவர். தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை என்ற குறளுக்குப் பலரும் பொருள் கூறியுள்ள முறையை எடுத்துக்காட்டி, தம் கருத்தாக,

'கண்ணகி திருமணம் ஆன நாள்தொட்டுக் கணவனிடத்தில் சிற்றின்பத்தில் ஈடுபட்ட நேரம் அல்லாத பிற காலங்களில், அவனைத் தலைவன்போல், கடவுள் போல் கருதிவந்தாள் என்பது ஊகிக்கப்படுகிறது.' கணவனை வழிபட்டு வந்த அவள் சொற்கள் பொன்னே போல் போற்றப்பட்டுச் செயற்பட்டன என்று கூறிவிட்டு, ஒரு பெண்மகளுடைய ஏவலைச் செய்தற்குத் தேவரும் முனிவரும் பிறரும் எவ்வாறு காத்துள்ளனர் என்பது நன்றாக விளங்கும் என்பர். அங்கியங்கடவுள் அவள் ஏவல் கேட்டு நின்ற செய்தியை இதன் பின்னணியில் வைத்துப்போற்றும் பாங்கினை அறியலாம். கோவலன் மதுரை சென்ற சூழலில் கண்ணகிக்குத் தான் தவறு இழைத்துவிட்டதை எண்ணிப் பார்த்துக் கூறிய அவன் சொற்களில் இருந்தும், கண்ணகி தன் பெற்றிமையால்

இன்முகம் காட்டியதையும் ஒரு சேரச்சீர் தூக்கி, 'இன்னாசெய் தாரை ஒருத்தல்' என்று வரும் குறளோடு இணைத்துக்காட்டுவதன் அருமையை உணரலாம். ' நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி' என வரும் சிலப்பதிகார அடிகளோடு ஒப்புநோக்கியுரைப்பதனையும் ஈங்குத் தொடர்புபடுத்துகிறார்.

கோவலன் கண்ணகியைக் குறியாக்கட்டுரை பல பாராட்டும் சூழலில் இடம்பெறும் ஐம்புலனை வருணனையைக் 'கண்டுகேட்டு உண்டு உயிர்த்து' என வரும் குறளடிகளோடு தொடர்புபடுத்திக்காட்டும் பாங்கினை எடுத்து விளக்கும் நுட்பமும் உணரத்தக்கது.

சாத்தனார் காலத்தில் திருக்குறள் செல்வாக்கு மிக்கிருந்திருக்க வேண்டும் என்று கருத்துரைப்பர். அவர் வாழ்ந்த காலத்தில் திருக்குறள் பயிற்சி நிரம்ப வந்துவிட்டமைக்குச் சான்றுகளை முன் வைப்பர். பெய்யெனப் பெய்யும் மழை என்பதைச் சான்று காட்டும் அ.சி. அதனை அழகுறப் பொருத்திக்காட்டும் நுட்பம் அவர் ஒப்பியல் கைவரப்பெற்றவர் என்பதற்குச் சான்றாகும்.

'முற்பகல் செய்தான் பிறன் கேடு தன்கேடு பிற்பகல் காண்குறூஉம்' என்ற சிலப்பதிகார அடிகளையும், அதற்குரிய நிகழ்வினையும் 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்' என்று வரும் திருக்குறளோடு ஒப்புநோக்கி உரைக்கும் திறம் நோக்கற்பாலது. கோவலனை வழிபடும் கண்ணகியின் நிகழ்வினைத் 'தெய்வம் தொழாள்' என வரும் குறளோடு பொருத்தியுரைப்பர்.

கண்ணகி கோவலனுக்காகச் சமைத்துப் பரிமாறும் நிகழ்வினைக் குறுந்தொகையில் இடம் பெறும், 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' எனவரும் பாடலோடு பொருத்திக் காட்டும் நுட்பம் அறிதற்பாலது. கண்ணகி நலத்தைப் பல படப் பாராட்டும் பாராட்டு ரையைக் குறிஞ்சிக்கலியில் இடம் பெற்றுள்ள வருணனை ஒன்றனைச் சான்று காட்டி விளக்குவர்.

பெரிய புராணத்தில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் மனைவி, கணவன் கருத்தினை நிறைவேற்றுவதாகச், செல்லும் உயிரினைத் தாங்கி நின்றாற்போல், கண்ணகியும், 'காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன், தீவேந்தன் றனைக் கண்டித் திறங்கேட்பல் யான்' எனக்கூறியதை எடுத்துக்காட்டுவதும், கண்ணகி வானுலகத்திலிருந்து மீண்ட

பிற்பாடு கூறிய கூற்றை, வானுலகத்திலிருந்து மீண்ட தசரதனிடம் இராமன் வேண்டியதாகச் சொல்லும் வரத்தோடு ஒப்பு நோக்குவதும் நோக்குதற்குரியன.

பிறமொழி ஒப்பீட்டிற்கு 'தாகூரும் தமிழிலக்கியங்களும், 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' போன்ற கட்டுரைகள் சான்றாவன. வள்ளலாரையும் தாகூரையும் ஒப்பிட்டுரைக்கும் சூழல் எண்ணத்தக்கது. உலகில் எச்சமயத்தவரும் போற்றும் கடவுள் முடிவில் ஒருவரே என்பதை இவ்விரு பெரியாரும் வற்புறுத்தியுள்ளனர். கடவுள் ஒருவரே எனினும், உபநிடதம் போன்ற இந்திய தேசத்தின் ஆன்மிக நூல்களினால் கடவுளை அடைதற்கு வழி சொல்லப் பட்டிருக்கிறவாறு மேலைநாட்டு ஆன்மிக நூல்களிற் சொல்லப்பட்டிலது எனத் தாகூர் சொல்லி இருப்பதை எடுத்துக் காட்டுகிறார் அ.சி. அது போன்றே வள்ளலாரும் எல்லாச் சாதியினரிடத்திலும், எல்லாச் சமயத்தினரிடத்திலும், எல்லா மதத்தினரிடத்திலும் பொதுமை நோக்குடையவராய் இருந்துள்ளார். இவ்விருவரையும் ஒப்புநோக்கிய பின், தாகூர் பன்மையில் ஒருமை காண விழைந்தார். பன்மையை ஒருமையாக்கிவிட நினைக்கவில்லை. அவ்வாறே, இராமலிங்க அடிகளாரும் உலகத்திலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளிடையே எவ்வாறு அன்பினால் ஒருமைப் பாட்டினை விளைக்க முடியும் என்று ஆய்ந்தாய்ந்து முயன்றவர் என இருவரையும் ஒப்பிட்டுக் காட்டுவர். தாகூர் பற்றிய கருத்தினைத் தமது நோக்கில் கண்டுரைக்கும் அ.சி.

> வைதீகமும் பழமையும் மேலிட்டிருந்த காலத்திலும் இடத்திலும் மக்களிடையே தோன்றிய அம் மாபெரு வீரர் தம் காலத்திய குறுகிய மனப்பான்மைகளுக்கு இடந்தராமல், சில வேளைகளிற் செருக்குற்ற தம் காலத்தவரோடு இகலி அன்பினாலும், கருணையுள்ளத்தாலும் தம் காலத்தைக் கடந்தவர். (செ.வே.பக்.55)

என்று தாகூரைக் கண்ணோட்டம் செய்துள்ளார்.

தாகூரின் தாக்கம் தமிழ்க்கவிதையில் செறிந்துள்ளதைப் பாரதி, கவிமணி, நாமக்கல்லார், பெரியசாமி தூரன் ஆகியோருடைய கவிதைகளிலிலிருந்து சான்று காட்டுகிறார். பாரதி தாகூரைப் புகழ்ந்துரைத்ததை எடுத்துக்காட்டித் தாகூரின் உயர்ந்த நோக்கங்கள் பாரதியாரைப் பெரிதும் ஈர்த்ததனை விளக்கியுரைப்பர். பாரதியார் கண்ணனைத் தந்தை, தாய், சேவகன், துணைவி, தோழன் எனக்கொண்டு பாடிய பாடல்களில் தாகூரின் போக்கினைக் காணலாம். 'விண்மீன்களில் கடவுளைக் காணுவதைவிட மனிதனுடைய ஆன்மாவில் கடவுளைக் காணலாம்' என்று தாகூர் சொன்னதற்கேற்ப, பாரதியும் எழுதுகோலிலும், எழுத்திலும் இறைவனைக் காணலாம் என்று சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டி இருவரையும் ஒப்பியல் வழி நின்று உணர்த்துவர். மேலும், ஆணிலும் பெண்ணிலும் உள்ள ஆன்மா ஒன்றே என்ற பண்டைய உண்மையைத் தாகூரும், பாரதியாரும் தம் காலத்தில் புது மெருகிட்டு மக்களிடையே உணர்த்தியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். தாகூர் கவிதைகள் சிலவற்றைக் கவிமணி மொழிபெயர்த்திருப்பதனைச் சுட்டிக் காட்டுவர். கவிஞன் கனவு என்ற தலைப்பில் நாமக்கல் கவிஞர் பாடியுள்ள ஆறு பாடல்களில் தாகூரின் போக்கு தென்படுவதை விளக்குவர். பெரியசாமி தூரன் தாகூரின் தாக்கம் பெற்றவர் என்பதற்கான கருத்தையும் முன்வைப்பர்.

நாட்டுப்புறக் கதைகளான அல்லியரசாணி. புலந்திரன் களவு மாலை. பவளக் கொடி மாலை போன்றவற்றை ஒப்பிட்டுக் கட்டுரைகள் எழுதியுள்ளதையும் ஒப்பியல் தொடர்பாகச் சிந்திக்கலாம். பழமொழிகளையும் அவ்வாறே விரிந்த அளவில் ஒப்பிட்டுரைப்பர்.

கோவலன் கொலையுண்டபோது அவன் உள்ளம் எந்த அளவு துன்புற்றிருக்கும் என எண்ணிப்பார்த்து.சீசரைக் கொலைசெய்த சூழலோடு ஒப்பு நோக்குகிறார்.

'சீசரின் உள்ளமும் உயிரும் எவ்வாறு துடித்திருக்கும்?அவ்வாறுதான் கோவலனும் துடித்திருப்பான்' என்று ஒப்புநோக்குவர்.

தம் பிழை அறியாது அடுத்தவர் மீது பிழை காண்பது தீது என்பதை விளக்கி வரைந்த ஒரு கட்டுரையில் அ.சி. பைபிளில் இடம் பெற்றுள்ள புனித மாத்யூவின் கருத்தினை எடுத்தாண்டு விளக்குவர்.

பருவம் குறித்துச் சங்க இலக்கியச் செய்திகளைத் தொகுத்துக்கூறும் பேராசிரியர். ஞாயிறு வருத்தும் கோடையைப்பற்றி எழுதும்போது. ஆங்கிலக் கவிஞன் ஜேம்ஸ் தாம்சனின் ஜிலீமீ ஷிமீணீவஷீஸீ என்ற கவிதையில் இடம்பெறும் காட்சியையும். காளிதாசன் இருது சம்ஹாரத்தில் வரும் வருணனையையும் ஒப்புநோக்கிக் கூறுவர்.

கம்பன் படைத்த கைகேகி. சனகன் ஆகியோரின் மனப்போராட்டங்களை உளவியல் வழி விளக்கும் விதம் பேராசிரியரின் மேலை நாட்டுத் திறனாய்வுத் திறத்திற்குச் சான்று பயக்கும். கம்பர் தாம் எடுத்துக்கொண்ட காவியத்தில் மாந்தர்களின் மன நிலையை நன்கு அறிந்தவர் என்பதனைக் கைகேகிக்கு இரு வரங்களை அளித்த சூழல் வழி விளக்குவர். கருதியது முடிக்கும் எண்ணத்தில் கைகேகி வெற்றி பெறுவதும். தசரதன் தான் வாக்களித்த வரத்தால் இடருறுவதும் கம்பரால் உளவியல் பட எவ்வாறு சொற்சித்திரமாகத் தீட்டியுள்ளார் என்பதனை அறியலாம். அவள் தன்னைத் தாழ்த்திக்கொண்டு தயரதனைப் புகழ்ந்து பேசுகிறாள். பதினான்கு ஆண்டுகள் இராமன் காடேகவேண்டும் என்ற செய்தியை மறைந்து நின்று சொல்லாமல். சொல்லிவிட்டு ஓடாமல் சொன்ன இடத்து துணிவாக நின்றாள். இதனைப் புகன்று நின்றாள் என்ற தொடரால் கம்பர் உணர்த்துகிறார். மன்னனிடத்துச் சொல்லிய அளவில் அவளிடத்து அச்சமில்லை; நாணமுமில்லை. உள்ளம் நையவில்லை. மரம் போன்ற நெஞ்சம் பெற்றவளானாள். புரளுதலும் புலம்பலுமே தயரதனிடம் காணப்பட்டன. கொடியள் என்று சொல்லிவிட்டு. ஒரு நிமிடம் மனம் ஊசலாடுகிறது. உண்மை என்ற ஒன்று இருப்பதாலன்றோ அதனைத் தான் பாதுகாக்க வேண்டியுள்ளது. இங்கேதான் அவனது மனப்போராட்டம் காட்டப்படுகிறது. அவளிடம் இரக்கிறான். தந்த வரத்தைக் கேட்டல் அறமன்று என்று வாதாடுகிறாள். பின்னும் அவன் உள்ளம் தடுமாற. கோபத்தால் சுரப்பிகள் செயலற்றன. உண்மையைப் பாதுகாக்கவேண்டி. சொன்ன சொல்லைப் பாதுகாக்கவேண்டியுள்ளதே என்று மாய்கிறான். விருப்பமில்லாத ஒன்றைச் செய்துவிட்டோமே என்று மனத்தைத் திடப்படுத்தவேண்டியவனாகிறான். ஒரு பக்கம் மகன் மேல் கொண்ட பாசம். மறுபுறம் கைகேகி மீது கொண்ட கோபம். இது கம்பர் விளக்கும் மாந்தரின் மன ஓவியம் என்று கட்டுரையாசிரியர் சுட்டிக்காட்டுவர்.

பாரதிதாசன் கவிதையில் மிகுந்த ஈடுபாடு மிக்கவராக அ.சி இருந்துள்ளார் என்பது அழகின் சிரிப்பு என்ற கட்டுரைவழி அறியமுடிகிறது. அழகின் சிரிப்பு என்ற கவிதை குறித்து யாதொன்றும் கூறாமல். அத்தலைப்பைக் குறியீடாக்கிப் பாரதிதாசனின் மற்ற

கவிதைகளை எடுத்துக் காட்டித் திறனாய்கிறார். பாரதிதாசன் கவிதைகளில் காணலாகும் மொழிப்பற்று, பெண் விடுதலை, சமூகச் சிந்தனை முதலானவை புத்திலக்கியத்திலும் அ.சி. ஆர்வம் கொண்டிருந்ததைப் புலனாக்கும். .

பேரறிஞர் வ.சுப. தம் ஆசிரியரைப் பற்றிக் கூறியிருப்பதோடு கட்டுரையை நிறைவு செய்யலாம்.

> தமிழ் வன்மையோடு ஆட்சித் தனி வன்மையும் வாய்ந்தவர்; அலுவற் கூறுகளைச் செப்பமாகப் போற்றிக் கொள்வர்; அடுக்காக வகுத்துக்கொள்வர். காலம் போற்றிக் காரியம் முடிப்பர்; உடையிலும் சொல்லிலும் ஒழுக்க வழக்கங்களிலும், மொழிமரபிலும் நட்பு முறையிலும் அறிஞர் சிதம்பரனார் தமிழ் நெறிஞராக மதிக்கத்தக்கவர்'

- என்ற அவரது கூற்று உண்மையாக நிலவியிருந்ததைக் காட்டுகிறது.

அ.சிதம்பரநாதர் அவர்கள் நின்ற சொல்லர்;நீடு தோன்றினியர்'. சொலல்வல்லராக இருந்து சோர்விலராகி, அறம் வழுவாத சிந்தையராகவும், யார்க்கும் பிறக்கிடாத துணிந்த நெஞ்சினராகவும் இருந்து, 'அடங்கி வாழ்; பிறர் அடக்க இடங்கொடுத்து விடாதே' என்ற உரஞ்சான்ற உணர்வை வெளிப்படுத்திய புகழுக்குரியராக விளங்கிய பெருந்தகை அ.சி. அவர்களை இந்தத் தலைமுறையினர் அறியவேண்டும். அவரையும், அவரைப் போன்ற தமிழறிஞர் பிறரையும் இன்றைய தமிழுணர்வுடையோர் அனைவரும் அறிய வேண்டும் என்பது என் போன்றோரின் உள்ளக்கிடக்கையாகும்.

## குறியீட்டு விளக்கம்

### அ.சிதம்பரநாதர் நூல்கள்

| | | |
|---|---|---|
| க.கொ | - | கட்டுரைக்கொத்து |
| பெ.ம | - | பெரியார்மன்றோ |
| மு.ப. கா | - | முன்பனிக்காலம் |
| உ.உ.ஒ | - | உழைப்பால் உயர்ந்த ஒருவர் (புக்கர் தி வாஷிங்டன்) |
| த.ஓ | - | தமிழோசை |
| த.கா.உ | - | தமிழ் காட்டும் உலகு |
| வீ.தி | - | வீட்டுத் திருமகள் |
| ம.அ | - | மன்னுயிர்க்கு அன்பர் |
| சி.க | - | சிறுகதைக்களஞ்சியம் |
| இ.இ | - | இளங்கோவின் இன்கவி |
| செ.வே | - | செங்கோல் வேந்தர் |
| த.சி.தோ.வ | - | தமிழ்ச்சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் |

## நூலாசிரியர் சுருக்கக் குறியீடு

| | | |
|---|---|---|
| அ.சி | - | அ.சிதம்பரநாதர் |
| அ.மாதவய்யா | - | அ.மா |
| அரு.சோ | - | அரு சோமசுந்தரம் |
| டி.என். சே. | - | டி.என்.சேசாசலம் |
| பு.வி | - | புவியரசு |
| எஸ். டி | - | துரைசாமி |
| வி. இ | - | விரிசை இளங்குமரன் |

## அ.சி. பற்றி வெளிவந்த நூல்கள்

**செந்தமிழ்க்காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம் - சே.வைத்திலி** தமிழ்ப்பல்கலைக்கழகம். (1989)

**செந்தமிழ்க்காவலர் சிதம்பரநாதனார்-கோ.சிவகுருநாதன்(1993)**

**அ.சிதம்பரநாதசெட்டியார்** - வேலுச்சாமி- சாகித்திய அகாதெமி(2005)

**செந்தமிழ்க்காவலர் சிதம்பரநாதன் செட்டியார் வாழ்வும் படைப்புகளு** பதிப்பு- தமிழ்ப்பல்கலைக் கழகம் (2007)

## மலர்கள்

அ.சிதம்பரநாதர் மணிவிழா மலர்- தியாகராயர் கல்லூரி. மதுரை.(1967)

டாக்டர் அ.சிதம்பரநாதர் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா மலர் - சிதம்பர பேரவை - குடந்தை(1988).